# கவி. தஞ்சை. ராமையா தாஸ்
# திரைப்பட பாடல் திரட்டு

தொகுப்பு

தி. ரா. ரவீந்திரன். D.E.F.I.

நந்தா பதிப்பகம்
தஞ்சை. ராமையா தாஸ் தோட்டம்
41/62. துரைசாமி சாலை
வடபழனி - சென்னை - 600026.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.



திருவள்ளுவர்

உரிமையாளரின் அன்புரிமை பெற்றது.

" தெள்ளு தமிழில் திருக்குறள் தந்ததிரு
வள்ளுவனார் பாதம் வழுத்து. "

உ

# கவி. திருச்சி. ராமையா தாஸ்

B

மண்ணாரும் சோழ மண்டலத்திலே,
சிற்றாற் நீர் திருச்சி கடைத் தெருவாம்
மாணம்புச் சாவடியில் நாராயண சாமி
நாயனாருக்கும் - பாப்பு அம்மாளுக்கும்
அய்யன் அவதரித்த வள்ளுவ குலத்தில்
05-06-1914-ம் ஆண்டு தலைமகனாகப்
பிறந்தார். பத்தாவது வரை படித்து விட்டு,
ஆசிரியப் பயிற்சி பெற்றார். தமிழ் மீதுள்ள
காதலால் இயற்கையிலேயே கவிபாடும் ஆற்றல்
இளமையிலேயே கைவரப் பெற்றதால், கரந்தை
தமிழ்க் கல்லூரியில் "வித்வான்" பட்டம்
பெற்றார். திருச்சி சரபோஜி ராஜாவின் அரண்-
மனையில் நடக்கும் தமிழ்க் கவிஞர்கள்
பாட்டெழுதும் போட்டியில் கலந்து கொண்டு
அக்காலத்தே தங்கமெடல் பரிசு பெற்றவர்.
சுதந்திர வேட்கையும்... காந்தியத்தின்
மீது பாசம்... தீண்டாமை ஒழிப்பில் முனைப்பும்
இருந்த காரணத்தால் மேல் வருணத்தார்களால்
ஆசிரியப் பணியை இழந்தார். ஆசிரியப் பணி
செய்யும் காலத்திலேயே நாடகத்துறையில் நாட்டம்
செலுத்தியதால், ஒரு நாடகக் குழுவில் இணைந்தார்
சபாவில் "வாத்தியாராக" சேர்ந்து கொண்டு.
நாடகக் கதை, வசனம், பாடலாசிரியருக்கு
வாத்தியார் என்று பட்டம். பின்னர் தாமே
'ஜெயலட்சுமி கானசபா' என்ற நாடகக்
கம்பெனியை துவக்கி மச்சரேகை, பக்கா,
பவளக் கொடி, வீரியின் வெற்றி, அல்லி அர்ஜுனா,
வள்ளித் திருமணம் போன்ற நாடகங்களை
நடத்தி வந்தார். பின்னாளில் நடிகர், இயக்குனர்,
தயாரிப்பாளர் என்று வளர்ந்து அடைந்த A.P.
நாகராஜன் இவரின் நாடக சபாவில் சிஷ்யன்,
நடன இயக்குனராக இருந்துள்ளார். ஊர்,
ஊராக போய் நாடகங்களை போட்ட அவரை
ராமசாமி பாவலர் என்பவர் சென்னையில் முகாம்
போட அழைத்து வந்தார். சென்னை முகாமில்
அறிஞர் அண்ணாவின் நாடகக் குழு. கே.ஆர். இராம,
வேலைக்காரி போன்ற சிறந்த நாடகங்கள்,
அவரது பார்வையில். இடை இடையே சினிமா-
படங்களுக்கும் பாடல்கள் எழுதி வந்தார்.
"ஒரு ஜாண் வயிறே இல்லாட்டா-இந்த
உலகத்திலே ஏது கலாட்டா"
"ஊசிப்பட்டாசே வேடிக்கையாத்
[illegible]"

சேலம் மார்டன் தியேட்டரில் இருந்து அழைப்பு வந்தது. ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி படத்தில் "வெச்சேன்னா வெச்சது தான்- புள்ளி வெச்சேன்னா வெச்சது தான்." அங்கு நடந்துக் கொண்டிருந்த பிரபல கதா-நாயக நடிகர் டி. ஆர். மகாலிங்கம் இவரது மச்சரேகை நாடகம் 200 நாட்களை தாண்டி வெற்றிகரமாக நடந்து கொண்டிருப்பதைக் கண்டு அதை தமது கம்பெனிக்காக திரைப் படமாக தயாரிக்க முன் வந்தார். தஞ்சையாரை சென்னைக்கு அழைத்து வந்தார். விஜயா-வாகினி நிறுவனத்தில் நுழைய வாய்ப்பும் கிடைத்தது. 1951 முதல் 1960 வரை அந்த நிறுவனம் தயாரித்த பாதாள பைரவி, மிஸ்ஸியம்மா, மாயாபஜார் போன்ற படங்கள் உள்பட அனைத்து படங்களுக்கும் வசனம் பாடல்கள் எழுதி ஆஸ்தான கவிஞர் ஆனார்.

ஒரு சமயம் இயக்குனர் ஸ்ரீதர் தனது "அமரதீபம்" படத்துக்கு பாடல் எழுதி வாங்க வந்தார். சிச்சுவேஷன் கேட்ட தஞ்சையார் "நம்பினா நம்புங்க, நம்பாகாட்டி போங்க" என்று பல்லவி சொன்னார். பதறிய ஸ்ரீதர் 'வாத்தியாரையா இது எனது முதல் படம், முதல் பாட்டு வேற". பாட்டு கேட்டு படம் வாங்காம போய் விடுவாங்களே/ வேற எதாவது ஜாலியாக ஒரு பாட்டு எழுதிக் கொடுங்க என்று கேட்க "ஜாலிலோ ஜிம்கானா, டோலிலோ கும்கானா" என்று எழுதிக் கொடுத்தார். அதற்கு விளக்கம் கேட்க விளக்கமும் சொல்லிக்கொடுப்பது இது குறத்தி பாடற பாட்டு. குறவர்கள் பேசும் பாஷை எனக்கும் தெரியாது. உனக்கும் புரியாது. போய் ரிக்கார்டிங் செய். அமோகமாக வெற்றி பெறும். என்று வாழ்த்தி அனுப்பினார். ஆதாரம் ஸ்ரீதர் சென்னை வானொலியில் பேட்டி. அந்தப் பாடல் தஞ்சையாரை டப்பாங்குத்து பாடலாசிரியர் என்ற எளனமான பட்டத்தையும் தந்தது. அதற்கெல்லாம் கலங்காத அவர் ஏராளமான பாடல்களை பாமர மக்களும் பாடி மகிழும்படி எழுதி தள்ளினார்.

கவி. தஞ்சை. ராமையாதாஸ் காங்கிரஸ் அனுதாபியாக இருந்தார். பெருந்தலைவர் காமராஜ், பெரியவர் கக்கன் போன்றவர்கள் கட்சி ஆலோசனைகளை தம் இல்லத்தில் நடத்தி உதவினார். பல பொதுக் கூட்டங்கள் நடத்தின-யும் அரசியலில் நுழைந்துக் கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தார். அவர் விரும்பி இருந்தால் ஒரு மந்திரியாக ஆகி இருக்க முடியும். ஆனால் அவர் அரசியலை விரும்பவில்லை, தஞ்சையாரின் கவித் திறமையை அறிந்து கலைஞர் தமது மேகலா

பிக்சர்ஸ் தயாரித்து வந்த "குறவஞ்சி" என்ற படத்துக்கு பாடல்கள் எழுதி அமைத்தார். அந்த சமயம் தான் இருக்கும் சூழ்நிலையினை வைத்து "எந்நாளும் திண்ணியிலே எங்க பொழப்பு இருக்கு ரா... ரா... ரா..." என்று எழுதி மேலும் சில பாடல்களையும் குறவஞ்சியில் எழுதினார். எஸ். எஸ். ஆரும் வந்து தமது "தங்கரத்தினம்" படத்துக்காக பல்லவியில் உதயசூரியன் என்னும் வரி வரும்படி கேட்டுக் கொண்டார். "எதையும் தாங்கும் மனசு, என்னை மொத்தப் பாக்குது வயசு என் இதய வானிலே உதயசூரியன் எழுந்தது தான் புதுசு" என்று எழுதித் தந்தார். கவியரசு கண்ணதாசன் அண்ணார் ஸ்ரீனிவாசன் கூட தம் படத்துக்கு பாடல் எழுதும்படி தஞ்சையாரைக் கேட்டுக் கொண்டார்.

வசனம், பாடல்கள் எழுத தஞ்சையார் நேரம், காலம் பார்ப்பதில்லை. இடு வர ஓட்டல், லாட்ஜ் தேடி ஓடுவதும் இல்லை. தம் வீட்டு ஊஞ்சலில் உட்கார்ந்துக் கொண்டு வெற்றிலை, பாக்கு, புகையிலை குதப்பிய வாயில் வரும் வார்த்தைகளே வசனங்கள், பாடல்கள். டப்பிங் படங்களுக்கு நிறைய வசனங்கள், பாடல்கள் எழுதி இருக்கிறார். டப்பிங் படங்களுக்கு முன்னோடி தஞ்சை. ராமையா தாஸ். ஆரூர் தாஸ் அவருடைய சீடர்.

ஒரு நாள் காலை இயக்குனர் டி. ஆர். ராமண்ணா தஞ்சையாரை சந்தித்து தமது ஆர். ஆர். பிக்சர்ஸ் சார்பாக புதுப் படத்துக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தஞ்சையாரும் ஓர் அவுட்லைன் சொல்ல ராமண்ணா மகிழ்ச்சி அடைந்தார். தமது தமக்கை டி. ஆர். ராஜகுமாரியிடம் சொல்லி இருவரும் ராமாவரம் தோட்டம் போய் எம். ஜி. ஆரை சந்தித்து கதையை சொல்ல அவரும் ஓ.கே. சொல்லி விட்டார். அன்று மாலையே தஞ்சையாரை சந்தித்த ராமண்ணா விஷயத்தை கூறி தனது 'தூக்குத் தூக்கியில் ராமையா தாஸ் எழுதி பாப்புலரான பாடலான 'ஆனந்தக் கோனாரே அறிவு கெட்டுத் தான் போனாரோ' போல ஒரு பாடல் மறுநாள் ரெக்கார்டிங், பூஜைக்கு வேண்டும் என்றார். உடனே பல்லவி பிறந்தது. "சொக்காப் போட்ட நவாபு, செல்லாது உங்க ஜவாபு" படம் குலேபகாவலி! ஒரே வாரம் கதை, வசனம், பாடல்கள் எழுதி விட்டார். அதில் வரும் அறிவுப் போட்டி வசனங்கள் பலரையும் வியக்க வைத்தது. ஆதாரம்: பேசும் படம் மாத இதழில் டி. ஆர். ராமண்ணா

அக் காலத்தே - கதை, வசனம், பாடல்கள் ஒருவரே என்ற நிலையைத் துவக்கி வைத்த முதல் கவிஞரே இவர்தான். நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகளை தமிழ் நாட்டுக்கு ... ... அறிமுகம் செய்வித்தவரே தந்தையார் தான். சுவாமிகளின் நாடகக் குழுவில் 'பபூன்' வேடமிட்ட பபூன் சங்கரய்யரை கடைசி வரை ஆதரித்தார். அவர் மூலம் கிடைத்த ஒரு சிறு படத்தைப் பெரிதாக வரைந்து தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் என்று பெயரிட்டு தமது வீட்டின் கிரகப்பிரவேச சமயம் ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதரின் கச்சேரியில் திறந்து அறிமுகம் செய்தார். சங்கரதாஸ் சுவாமி-களின் சமாதி ஆன இடத்தை பாண்டிச்சேரியில் கண்டு பிடித்து மறைந்த கம்யூனிஸ்ட் தோழர், மூத்த திரு. சுப்பையா துணையுடன் குருபூஜை நடத்தி தான் சங்கரதாஸ் சுவாமிகளின் 'ஏகலைவன்' என்று அழைத்துக் கொண்டார்.

ஒரு முறை ஒரு பத்திரிகையில் இவரைப் பற்றி அசிங்கமாக ~~எழுதி~~ இவரது பாடல்களை விமர்சனம் செய்து எழுதி இருந்தனர். அந்த பத்திரிகையாளரை அழைத்தார். உபசரித்தார். "தம்பி நளவெண்பா, எண்சீர் விருத்தம், கலித்துறை இப்படி எனக்கும் எழுதத் தெரியும். ஏத்தம் இறைக்கிறவன் ஏலேசா பாடாமல் கண்டார் குழல் விண்டாட என்றா பாடுவான். நாலணா டிக்கட் வாங்கி தரையில் உட்கார்ந்து படம் பாக்கிறானே அவனை குஷிப் படுத்தவே நான் பாட்டு எழுதுறேன். அதுக்குத் தான் துட்டு கொடுக்கிறான். நான் எழுதுகிற பாட்டு ஏழை என் பாட்டுக்கு அவர்கள் தாளம் போடுகிறார்கள். எனக்கு அதுதான் சந்தோஷம்" என்று விளக்கி அனுப்பி வைத்தார்.
ஆதாரம்: 'தந்தை அளரும் சிந்தை' - எம். எஸ். நாராயணன் கட்டுரை.

"ஆளைக் கண்டு மயங்காதே!" - டப்பிங் படம் சொந்தமாக ரிலீஸ் செய்தார். பிறகு கூட்டாக சேர்ந்து "லலிதாங்கி" என்ற படம் எடுத்தார். எம். ஜி. ஆர் - பானுமதி ஜோடி. பத்தாயிரம் அடிகள் வளர்ந்த நிலையில் சில பிரச்சனைகளால் படம் தடை பட்டது. உடனே சிவாஜியை வைத்து "ராணி லலிதாங்கி" என்று பெயர் மாற்றம் செய்து ரிலீஸ் செய்தார். பலத்த நஷ்டம். மேலும் பல மனக்கசப்புகள். தான் உப்பிட்டவர்களே தன்னை ஓரம் கட்டிய கவலை. திரை உலகை வெறுத்தார். சர்க்கரை வியாதியாலும் அவஸ்தைப் பட்டார்

இருப்பினும் அஞ்சலி தேவி வேண்டிக் கொண்டதற்கு இணங்க "அடுத்த வீட்டுப் பெண்" படத்துக்கு வசனம், பாடல்கள் எழுதித் தந்தார்.

1948 முதல் 1960 வரை என்ற குறுகிய கால கட்டத்தில் அவரது பாடல்கள் இல்லாத படங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். சுமார் 200 படங்களில், 100 படங்களுக்கு வசனம் பாடல்கள். சுமார் 600 பாடல்களுக்கு மேல் எழுதினார். இவரது பல பாடல்கள் அடுத்த கவிஞர்கள் பெயரில் ஒலி பரப்பு ஆகின்றது. ஆரம்ப பாடல்களின் வரிகள் கிடைக்கவில்லை. இன்றும் வானொலி, தொலைக்காட்சிகளில் தஞ்சை ராமையாதாஸ் பாடல்கள், படங்கள் ஒலி, ஒளிபரப்பாகின்றன

கவி. தஞ்சை. ராமையா தாஸ் தமது அந்திம காலத்தில் வருவாய் தரும் திரைப்பட பாட்டுக்களை ஒதுக்கி வைத்து விட்டு திருவள்ளுவர் கொண்ட காதலால் "திருக்குறளை பல்லவியாக வைத்து [ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒரு குறள் வீதம்] அதற்கு அநுபல்லவி, சரணம் எழுதி ஸ்வரம் சாகித்தியம் அமைத்து "திருக்குறள் இசை அமுதம்" என்னும் இசை நூலை 1962ம் வருடம் நடிகர் சங்கத் தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். மூலமாக வெளியிட்டார். மு. வரதராசனார் முகவுரையுடனும், எம்.எம். தண்டபாணி தேசிகர் அணிந்துரையுடனும் வெளிவந்த "திருக்குறள் இசை அமுதம்". என்னும் இசை நூல் இன்று கவனிப்பாரற்று நிலையில் முடங்கிக் கிடக்கிறது.

தஞ்சையார் மரணப் படுக்கையில் இருந்த பொழுது அவரை சந்திக்க வந்த உடுமலை நாராயணகவி, ஏ.எல். நாராயணன் இருவரிடமும் "கவிஞரே நான் பாட்டு எழுதவே, என் பாட்டுக்கு எழுதினேன். அதை ரசித்தவர்களும் உண்டு. விமர்சித்தவர்களும் உண்டு. நான் இறந்து விட்டால் என்னுடைய "திருக்குறள் இசை அமுதம்" நூலை திருவள்ளுவருக்கும், தமிழன்னைக்கும் காணிக்கையாக செலுத்தி விடுங்கள்" என்று கண்ணீர் விட்டபடி கெஞ்சினார். 15-01-1965 வள்ளுவர் தினம் அன்று வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் இறைவனடி சேர்ந்தார். அவரது இறுதி ஊர்வலம் போலீஸ் வண்டியில் அரசு மரியாதையாக கொண்டு செல்லப்பட்டது. அப்போது போலீஸ் மந்திரியாக இருந்த பெரியவர் ஓ. கக்கன் இடுகாடு வரை நடந்தே சென்று தமது இறுதி அஞ்சலி செலுத்தினார்.



கவிஞர். தஞ்சை ராமையாதாஸ்

(1914 - 1965)

# கவி. தஞ்சை. ராமையாதாஸ் ஒரு முன்னோடி

"மோட்சம் இருக்குதா இல்லையா என்ற
சூட்சமத்தை இங்கு தெரிந்து சொல்ல
முன்னாலே போனவனும் திரும்பலேடா
பின்னாலே போறவனும் திருந்தலேடா"

தஞ்சை. ராமையாதாஸ் விக்கிரக ஆராதனைக்காக எந்த கோவிலுக்கும் போய் வழிபட்டதில்லை. வடபழனி முருகன் கோவில் திருப்பணிக்காக பண உதவி செய்திருந்தாலும் தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ளாத முன்னோடி.

திரைப்படங்களில் கதை, வசனம், பாடல்கள் ஒருவரே என்னும் வழிமுறையையும் டப்பிங் படங்களுக்கு வசனம், பாடல்கள் என்னும் வகைமுறையையும் வெளிப்படுத்திய முன்னோடி ஃ எல்லாவற்றிற்கும் மேலாக.........

நிலா நானூறு நூல் தொகுப்பில் ~~நிதம்~~ தென்றலிலே பேசும் வெண்ணிலவே-கண் பேசும் வெண்ணிலவே"- என்று நிலாவை பாடி திகட்டல் வென்ற முன்னோடி.

டாக்டர் கலைஞர் காலத்தில் தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கும்பகோணம் வேணுகோபால் சர்மா அவர்களால் வரையப்பட்ட திருவள்ளுவர் படத்தை 1962ம் ஆண்டில் "தமது திருக்குறள் இசையமுதம்" நூலில் ~~[illegible]~~ வெளியிட்ட முன்னோடி.

டாக்டர் கலைஞரால் திருவள்ளுவர் தினம் என்று அறிவிக்கப்பட்ட தினத்தில் 15-1-1965 இல் இயற்கை எய்திய முன்னோடி.

சுதந்திர போராட்ட தியாகிகட்கு அரசு மரியாதை என்பதாக டாக்டர் கலைஞர் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பே அப்போதைய போலீஸ் மந்திரி பெரியவர் கக்கன் கலந்து கொண்டு அரசு மரியாதையுடன் போலீஸ் வாகனத்தில் இறுதி பயணம் பெற்ற முன்னோடி

~~கன்னியா குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிறப்பு விழாவில் கடவுள் வாழ்த்து பாடிய டாக்டர். சிவ சிதம்பரம் தந்தை சீர்காழி கோவிந்தராஜன் அவர்களை தம்முடைய திருக்குறள் இசையமுதம் அரங்கேற்ற நாளில் கடவுள் வாழ்த்து பாட வைத்த முன்னோடி.~~

ய்.....

~~இசைக்கருவிகள் இல்லா [illegible]~~

இன்றைய குத்து பாடல்களுக்கு அன்றே வித்திட்ட ஒரு முன்னோடி.

1. ஆண்டாள்
2. நந்தனார்
3. சாயா
4. சிவகாமி 51 சம்சாரம் வனசுந்தரி
5. போஜன் 48
6. இழந்த காதல்
7. கிருஷ்ணலீலா
8. சிறிய சங்கர் 50
9. பெண் 54 வளையாபதி 52
10. வானரதம் மூன்று பிள்ளைகள் 52
11. கிரிபதி (பழைய)
12. மோகினி
13. மணமகன்
14. மணமகள்
15. [illegible]
16. மகேஸ்வரி
17. மல்லீஸ்வரி
18. மாலா ஒரு மங்கல விளக்கு
19. கோமதியின் காதலன்
20. மாரியம்மன்
21. தேவ மனோகரி
22. சண்டிராணி 53
23. கிருஷ்ண விஜயம்
24. பத்தினி தெய்வம்
25. பணக்காரி 53
26. நம் குழந்தை
27. சொப்பன சுந்தரி
28. வீட்டுக்காரி
29. ஆதித்தன் கனவு 48
30. பெண் மனம் 52
31. நல்லவன் (பழைய)
32. மாய மோகினி
33. புது வாழ்வு
34. ஜெய சிம்மன்
35. ராஜ முக்தி
36. ஜாதகம் 53
37. வருசம் 53
38. நல்ல தம்பி (பழைய)
39. [illegible]
40. அன்பு 54
41. திகம்பர சாமியார் 49
42. மனோன்மணி
43. 1000 தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி 49
44. எல்லாம் இன்ப மயம் (ப)
45. அந்தமான் கைதி
46. [illegible] தாய்
47. மகன் யார்
48. தர்ம தேவதை
49. ஆரவல்லி, அமுதவல்லி 57
50. மச்ச ரேகை 50
51. ராஜா மலய சிம்மன்
52. பாதாள பைரவி 51
53. சதாரம் 56
54. சந்திரஹாரம் 54
55. செல்லப் பிள்ளை 55
56. கோடீஸ்வரன் 55
57. மாமன் மகள் 56
58. காவேரி 56
59. நானே ராஜா
60. அலிபாபாவும் 40 திருடர்களும் 56
61. அனார்கலி 56
62. ஜெகதலப் பிரதாபன் 56
63. மாயா பஜார் 57
64. பிரேம பாசம் 56 (ப)
65. மலைக்கள்ளன் 54
66. பெண்ணின் பெருமை 56
67. மிஸ்ஸியம்மா 55
68. கல்யாணம் பண்ணிப் பார் 52
69. வழுவுக்கு வளைகாப்பு 55
70. இரண்டுக் கிளி 54
71. குணசுந்தரி 55
72. வாழ்க்கை ஒப்பந்தம் 57
73. மணம் போல் மாங்கல்யம் 53
74. மாங்கல்ய பாக்கியம் 58
75. [illegible] 53
76. பானை பிடித்தவள் பாக்கியசாலி 58
77. பாக்கியவதி 57
78. நான் வளர்த்த தங்கை 57
79. மருத நாட்டு இளவரசி (பழைய)
80. மங்கையர் உள்ளம் மங்காத செல்வம் 57

81. தூக்குத் தூக்கி 54
58 82. கடன் வாங்கி கல்யாணம்
83. நீலமலைத் திருடன் 57
84. விக்ரமாதித்தன்
85. எல்லோரும் இந்நாட்டு மன்னர்
86. மர்ம வீரன்
87. புனர்ஜென்மம்
88. நீடு வாழ்ந்தால் கோடி நன்மை
89. சொர்க்க வாசல்
90. தாய்க்குப் பின் தாரம் 56
59 91. மக்களைப் பெற்ற மகராசி
92. பணம் பதித்தும் பாரு 54
59 93. எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மி 58
94. மர்மயோகி
95. [illegible] 52
96. மாதர் குல மாணிக்கம்
97. பாக்தாத் திருடன்.
98. பாசவலை 56 (பழைய)
99. அமரதீபம் 56
100. தேவைபகாவலம் 58
101. மஞ்சள் மகிமை
102. அம்பிகாபதி 57
103. நாட்டிய தாரா 57
105. புதையல் (கண்டு ராஜா நாடகம்) 57
57 106. கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி
107. மதுரை வீரன் 56
108. உத்தம புத்திரன் 58
109. ராணி சம்யுக்தா
58 110. ஆனைக் கண்டு மயங்காதே
111. அல்லி பெற்ற பிள்ளை
112. ஆட வந்த தெய்வம்
113. ரம்பையின் காதல் 56
114. மணாளனே மங்கையின் பாக்கியம் 57

115. ராணி லலிதாங்கி 57
116. இரு சகோதரிகள் 57
117. குறவஞ்சி 59
118. மகாதேவி 57
119. தங்க ரத்தினம்
120. வணங்காமுடி 57
121. புதுவாழ்வு 57
122. அன்பு எங்கே 58
123. சாரங்கதாரா
124. கற்புக் கரசி
125. சக்ரவர்த்தி திருமகள் 57
126. இரு மனம் கலந்தால் திருமணம்
127. அதிசயத் திருடன் 58
128. தெய்வப் பிறவி
129. தங்க மனசு தங்கம்
130. திருமணம் 58
131. புதுமைப் பித்தன் (பு) 57
132. கவலை இல்லாத மனிதன்
133. காவேரியின் கணவன் 59
134. ஹரிச்சந்திரா (பு)
135. எதையும் தாங்கும் இதயம்
136. மூன்று பெண்கள்
137. காத்தவராயன் 58
138. தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை 57 (பொற்கை பாண்டியன் நாடகம்)
139. பட்டினத்தார் 59
140. ராஜா தேசிங்கு 59
141. விஜயபுரி வீரன் 59
142. பூவள்ளி (புதியது) 59
143. மனிதன் மாறவில்லை 60
144. அத்தை வீட்டுப் பெண் 60
145. கல்யாணிக்கு கல்யாணம்
146. கதாநாயகி 55
147. உத்தமி பெற்ற ரத்தினம்
148. ராஜமகுடம் 149 இருவர்
150. வாழ வைத்த தெய்வம்
151. நான் கண்ட சொர்க்கம்
152. இல்லறமே நல்லறம்
153. பலராமன்

## தொகுப்பாளரின் தொகுப்புரை



திரு. ரா. ரவீந்திரன்
பிலிம் எடிட்டர்

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல் — குறள்.

நான் பள்ளி சென்ற நாட்களை விட என் தந்தை, திருசை. ராமையா தாஸ் அவர்களின் கரம் பிடித்து சினிமா ஸ்டுடியோ சென்ற நாட்கள் தாம் அதிகம் அப்படி சென்ற நாட்களில் எனக்குத் தெரிந்தவர்களை விட என்னைத் தெரிந்தவர்கள் தாம் அதிகம்.

தினம் ஒரு திருக்குறள், பொருளுடன் சொல்லிக் கொடுப்பார். மனப்பாடம் செய்து மறுநாள் ஒப்புவிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரம்படி தான் என்னைக் கண்காணிக்கவே அவரது உதவியாளர்களை சிலரை வைத்திருப்பார். மாலை எடிட்டிங் ரூமுக்கு சென்றால் பண்டித ஜவகர்லால் நேரு போன்று உடையில் ஷெர்வாணி, கிர்தா, தலையில் தொப்பியுடன், முதல் ஆளாக என்னை மேடையில் ஏற்றி விடுவார். 1330 திருக்குறளையும் பதவுரையுடன் ஏற்றம் இறக்கத்துடன் ஒப்புவிக்க வேண்டும். அதைக் கண்டு, கேட்டு வியந்து மகிழ்ந்தவர்களில் பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களும் அடங்குவர்.

எனக்கு விவரம் தெரிந்து என்னை நானே முழுமையாக அறிந்து கொள்ளும் முன், என்னை விட்டு, இந்த மண்ணை விட்டு அவர் மறைந்தார். தடுமாறி போனேன். தடம் மாறி போனேன். எடிட்டிங் வேலையில் சேர்ந்தேன். இத்தனை, செயல் அனைத்தும் விளையாட்டாகவே கழிந்ததே தவிர நெஞ்சு மனம் மறந்து விட்டது. மரத்தும் விட்டது. காலம் சென்று கொண்டு இருந்தது. நம் காலமும் சென்று விடுமோ என்ற எண்ணத்தில் உருவானது தான் இந் நூல். தூண்டு கோல் இல்லை, தூண்டுவோரும் இல்லை.

அவரிடம் உதவி கேட்க போன பொழுது உடன் இருந்த அமைச்சர் இந்த யோசனை சொன்னார். எளிய வழிதானே என்று முயற்சி செய்ய முயலும் பொழுது முட்டுக் கட்டையும் இருந்தது. அந்தக்கால பாடல்களை பிழையின்றி தொகுக்க பொறுமை வேண்டும். தேடத் தேட பாடல் புத்தகங்கள் கிடைக்க வேண்டும். அப்படி அமைந்து கிடைத்த பாடல்களும், என் நினைவின் ஆதிக்கம் கொண்டும் என்னால் இயன்றவரை அவரது பாடல்களை தொகுத்து வைத்துள்ளேன். நிறைகளை விட குறைகள் அதிகம் இருக்கலாம். குறைகளைக் கண்டு இரும் தாராளமாய் பொறுத்தருள வேண்டும்.

"திருவை. நாகையா தான் தொகுப்பட பாடல் திரட்டு" தொகுக்க எனக்கு உறுதுணையாக இருந்த நல்ல உள்ளங்களுக்கு என் நன்றியையும் வணக்கங்களையும் இங்கு தாழ்ந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

04-01-2006

தி. நா. ரவீந்திரன்
பிலிம் எடிட்டர்
பிரசாத் பிலிம் லேப்

# பொது

## குடும்பப் பெண்களுக்கு அறிவுரை

தொட்டுத் தாலி கட்டியவன்
முட்டாளா இருந்தாலும்
கட்டுப் பட்டு ஆகணுமே
கண்ணியமாய் வாழணுமே
— தொட்டுத் தாலி

கொண்ட வீடு குபேரன்
அந்த வீடு குசேலன்
எந்தன் தாய்வீடெனவே
கௌரவமாய் எண்ணாதே
— தொட்டுத் தாலி

அண்டை வீடு தேடிச் சென்று
அரட்டை அடிக்காதே
கொண்டவனை எந்நாளும்
குற்றம் குறை சொல்லாதே
— தொட்டுத் தாலி

காடி கஞ்சி ஆனாலும்
கூடியே நீ குடிக்கணுமே
தேடிக்கவே ஏழையானால் - கவி
பாடியே நீ மகிழணுமே
— தொட்டுத் தாலி

# தனிப்பாடல்

ராகம் ரஞ்சனி

## பல்லவி

அன்னை உமா என்ற உன்னை மயில் நாதா
இன்னும் பாரா முகமா
- அன்னை உமா

## அநுபல்லவி

என்ன சொன்னாலுமே
நின் செவி கேளாதோ
உன்னையன்றியே யாராலும் அசையாதே
- அன்னை உமா

## சரணம்

குறை இருந்ததோர் கன்றதைப் போலே
கரைகின்றேன் இனி நான் புவிமேலே
சடர்கில தேவா என்துயர் தவிர்த்தோனே
சோதனை செய்வதுகா இனி மேலே
- அன்னை உமா

பிறந்தது நான் வரை மறந்துனை நாடேன
பேதமையால் மதி இழந்து நொந்தேனே - (இ)
பறந்து வரும் கிளியில் அமர்ந்த கோமானே
பார்வதி சேயா கண்பாரும் இமானே
- அன்னை உமா

## தனிப் பாடல்

அநியாயம் அநியாயம்
அரசின சோதரர்களை குறிப்பது
அநியாயம் அநியாயம்

### தொகையறா

ஏர் பிடித்தே வயலை உழுது
பயிர் செய்கிறார் நம் ஏழைத் தொழிலாளி
போர் அடித்தே நெல்லை களஞ்சியம் (சே
சேர்க்கிறார் பணக்கார முதலாளியே

### பாட்டு

இனியாகிலும் சமதர்மம் நிலவி - ஏழை
மக்கள் படும் துயர் நீங்கி
தனியாகவே தான் பிரித்து
தீண்டாத மக்களை வேண்டாம் என்பதும்

— அநியாயம் அநியாயம்

### தொகையறா

பாலுக்கோ சர்க்கரை இல்லையென்று
முதலாளி போல் துயர் கொண்டார் முதலாளியே
—இடக்கில்
கூழுக்கோ உப்பில்லை என்று
பாடுமொழி போல் துயர் கொண்டார் தொழிலாளியே

### பாட்டு

உழைப்புக் கேற்ற ஊதியம் இல்லை
உயர்வு தாழ்வும் என்றும் பெரும் தொல்லை
இளைப்பும் களைப்பும் இல்லாத பாரினில்
ஏய்க்கத் திரிந்து உடல் வளர்ப்போர் அந்தோ

— அநியாயம் அநியாயம்

# தனிப் பாடல்



தானனக் குயிலே தங்கச்சம்பா
தண்ணிக்குப் போறவளே - அடி
தண்ணிக்குப் போறவளே - உன்னைக்
காணாவிட்டால் எந்தன் மனம்
கலங்குதே மயிலே
ஆணாய்ப் பிறக்கப் படைப்பித்தானோ
நான்முகன் பாவி - அந்த
அணைத்தென் அன்புக்கு இணங்கிடுவாயே
எந்தன் தேவி

- அடி தானனக் குயிலே

ரூப சௌந்தர மயிலே - என்
ஆவல்தனை தீர்க்கிப்போதே - பரி
தாபகரமான வேளை - கண்
பாரடி முன்னாலே

- அடி தானனக் குயிலே

பட்டாடை சிவுக்கெட்டு மாட்டுறக்கோ
கட்டாணி முத்தே என்னைச் சேர்த்துக்கோ
கிட்டார்க்கு கிட்டதென்று எண்ணிக்கோ
தட்டாமல் நானையாதான் சொல் கேட்டுக்கோ

- அடி தானனக் குயிலே

# தனிப் பாடல்



ஓட்டைப் பல்லழகா சிறுநகைத் திலகா
உன்னை மறவேனே மகா
நாட்டைக் காத்திடவே நலம் மிக பெறவே
நாயகனாய் வந்த மகாத்மா நீயே!
- ஓட்டைப் பல்லழகா

மூன்று முழத் துண்டு மூக்குக் கண்ணாடி
ஊன்று கோலையும் கொண்டு
லண்டன் எல்லாம் உலாவி வந்து
இந்தியாவுக்கு செய்தீரோ உண்மை தொண்டு
- ஓட்டைப் பல்லழகா

ஆதவன் போல வந்துதித்தே காந்தி என்றே
தந்தை நாமமாய் தான் போற்றுவார் இன்றே
சுதந்திரம் வாங்கியே இருப்பதென்றே - நீர்
இந்தியாவுக்கு செய்தீரே உண்மைத் தொண்டு
- ஓட்டைப் பல்லழகா

படம் : கிராமநாயகி
இசை : ஜி. ராமநாதன்

படம் : ஆடம்பர சாமியார் (OR) சிங்காரி
பாடியவர் : P. லீலா

ஊசிப் பட்டாசே வேடிக்கையா
நீ வைச்சாலே வெடி டமார் டமார்
லேடி பட்டாசே வேடிக்கையா
நீ வைச்சாலே வெடி டமார் டமார்
பிரங்கி போலே சிரங்கி வெடியை
வச்சாலே வெடி டமார் டமார்.

ஆட்டா யானை வெடி. இதனாலே
சுடுவேனே உன்னைத் தாத்தா.
ஆமாமா கிழமா சுட்டுப் போடாதே,
கோமாளித் தனமா கொளுத்திப் போடாதே

சீறியே பாம்பாய் மாறிடுமாம்
நீ வச்சாலே வெகு தமாஷ் தமாஷ்
ஏரோப்பிளேனாய் போகுமாம் மேலே
இது தானே பேஷ் பலே பலே

புதுசா இன்னும் மத்தாப்பு வாங்க
தரவேணும் பணம் தா...தா.
தரணும் கண்ணு நாளைக்கு காசு
தாராளமாக பூவாணம் வாங்கு

ஊசிப்பட்டாசே வேடிக்கையா
நீ வச்சாலே வெடி டமார் டமார்

படம் : கீதாநாயகி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : எஸ். சி. கிருஷ்ணன்

இட்லி சாம்பார் - நம்ம இட்லி சாம்பார்
என்றும் புதியாகத் தோன்றும் பழையாகும்
இட்லி சாம்பார்

இட்லியைப் பார்த்து பூரி மசாலே
இழிவாய் பேசித் தோழர்களே
இட்லி மகத்துவம் பூரிக்கு லேசாய்!
எடுத்துச் சொல்லுவேன் கேளுங்களேன்
இட்லி சாம்பார் - நம்ப இட்லி சாம்பார்

கள்ளுக் கடையைமூட, அரிசியின்
கண்ட்ரோல் கடையை எடுத்தெறிந்து
காந்தி சொன்னதைத் தலைமேல் வைத்து
கௌரவம் தந்து காத்ததெது
பாட்டுக்கொரு புலவன் பாரதி என்றே
பாடும் புலவனைத் தந்ததெது
சாட்டை கொடுக்கும் கவியாம் பாரதி
தாசனை இங்கே தந்ததெது

தொகையறா

அயல்நாட்டில் இருந்துமதம் நிலைநாட்டவே
அதிவிவேகானந்தரை - செயலோடு
அமெரிக்கா தேசம் சென்றுவர
செலவு செய்திட்டது எது

வசனம்

யாருப்பா செலவு செஞ்சது
தெரியாதா - நம்ம
ராமநாதபுரம் ராஜா தான்

— இட்லி சாம்பார்

<u>தொகையறா</u>

தெய்வத் திருக்குறள், செஞ்சிலப்பதிகாரம்
செல்வமாய்த் தந்தது
ஞான ஜோதிடம் சங்கீத விஞ்ஞான
கலைகளைத் தந்தது

<u>பாட்டு</u>

மதராஸ் வாலா இட்லி சாம்பார்
மண்டை கர்வம் கொள்ளாது
மதியில்லாமே வேலையும் ~~[illegible]~~ செய்
மடமையினாலே தள்ளாது
இட்லி சாம்பார் - நம்ம
இட்லி சாம்பார்

படம்: மச்சரேகை

---

கனவிலும் உனை மறவேனே - நான்
களங்கமில்லா சந்திரனே - மானே
— கனவிலும்

காதல் இருந்தேவும் பிரேமை தானே
கனியே நானே - கவர்ந்திடும் கிளியானேன்
இகமதில் ஆனந்தமே - நாமே
கனவிலும் இணை பிரியோமே
களங்கமில்லா இன்பம் - நாமே

வசனம்

ஆண்: வசந்த மலர் நீ! வண்டு நான்
பெண்: என்ன? வண்டென்றால் அது பல
புஷ்பங்களை நாடுமே ராஜா
ஆண்: ஓஹோ அப்படி என்றால்!
வானில் மேவும் தாரா நீயே
வாராய் வனராணி
பெண்: வாழ்வில் இன்பம் தாராய் நீயே
வாராய் வனராஜா
ஆண்: மோகன புன்னகை செய்திடும்
மோகினியே வனராணி

பெண்: ஆஹா... பிரேம
மலர் மேலே மணம் போல நாமே
— வா

மானினம் துள்ளி துள்ளி விளையாடும்
— சோலையே
மாங்குயில் கவி பாடும் வேளையே
ஆண்: நாதமும் நீயே - கீதமும் நீயே
நமது சுகவாழ்வு தானே
பெண்: தீஞ்சுவைக் கனியே - செந்தமிழ் சிலையே
இகமதில் ஆனந்தமே - நாமே.

சீத்த வெறி கொண்ட எங்கள் சக்தியுள்ள
உத்தமியே
சித்தமிறங்காதோ - அம்மா சக்தி
பராசக்தி உமையே
டங்கார சப்பா - டாங்கெங்கு டங்காத்தா
இங்கார காளிக்கு பலி போட்டு வையடி
மங்காத்தா
பலியுமில்லையே நரபலியும் இல்லையே - எய்

மாதம் மும்மாரி பெய்யவே
மக்கள் எல்லாம் பொழிச்சிடவே

நாடு நகரமெல்லாம் பொங்கல் படையல் போடணும்
நல்ல பள்ளயம் போடணும்
நல்ல நாளும் பெரிய நாளும் எல்லோருமே
சந்தோஷமாய் வாழணும்
சந்தோஷமாய் வாழணும், உல்லாசமாயிருக்கோணும்
— டக்கார சப்பா

திந்தனந்தான் தப்பு தாளம்
டங்கார சப்பு தாளம் போட
கொட்டும் கொம்கார சத்தம் சேர்ந்து முழங்க
கொக்கி மத்தளம் - டக்காளம்
கொம்பு நாதம் துந்தனாவும்
பம்பை நாதம் எங்கேம கலந்து முழங்க

கண்ணை கொஞ்சம் திறந்து பாரு
காளியம்மா திலலாலே
உன்னைப் போல தெய்வம் யாரு
காளியம்மா திலலாலே
எல்லையை காத்தவளே
காளியம்மா திலலாலே
எருமைகாவு கொண்டவளே
காளியம்மா திலலாலே
பள்ளயம் போட்டதுக்கு
காளியம்மா திலலாலே
பூசும் பொங்கி இருக்கோம்மா
காளியம்மா திலலாலே
காளியம்மா என்ன சொன்னா
கிடாவை மாட்டே வெட்ட சொன்னா
மாரியம்மா என்ன சொன்னா
மாவிளக்கு போடச் சொன்னா

# படம்: மச்சரேகை

எல்லாமிருந்தும் இகமதில் துக்கமே
இடை விடாமல் சூழ்ந்ததே
ஆதரவில்லா அனாதையாக அன்னையே
பிரிந்தாயோ - அம்மா

வாழ்வினில் இன்பம் காணேன் - சுக
வாழ்வினில் இன்பம் காணேன்

அலைகடல் துரும்பாக
ஆலையின் கரும்பாக
நிலைக் குலைந்தேங்கி நின்றேன்

ஆராரோ என்றுமே தாலாட்டி வளர்த்திட்ட
அன்னையே உனைப் பிரிந்தேன்
ஊழ்வினையாலே அந்தோ மண்மேலே
உன்னையே இழந்தேனே - அம்மா
வாழ்வினில் இன்பம் காணேன்

ரேவதி: தேவி பவானி தயாபரி
நின் செவிதான் கேளாதோ
சிறைச்சாலையே இன்ப
சிங்கார சோலையாய்
ஜென்ம பூமியும் ஆனதோ
இனி வாழ்வினில் துன்பம் தானே
இகமேல் அடைந்தேனே
வீண்பழி நானே சுமந்தேன்
வேதனையால் மெலிந்தேன்

லர்க்கா: சாஸ்வதமில்லா சராசரமிதே
சுழன்றால் நமக்கென்ன
வாழ்வினில் இன்பம் நானே - சுக
வாழ்வினில் இன்பம் நானே
உனையே மறவேனே
வானமுதே வா என் ராஜா
வாழ்வினில் இன்பம் காணேன்
- சுகவாழ்வில்

படம் : மணமகள்
இசை :
பாடியவர்கள் : C.S. ஜெயராமன்

ஞானா இல்லாதான் ஞானப்பா உலகில் பெரியவு
அதற்கிணையானது வேறேதப்பா
நினைப்பு பசுக்களையும் கூ
நானா இனங்களிலும்
முன்னேறச் செய்கிறதும்
முதலாளி ஆக்குறதும் — ஞானா இல்லாதான்
கச்சேரி பண்ணுகிற
குயில்கள் பாகவதர்
இச்சை கற்றும் டமாரமணிகள்
ஸ்ருதிகும் மிடுக்கிறதும் — ஞானா இல்லாதான்
அதர் சொன்ன வியாபாரி
அபகரித்து வாழ்கிறதும் — ஞானா இல்லாதான்
சதித்திக் கெயில்கொடும்
சிறாருடம் மயில்கொடும்
சாவண்டப் பயல்களெல்லாம்
சைபேயிறிப் பேசுவதும் — ஞானா இல்லாதான்
டாணா இனாத் தெரியாத
ஏழைப் பசங்களெல்லாம்
மெண்டாட்டிக் காரன் போல
வெளிச்சம் போட்டுத் திரியறதும் — ஞானா இல்லாதான்
சொந்த பெயரிலில்லா
தொழில் செய்ய
பயிற்சியில்லாதவர்
சாத்திரப்படி உத்தியோகத்தில்
தனவான்கள் ஆகிறதும் — ஞானா இல்லாதான்

Check

படம் : ஹாதிம் தாய் (அ) மாய மோகினி
இசை :
பாடியவர்கள் : டி. எம். சௌந்தர ராஜன்

மறவேனே எந்த நாளும்
இருள் நீக்கி இன்னல் தீராய்
நேரில் நீ வாருமையா
துணை நீயே காதர் மீரா
— மறவேனே

உலகாளும் இன்ப ஜோதி
உருவானதே ப்ரக்யாதி
உடலாவி போற்றும் மேதா
உளமேயும் தர்மதாதா
பணிந்தேனே சேவை தினமே
உணர்வார் உண்டோ இந்நாளே
ஆதரவு வேண்டும் மனிதன்
வேதனையைத் தீர்க்கும் அல்லா
கருணை தந்தாள நேராய்
கனிந்துன் கண்ணாலே பாராய்

— மறவேனே

சோதனை இன்றோடு மறைந்ததே
என் வாழ்வின் இன்னல் அகன்றதே
உன் பாதசேவை தினமே
அடையும் சன்மார்க்கம் தாராய்
இனியேனும் கண்ணின் இமையாய்
துணையாகி இன்பம் தாராய்
அல்லா இல்லாமல் ஏதுமே
ஆகாது போற்றி வாராய்
நாதா அன்பும் நிதம்
நீக்குமே உன்னாலே மாறும்.
— மறவேனே

சோதனையும் ஏனோ மௌலா
ஆதாரம் நீயே அல்லா
யாவும் உன் பாரம் பாராய்
எண்ணியான் மைந்தனே நேராய்
மறந்தேன் எந்நாளும் நானே
போதாந்த கார பேயால்
உண்ணாமல் அல்லாடு வாழ்வே
கண்ணாக காணும் பாராய்
தாராய் இன்றே கண்பார்வை
துணை நீயே காதர் மீரா

— மறவேனே

படம் : ஹாதிம் தாய்
இசை :
பாடியவர்கள் : A. M. ராஜா - ஜிக்கி

இரு : வான் மதியாகிய நாமிருவராம்
இருந்திடும் காதலே இந்த பாரினிலே

பெ : சிறந்த பூஞ்சோலையில்
கதைகள் சொல்லலாம்
திறந்த வான் வீதியில்
பறந்து செல்லலாம்
காதலின் நேசமே அன்பாகுமே
எந்நாளும் ஜோடியாய் இணையும் வாழ்வாம்

ஆ : மனதெலாம் உன்னிசை இதம் காணுதே
இதயத்தின் ஆசையும் துணை நாடுதே
மங்கையுன் தரிசனம் மோகமாகுதே
எண்ணிலா இன்பத்தின் அலைகளாடுதே

பெ : மேவிய கானமே தென்றல் பேசுதே
சோகமே பாடலைக் கேளும் மாரனே
தூய என் நினைவினைக் காணும் காலையில்
இதயம் நேசமாய் சிந்து பாடுதே

ஆ : உன் மதிமுகமேல் உவகை காணுதே
புன்னகைக் கிண்ணமே பவளமாகுதே
ஆருயிர் கோகில அமுதவாயுமே
மீட்டுவோம் பாவையே மதுர வீணையில்
ஆவலாய் கொஞ்சியே இதய கீதங்கள்

படம் : ஜாதிம் தாய் (அ) மாயமோகினி
இசை :
பாடியவர்கள் : பி. சுசீலா - குழுவினர்

ஆனந்தம் இந்நாளிலே
ஆனந்தம் கண்டேன் - ஆடலாம்
ஆடி, என்றும் பாடி - உந்தன்
அன்னையைத் தேடுவேனே

— ஆனந்தம் இந்நாளிலே

ஓ..... யோகமே இந்நாள்
யோகமே இந்நாளிலே
என்னுயிர் என் வாழ்விலே
மின்னலாகக் காணுதே
எண்ணம் மீறுதே

— ஆனந்தம் இந்நாளிலே

இன்பம் தரும் உலகிலும்
அன்பு தரும் நிலையிலும்
உள்ளம் மாறி பேசுவார்
உண்மை தானிதே
உண்மையாகும் நாளிதே
எண்ணிப் பார் தன்னாலிதே
மின்னலாகக் காணுதே உள்ளம் மீறுதே

— ஆனந்தம் இந்நாளிலே

துன்பம் யாவும் இன்பமாய்
இன்று நேர்ந்ததுமே
சோதரி உன்னால் .........
சோதரி உன்னாலின்றே
ஜோதியைக் கண்டேன்

— ஆனந்தம் இந்நாளிலே

படம் : மாப்பிள்ளை

ஆண் : டோஸ் கொடுக்க வேணும் - சரியான
டோஸ் கொடுக்க வேணும்
மோசமான எந்த கேசுக்கும் - தகுந்த
டோஸ் கொடுக்க வேணும்.

பெண் : மூன்று மணிக்கொரு வேளை தவறாமே
டோஸ் கொடுக்க வேணும்

இருவரும் : டோஸ் கொடுக்க வேணும்

பெண் : இருந்தது போனது நிலைமை
தெரியாத புதுப் பணக்காரனுக்கும்
-முன்னை

ஆ : ஏழைப் பாட்டாளி வாழ்வைக் கெடுத்திடும்
இரக்கமேயில்லாத இரும்பு பெட்டிக்கும்

இரு : (டோஸ்)

ஆ : காலத்துக்குத் தகுந்த ஜால்ரா போட்டுவரும்
கபோதி பசங்களுக்கும் - இந்த

பெ : காரியம் சாதிக்க - அந்த காரியம் சாதிக்க
கொடி பிடிச்சுவரும் காக்கா பசங்களுக்கும்
டக்கா கொடுத்து நில்லு

இரு : (டோஸ்)

ஆ/பெண் : ~~[illegible]~~ வஞ்சகமாக வேலை வட்டிக்கு
வாங்கும் பேராசையனுக்கும்

ஆண் : பஞ்ச காலத்திலும் பதவி மோகத்திலும்
மிஞ்சி விளையாடும் லஞ்ச பிடாரிக்கும்

இரு : (டோஸ்)

ஆ/பெ : கள்ள மார்க்கெட்டில் கொள்ளையடிக்கும்
கனவான்களுக்கும் - அசல்

ஆ : கட்சி பேரைச் சொல்லி - பல
கட்சி பேரைச் சொல்லி
காசை பறிச்சிடும்
பச்சோந்தி கும்பலுக்கும்
பிராடு பசங்களுக்கும்

இருவரும் : டோஸ் கொடுக்க வேணும் - சரியான
டோஸ் கொடுக்க வேணும்.

மாப்பிள்ளை

கண்ணும் கருத்தா குடும்பம் நடத்த தெரியணும்
பெண்கள் கடமையே பெரிசா நினைக்கணும்
 - கண்ணும்
கால நிலைமையே தெரிஞ்சு வாழணும் - ~~இங்கே~~
 - இங்கே
புரிஞ்சு வாழணும்

காசு பணம் வந்தாலும் வீணே
கண்டபடி தள்ளாமல் தானே
கச்சிதமாய் குடும்பம் நடத்த தெரியணும்
 - பெண்கள்
கடமையே பெரிசா நினைக்கணும்
 - கண்ணும்

தொட்டு தாலிகட்டியவன்
 முட்டாளாயிருந்தாலும்
கட்டுப்பட்டு ஆகணுமே
 கண்ணியமாய் வாழணுமே
மட்டு மரியாதையுடன் தொண்டு செய்ய வேணும்
 தொண்டு செய்ய வேணும்
கஷ்டத்திலும் கணவனோடு
 கலந்து வாழ வேணும்
 மனமகிழ்ந்து வாழ வேணும்
ஆங்கிலம் கற்றாலும் அதனால் ஆயிரம் வந்தாலும்
ஆயிரம் வந்தாலும் - ஆடம்பரத்தாலே - வீண் -புதுமைகள்
 ஆடம்பரத்தாலே
ஏழைகளை அவமதிக்காதே
எண்ணற்றக் கற்றாலும்
பெண்களுக்கு பின்புத்தி என்றாலும்
ஆடவர்கள் ஏளனம் செய்தாலும் - அந்த
வீட்டுச் சுமைக்கிடம் கொடுக்காமலே
நாட்டுக்கு நன்மையை செய்திட வேணும் (ஆங்கிலம்)

பக்தியாலே தெய்வ சக்தியாலே - செய்த
பாவமெல்லாம் போகுமே - பதி
இருபதமலரடி அனுதினம் வணங்கிட (பதிபக்தி)

உத்தமி பெற்ற ரத்தினம்

டி.எம்.சௌந்திரராஜன்

இருக்க கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும்
படுக்கப் பாதி மெத்தை கேட்கும் காலம்
- இருக்க

சிறுக்கிக் காட்டி முறை முறைக்காதே
முறைப்பதால் உன் ஜம்பம் பலிக்காதே
கெடக்குதென்றே பொறுத்துப் போனா
படக்கப் பாதி மெத்தை கேட்கும் காலம்
- இருக்க

டாவுகீவு காட்டி சம்மா வெய்க்கிறதை
அடங்கு டப்பா டிப்பா கப்பா போட்டுப் பாக்கிறதை
டம்பாச்சாரி போலவே ஆளை மேய்க்கிறதை
- நிறுத்து

டப்பெல்லாம் அறுத்து போகும் ஜாக்கிரதை
டக்கர் பண்ணாதே! டக்கர் பண்ணாதே!

படம் : அனார்கலி
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : சீர்காழி. கோவிந்தராஜன்
P. சுசீலா

## தொகையறா

மதன மனோகர சுந்தரநாரி
மதுர இதழ் மலர் அழகினி கோரி
மயங்கிடுவோர் எழில் ராஜ
விழிகளி நாட்டிய சிங்காரி அனார்கலி.

## பாடல் (1)

ராஜசேகரா என்மேல் மோடி செய்யலாகுமா
ராஜதந்திரி பியடா

— ராஜசேகரா

மனதில் உருவம் கரைணுதே
மமதை பார்வை மோதுதே
மதுவின் மலைப் பாடடா
மௌனமாகுமா

— ராஜசேகரா

காதலாலே ஏங்குதே கவர்ந்த
கண்கள் தேடுதே
ஆவல் தீர கேளடா இணியில் ஜாலமேனடா
அருகில் வாடா ஆசை ராஜா
ஆசை ராஜா

— ராஜசேகரா

படம் : அனார்கலி
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் :

அனார்கலி - அனார்கலி
அகில ஜோதியாய் பிறந்தாய்
அமர ஜோதியாய் மறைந்தாய்

— அனார்கலி

பாரசீகத்தில் பரிமளமிகவே
பரிசுத்தமாக மலர்ந்தாய்
பண்பு மாறாமல் ஸலீம் காலத்திலே
அன்பு மாறாமல் திகழ்ந்தாய்
பாழும் அநீதியால் பாய் மரமில்லா
படகினைப் போலவே அலைந்தாய்
அக்பர் பாதுஷாவின் இரு பாதங்களால்
மிதிபட்டு அழிந்தாய் அனார்கலி........

— அனார்கலி

காதலில்லையேல்
சாதலே நன்றென கண்டு விட்டாய்
அந்த நீதி காதகராய்
இந்த பாழ் உலகில்
அடைந்தாயே சமாதி
அனார்கலி... அனார்கலி.... அனார்கலி

படம் : நால்வர்
இசை :
பாடியவர்கள் : K.V. மகாதேவன் ; ராணி

பெண் : அபராதம் போடா அம்பது
அகாரணமாகக் கையைப் பிடிச்சா
அபராதம் போடா அம்பது

ஆண் : அழகு ராணியே கிளியே போலவே
உனது ஆசையாலே மெலிந்தேன்
அன்பின் கொடுமையாலே நலிந்தேன்

பெண் : பழகப் பழகவே புரியுது பாரு
பிராக்கெட் கூட்டத்திலே நீ ஒரு ஆளு
அபராதம் போடா அம்பது

ஆண் : தன்மானம் உள்ள தமிழன் - பேச்சைத்
தவறவே மாட்டான் தமிழி !

பெண் : தப்பிலித் தனமாப் பேசியே தமிழன்
பேரைக் கெடுக்காதே தமிழா - தமிழ்ப்
பேரைக் கெடுக்காதே தமிழா

ஆண் : நெஞ்சைத் தொட்டுப் பாரடி தமிழி
பெண் : மோசம் செய்ய நினைக்குது தமிழா

ஆண் : கந்த மூலங்களைத் தின்றாலும் - இது
கடமை தவறாது

பெண் : போதும் நிறுத்து
கல்கண்டு போல் பேசுவாங்க - மறுகு
கருணைக் கிழங்கா மாறுவாங்க
ஆம்புளைங்க கல்கண்டா
கப்ஸா - டிப்ஸா - டப்ஸா பேசி
காலம் ஓட்டுவாங்க - கசந்தா
கம்பி நீட்டுவாங்க

ஆண் : கண்ணான கண்ணுகுட்டி - நான்
கலியாணச் சிங்கக்குட்டி
கைவிட மாட்டேன் - நிஜமா
கைவிட மாட்டேன்

பெண் : அப்போ சத்தியம் நீ செய்திட வேணும்
ஆண் : தலையிலடிக்கிறேன் நம்பிட வேணும்

இருவரும் : ஜாலியாகவே பாலு - பழங்களும்
பாலும் தேனும் போல் கலந்திட
மாலை மாத்த வேணும். ....

படம் : கோடீஸ்வரன்
இசை :
பாடியவர்கள் : பி. சுசிலா

அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை
பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை
பகவானை கேளய்யா - பச்சோந்தி உலகிலே
பணமே தான் ஜீவநாடி - உலகில்
பணமே தான் ஜீவநாடி

பதவியின் ஆசையாலே
பலபேரை மோசம் செய்து
பகல்வேஷ மானவரெல்லாம்
சுகமாக வாழ்ந்திடவும்
— பணமே தான்

உற்றாரும் உறவினரும் வந்து கூடவும்
உயிரான மனைவி மக்கள் சேர்ந்து வாழவும்
கற்றோரெல்லாம் சாற்றுக் கவிகள் பாடவும்
காக்கா கூட்டங்களெல்லாம் ஆமாம் போடவும்
— பணமே தான்

ஜவைதோறும் பிடிச்சவன் போல் தலையைக் கனத்திடும்
சாமிசாரம் கண்கள் போல பார்வை மாறிடும்
பழைய நிலையை மறந்து மேலே பறக்கச் செய்திடும்
பழைய கஞ்சியை மறந்து சும்மா
பாதாம்கீரில் நீந்திடவே
— பணமே தான்

படம் : கோடீஸ்வரன்
இசை :
பாடியவர்கள் : A.M. ராஜா - P. லீலா

பெ : உலாவும் தென்றல் நிலவைப் பிரிந்து
கூடாதென்று நினைக்கிறேன் - போகக்
கூடாதென்று நினைக்கிறேன்
ஆ : கலாப மயிலும் மேகத்தைக் கண்டு
ஆடாதென்று நினைக்கிறேன் - இனி
ஆடாதென்று நினைக்கிறேன்
பெ : எழில் மேவும் ஜோதியே தாரா
ஆ : இன்ப வானில் உலாவிடும் தாரா
இதய வானில் உலாவிட வாராய்
பெ : என் வாழ்விலே ரகசியம் ஒன்று
ஆ : இல்லற வாழ்வினில் அவசியம் இரண்டு
இதன் பொருத்தனாலே மூன்று
பெ : கண்ணாலே விளையாடும் ராஜா
ஆ : நீ எந்நாளும் வாடாத ரோஜா
பெ : இன்பக்காவியமே ஆ... இன்பக் காவியமே
அன்பாகப் பண்பாடும் காவிலே
ஆ : அமுதக் காவிலே

— உலாவும் தென்றல்

கவிபாடும் செல்வியாலே
கவர்ந்திடும் செல்வமே
பெ : கலை வீசும் சந்திரனாலே
ஆ : உ-ம் சந்திரா
பெ : கனிந்த தேன் உள்ளமே
கண்ணாலே விளையாடும் ராஜா
ஆ : நீ எந்நாளும் வாடாத ரோஜா
பெ : மலரின் அழகாலே
ஆ : மதுவின் சுவையாலே - உண்டு
சிங்காரம் செப்பும் பூங்காவிலே
பெ : இன்பக் காவிலே

— உலாவும் தென்றல்

படம் : சித்தூர் ராணி பத்மினி
இசை :
பாடியவர்கள் : எஸ். ஜானகி

ஆ.....
ஹம் கேட்காமலே ஹாய்
ஹம் கேட்கா மேலே ஜோக்கா ஆடும்
புல் புல் பாருங்க

இம் ஜல்லா மியாரி
தில்லார் பாடும் தாளம் போடுங்க

மலர்த் தேனை ஏந்தியே பாபு
உனைத் தேடி வந்தாளே - ஆனால்
வாடாத ரோஜா - இங்கு
வாராயோ ராஜா - ஹம்

<u>தொகையறா</u>

குறையாத நிலவொளி வானிலே - இளமை
மறையாத பெண் எழில் பாரிலே - இதை
உணராமல் நாளை என்றால் - இன்ப
சுகங்கள் காணுமோ வாழ்விலே

<u>பாட்டு</u>

கனிக் குயில் கானா தில்லானா சுகானா
காவியம் வீணா இனி போனா வருமா தானா
கனிக் குயில் நான்... கனிக் குயில் நான்.....
இதோ ஆஹோ ஆஹோஜி முஜே தேக்கோ தேக்கோஜி
ஆஹோ ஆஹோ ஜோக்கா ஆடும் புல் புல் பாருங்க
இம் ஜல்லா மியாரி தில்சார் பாடும் தாளம் போடுங்க

அசைந்தாடும் சிற்பம் நான்தானே
உனைத் தேடித் தேடினேனே
அநுராக வீணையாலே
அலை மோதி ஏங்கினேனே
கடைக் கண்ணால் பாராயோ
ஆசை மன்னவா வாராயோ - ஹம்

படம் : எல்லாம் இன்பமயம்
இசை :
பாடியவர்கள் : A.M. ராஜா, குழுவினர்

காசு கேட்டதே வழிதனைக் காட்டும்
பெண்களை நம்பவே கூடாது

கட்டிய மனைவிக்குத் துரோகமே செய்யும்
ஆண்களை நம்பவே கூடாது

அதும் ஜெந்த்ராங்க இதும் ஜெந்த்ராங்க
அதிசயம் இது ஒரு ரகசியம் தாங்க

படிச்சிருந்தாலும் பதவி பெற்றாலும்
பகுத்தறிவோட பழகிடணும் மறக்காதே
டக்கு டக்கு டக்கு டக்கு டைப்படி போலே
ஜதி தவறாமல் டான்ஸ் உடான்ஸ் ஆடுவோம்
போடு டக்கு டக்கு போடு டக்கு டக்கு டக்கு

படம் : நான் வளர்த்த தங்கை
இசை :
பாடியவர்கள் : டி.ஏ. கிருஷ்ணன் - ஜிக்கி

பெண் : ஒட்டு மாம்பழத்தைப் போல
உள்ளம் ரெண்டும் சேர்ந்ததாலே
சிட்டு போல பறந்து ஓடுவோம் - நம்
இஷ்டம் போலே திம்தடக்கா போடுவோம்
மத்தியான வேளையிலே செல்லலாமா
மாமரத்து சோலையிலே துள்ளலாமா

ஆண் : பத்துநாளா தூக்கமில்லே வள்ளிராணி - உன்
பக்தன் மேலே பாஞ்சிடாதே அல்லிராணி

பெ : கன்னிப் பெண்ணைக் கண்ணடிச்சிக் காட்டலாமா

ஆ : மெய்க் காதலையும் சிறையில் வச்சுப் பூட்டலாமா

பெ : அன்பு முத்தி ஆசையாலே ஆசை முத்திக் காதலாலே
ஆளைக் கிறுக்கா போட்டுட்டியே மச்சான்

ஆ : ராசிபலன் கேட்டுக்கிட்டு
ராகுகாலம் பாத்துக்கிட்டு
தாலியோட வந்திருக்கேன் கண்ணாத்தாளா

பெ : கண்ணான மாமனே நீ சாட்சி - எங்கே
கல்யாண நிச்சயம் முடிச்சி போச்சு

ஆ : ஒட்டு மாம்பழத்தைப் போல பறந்து ஓடுவோம் - நம்
இஷ்டம் போல திம்தடக்கா போடுவோம்.

படம் : ~~(பார் ஜைபயன்)~~ நான் வளர்த்த தங்கை
இசை :
பாடியவர்கள் : பி. சுசீலா

ஜலா ஜைபலா உலகமடா
அசந்தா மொளகா அரைக்குமடா
அதிலேயும் தப்பி ~~அந்~~ வந்தாண்டா
ஒண்ணாம் நம்பர் கில்லாடி - இது

— ஜலா ஜைபலா

ஹோ ஹோ ஹோ !
ஜாலாப் பேசி மணிப் பர்ஸ் மேலே
கை போட்றான் பார் புதுக்கோட்டு
ஜில்லாப் பண்ணும் டைமன் ராஜா
ஜாக்கிரதையா டக்கில் வெட்டு

டைமண் செயினிலும் மட்காட் தலையிலும்
மயங்காதே ஏ அம்மாளு !

-- ஜலா ~~ஜைபலா~~

மக்கான் போல மொறச்சா உன்னை
டேக்கா கொடுப்பேன் அம்மாடு

- ஜலா ஜைபலா

மொத்தும் ஆளும் இருந்தாத் தாண்டா
மொத்துவனும் இருக்கிறான்
ஒம்ட்டு கில்ட்டு ஜம்கி பெல்ட்டு
எல்லாமே பகல் வேஷமடா

— ஜலா ஜைபலா

தானத்திலும் நிதானம் பெரிசு
தலை கனத்து நீ துள்ளாதே ! .. ஓ...
தலையே உனக்குப் போனாலும் சரி
வலையிலே மாட்டிக் கொள்ளாதே !

-- ஜலா ஜைபலா

படம் : பாதாள பைரவி
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : கண்டசாலா
பி. லீலா

ஆண்: என்னதான் உன் பிரேமையோ
ஆ இன்பத் தியாகப் பார்வையோ
கண்ணைக் காட்டி பேசிய
தேன் காதலுமே தே.. நீ
கனவின்றிடுபோமே என் காதலுமே

பெண்: என்னதான் உன் சாயலோ
இன்பத் தியாக இசைக் குயிலோ
பெ விண்ணில் மேவும் தாரகையோ
வெண்ணிலாவோ.. என்
ஆசை தாபமே நீ உனதும் நேசமே

ஆண்: மா மோகமே தீராதே
ஆ ஆனா நிலவும் என்னையே தகிக்கின்றதே
தணலாகவே தாபம் தீருதே

பெண்: ஏ தென்றலே ஏ வெண்ணிலா
நான் என்னையே மறந்தேன்
பெ பிரிய மோகினி, மதனாங்கினி
பிரேமையாகுதே

-- என்னதான்

பாதாளபைரவி பாடியது: கண்டசாலா, P. லீலா.

ஆ: கனிந்த காதலர்க்கு தேவியின் அருள்
கிடைக்கும் தருவேன் பிரியாணி

<u>பாடல்</u>: காதலே தெய்வீகக் காதலே

பெ: தீம்புனலுதிக் கடலிலே தனிமையாகப் படகிலே
சரச விளையாடலாம் நிலவு வானிலே

ஆ: வானகமும் தாரகை போல்
வாழ்வில் யோகம்
காணும் இன்பம் யாவும் நமது காதல் தீபம்

பெ: கனவும் பலித்ததானால் அநுராக போகமே
இணையில்லாத நமது பிரேமைதான் அமோகமே.

—o—

பாதாளபைரவி. பாடியது: கண்டசாலா, லீலா

பெ: அமைதியில்லாதென் மனமே - என் மனமே
அனுதினம் கண்முன் கனவு போல
மனதை பிரேமை மந்திரத்தாலே

ஆ: அமைதியில்லாதென் மனமே - என் மனமே
அனுதினம் கண்முன் கனவு போல
மனதை பிரேமை மந்திரத்தாலே - அமைதி

பெ: ஏதோ அறியேன் எழில் காட்சியிலே
இன்புறும் இணை காணும் தான்
இனிதாய் தானே இசை மேவிடுதே
இதயத்தில் கோகில கீதம்

ஆ: ஏதோ அறியேன் எழில் காட்சியிலே
இன்புறும் வேறு காணம் தான் - ஆஹா
இன்று காண்பது யாவும்
ஆசையின் மந்திரத்தாலே

— அமைதி

படம் : பணக்காரி

பாடியவர் :

பியூட்டியிலே போட்டியிலே - பத்மா
பர்சனாலிட்டியிலே
- பியூட்டியிலே

இசைந்த காதலனைக் கேட்டு - உன்
இஷ்டம் போல மாலை சூட்டு - அவர்
மனம் போல் அன்பு காட்டு - உயர்
குணமே உலகில் நாட்டு
- பியூட்டியிலே

கனிந்த கனியில் மேலே பட்சி தானாக
காதல் கொள்ளுமே
கரும்பைக் கூட உலகில் யாரும்
கசக்குதென்று சொல்வாரோ
தாடியும் நிறைந்த கிழவனும் வந்தால்
வேடிக்கையாய் விளையாடுவான்
தத்துவம் பேசும் சாமியார் வந்தால்
சன்னதிக்கே வழி காட்டிடுவான்
அறிவினிலே நல்ல அழகினிலே வரும்
ஆண்மகன் யாரென நானறிவேன்
கள்ளமில்லாத எந்தன் உள்ளமே காணும்
வாழ்விலே காதல் செல்வமே
விஷ் யூ ஹாப்பி பர்த்டே
ஹிப்ஹிப்ரே ஹிப்ஹிப்ரே ஹிப்ஹிப்ரே

பாடம் : பெண்ணின் பெருமை
இசை : பி. என். ஆர். ராமாராவ்
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்

கன்னித் தமிழ்நாடு - இதுவே
கண்ணகி பிறந்த வீடு - நீ
எண்ணிப் பார் பெண்ணின் பெருமையை
விளக்கிடும் இலக்கிய ஏடு
நம் கன்னித் தமிழ்நாடு

கணவனுக்காக அடிமையாகவே
கண் விழித்துக் காத்திருந்து
கண்படாமலே இன்ப வாழ்வினில்
பொம்மை போலவே மகிழ்ந்து
தனிமையிலும் அவர் மந்திரி போலவே
தக்க யோசனை புகன்று
தாயைப் போலவே உணவு தந்து - பெரும்
தன்மையோடு தினம் அன்பு காட்டிடும்
- கன்னித் தமிழ்நாடு

தன்மானம் வாழ்வின் சன்மானம் - என்று
தன்மையை மறந்திடாது
பெண் மானம் காக்கத் தனது உயிரையும்
பெரிதாக எண்ணாது
பெண்ணின் பெருமையை மறவாது - இந்த
உண்மை என்றுமே தவறாது.
கன்னித் தமிழ்நாடு

படம் : பெண்ணின் பெருமை
இசை : பி. என். ஆர். ராமாராவ்
பாடியவர்கள் : கண்டசாலா

உன் செயலால் ஏதும் ஆகும் - கிருஷ்ணா
உன் செயலால் ஏதும் ஆகும்
என் செயலால் என்ன ஆகும்

— கிருஷ்ணா உன்

புன்னகை மேவும் உன் அழகாலே
புல்லாங்குழலின் இன்னிசையாலே
கன்னியரெல்லாம் தன்னையே மறந்து - கோபி
கன்னியரெல்லாம் தன்னையே மறந்து
காதல் போதையினால் கனிந்து வருவார்

— உன் செயலால்

துணிந்து கோபியர்
துகில்தனை உரிந்தாய்
கனிந்து கரமேந்தி
கண்ணா நீ மகிழ்ந்தாய்
துரௌபதையாளின்
துயர்தனைக் கண்டு - கிருஷ்ணா
துகில்தனை தந்து உதவி புரிந்தாய்

— உன் செயலால்

படம் : பெண்ணின் பெருமை
இசை : பி. என். ஆர். ராமாராவ்
பாடியவர்கள் : பி. லீலா

முடியுமா அது முடியுமா - எதைக் கேட்டாலும்
உம்மால் கொடுக்க முடியுமா
- முடியுமா

முடியாத விஷயம் என்று நினைக்கக் கூடாது
-அது
முடிந்து விட்டால் வண்டு போல பறக்கக் கூடாது
- முடியுமா

குரங்கு போல மரத்துக்கு மரம் தாவக் கூடாது
-மனு
கோயிலுக்குள் பூஜை என்றும் தவறக் கூடாது!
குள்ளநரியைப் போல வேஷம் போடக் கூடாது
-என்
உள்ளத்திலே உள்ளதை நான் சொல்லாமலே
தெரிந்து கொள்ள முடியுமா
- முடியுமா

கற்பு நிலை தவறாத கன்னி நானுங்க - உங்க
காதலுக்கு அடிமையான பெண்ணைப் பாருங்க
கனவு போல எண்ணிடாமல் கவலை தீருங்க
கண்ணும் கண்ணும் கலந்திருந்தால் - என்னாங்க
கண்ணும் கண்ணும் கலந்திருந்தால்
என்ன ஆகும் என்று சொல்ல - முடியுமா
- முடியுமா

படம் : பிரேம பாசம்
இசை :
பாடியவர்கள் : பி.லீலா

பாரத நாடு - ஜெய பாரத நாடு
எங்கள் பாரத நாடு
பார்தனிலே பெரும் பிரத்தியாகிகளை
பண்புடன் தந்தது இன்புறவே!

- பாரத நாடு

பதறு என்றதோர் ~~வானில்~~ பட்டம் வானில்
பறந்து செல்வது எதனாலே - மக்கள்
உதறு என்றதோர் நூலைக் கொண்டு
உயர்ந்து செல்லும் அதனாலே!

நாட்டினிலே நமதாட்சியிலே - நாம்
நன்மையைக் கண்டது எதனாலே
ஏட்டினிலும் மறையாமல் விளங்கிடும்
ராட்டினம் சுற்றிய நிலையாலே

- பாரத நாடு ஜெய

காருண்ய கீர்த்தியாம் காந்தியெனும் புதையலை
கண்யமுடன் தந்த நாடு
காசினியில் நேர்வரும் இல்லாத நேருவைக்
கண்களெனத் தந்த நாடு

கற்பனைச் சிகரமாம் ராஜாஜி என்றதோர்
கலைமணியைத் தந்த நாடு

கம்பனொடு அவ்வையும் கவிபாரதியும் இன்பக்
காவியம் தந்த நாடு

திருக்குறள் அமுதீந்த திருவள்ளுவரென்ற
அருட்கவியைத் தந்த நாடு
சிறந்த நாடு பரந்த திருநாடு
ஜெகத்தினில் மகிழ்ந்து சுதந்திரம் நிறைந்தது

- பாரத நாடு ஜெய

படம்: பிரேம பாசம்.

பாடியவர்: பி.சுசீலா

என் வாழ்வும் இதுதானா
இன்ப வாழ்வும் இதுதானா
எழில் வானில் நிலை மாறிடும் -வெறும்
கானல் நீர் தானா
(என் வாழ்வும்)

மன ஊஞ்சலில் விளையாடும்
தெய்வம் போல் உனை நானே -தினம்
தியானம் செய்தேனே -அந்த
தியாகமும் உந்தன் ஸ்நேகமும் -இனி
யாவும் பொய்தானா
(என் வாழ்வும்)

துன்பம் யாவுமே இன்ப வாசலில் -மின்னும்
ஜோதியாகாதா எந்தன் சோகம் தீராதா
அன்பின் ஆழியில் அலை மோதிடும் -உள்ளம்
அமைதி காணாதா, எனதாவலும்
நிறைவேறிட, அவன் துணையும் நேராதா
(என் வாழ்வும்)

படம் : பிரேம பாசம்
இசை :
பாடியவர்கள் : P. B. ஸ்ரீனிவாஸ்

அவனல்லால் புவி மேலே
அணுவும் அசையாது - ஓர்
அணுவும் அசையாது

அலைகடல் மேவும் துரும்பைப் போலே
அமைதியும் இல்லாது - இன்னல்
அஞ்சிடல் கூடாது - யாவும்
ஆண்டவன் லீலை இது

- அவனல்லால்

மாறி மாறி வரும் சகட வாழ்விலே
மனமே மயங்காதே - நீ
இனிமேல் தயங்காதே
நிலை மாற்றுவன் அருளாலே
விதி சோதனை மேவும்
வேதனை யாவும் தீர்ந்திடும் தன்னாலே
பரந்தாமனின் கண்ணாலே - இனி
பாலைவனமே சோலைவனமாய்
பகவான் அருளாலே
காணும் சுகமே இனிமேலே

- அவனல்லால்

படம் : பிரேம பாசம்
இசை :
பாடியவர்கள் : P. B. ஸ்ரீனிவாஸ் - P. லீலா

தொகையறா

ஹரே முராரி ஹே சக்ரதாரி
அபயம் நீயே
காலச் சூறாவளியில் சிதறிய மலர் போலே
கலங்கி வாடும் முறை தானா
கண்ணா எல்லாம் உன் லீலை தானா

பாடல்

அணைத்தாலும் நீயே அழித்தாலும் நீயே
அன்னையும் நீயே தந்தையும் நீயே
அருள் புரிவாயே கிருஷ்ண ஹரே
கிருஷ்ண ஹரே ஸ்ரீ கிருஷ்ண ஹரே
கிருஷ்ண ஹரே ஜெய் கிருஷ்ண ஹரே

கண்ணிலே இமையாகும் கண்ண பரமாத்மா
வண்ண முகில் ஜோதியே கண்ண பரமாத்மா
கிருஷ்ண ஹரே ஸ்ரீ கிருஷ்ண ஹரே
கிருஷ்ண ஹரே ஜெய் கிருஷ்ண ஹரே

கனவிலும் மறவாமல் உனை நினைக்கிறேனே
உள்ளம் மகிழ்கிறேனே
கவலையைத் தீராயோ - கண்ண பரமாத்மா
காத்தருள் புரிவாயோ - கண்ண பரமாத்மா
கிருஷ்ண ஹரே ஸ்ரீ கிருஷ்ண ஹரே
கிருஷ்ண ஹரே ஜெய் கிருஷ்ண ஹரே

— அணைத்தாலும்

படம் : மலைக்கள்ளன்
இசை : சுப்பையா நாயுடு
பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன்

## பல்லவி

எத்தனை காலந்தான்
ஏமாற்றுவார் இந்த நாட்டிலே - இன்னும்
எத்தனை காலந்தான்
ஏமாற்றுவார் இந்த நாட்டிலே
சொந்த வீட்டிலே - நம் நாட்டிலே

## அனுபல்லவி

சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார்
சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார்
பக்தனைப் போலவே பகல் வேஷம் காட்டி
பாமர மக்களை வலையினில் மாட்டி
— எத்தனை காலந்தான்

## சரணம்

தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம் - கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம் - ஊரில்
கஞ்சிக்கில்லை என சொல்லினை போக்குவோம்
- இன்னும் எத்தனை காலந்தான்

ஆளுக்கொரு வீடு கட்டுவோம் - அங்கே
ஆயக்கலைகளை சீராக பயில்வோம்
கேளிக்கையாகவே நாளினைப் போக்கிட
கல்வியும் ஞானமும் ஒன்றாகத் திரட்டுவோம்
- இன்னும் எத்தனை காலந்தான்

கோவை. அய்யாமுத்து

படம் : மலைக்கள்ளன்
இசை : சுப்பையா நாயுடு
பாடியவர்கள் :

ஓ... ஓ அம்மே... ஓ அய்யா... ஓ சாமி

மசியாத வேலைக்கெல்லாம்
மருந்திருக்குது பாருங்க
மனம் போல வாங்கிப் பாத்தா புரியுங்க
வாய்ச்சாலே வாய்ச்சதுங்க வசிய மருந்துங்க
வழியோட போனாலும் வந்து சேருங்க
வணங்காத ஆம்புள்ளையும் தகிங்கிணத்தோம்
போடும்; வாங்க

— மசியாத

சொந்த நாட்டுலே சோறு கிடைக்காமல்
சோந்து கிடப்பது எதனாலே
பாடும் பணங்காசு பாக்க முடியாமெ
பதுங்கி விட்டது அதனாலே
நாட்டுலே பலகட்சிகள் வந்து
ஆட்டம் போடுவது எதனாலே
திட்டத்திலே தன்னை விளம்பரம் செய்திட
நெருக்கு வழியாகும் அதனாலே

கடவுள் இல்லையென கண்டபடி பேசி
கத்துகின்றாரே எதனாலே
காலம் காலமாய் காத்திருந்தும் - அவர்
காட்சி கொடுக்கவில்லை அதனாலே

— சொந்த

உலகம் எப்படி போனாலென்ன தில்லாலே
ஒருசி நல்லா பாடுவோம் தில்லாலே
ரெண்டு பேரும் பாடுபட்டா தில்லாலே
எப்படியும் வயிறு ரொம்பும் தில்லாலே

— உலகம்

படம் : அமரதீபம்
இசை : டி. சலபதிராவ்
பாடியவர்கள் : ஜிக்கி

ஜாலிலோ ஜிம்கானா
டோலிலோ டிம்கானா
ஆஜூப்கோ ராஜுன்டானா
அசந்திட்டா டக்கின்னானா
— ஜாலிலோ ஜிம்கானா

சாயுமா ... சாயுமா .... சாயுமா
சாயுமா சாயாதும்மா
ஜம்பம் இங்கே சாயாது ... சாயாது
— ஜாலிலோ ஜிம்கானா

நாதர்திம் தில்லானா
தில்லானாயிருக்கா சொல்லேண்ணா
— நாதர்திம் தில்லானா

வாழ்விலும் தாழ்விலும் காணுமே ஆனந்தம்
வானவில்லா மறைஞ்சாலும் எந்நாளும்

— ஜாலிலோ ஜிம்கானா

படம் : அதிசய திருடன்
இசை :
பாடியவர்கள் : பி. சுசீலா குழுவினர்

பிறந்ததே மகாராஜா பிறந்திடும் ராஜா - வேந்த
—கின்
செங்கோலை ஏந்திடும் ராஜா
ஆட்சியின் பீடம் உம்மை அழைக்குதே மன்னா
அன்புள்ளம் ஆவலுடன் இன்புறவே இந்நாள்
- பிறந்ததே

பால் மொழியின் பாவையரும் பாமாலை சூட
வேல் விழியும் விழியாதோ உன்னையே கொண்டாட
பகல் கனவு என்னாளும் பலிக்காது மன்னா
பலித்திடும் நன்னாளும் வந்ததே
உன்னில் வாரீரோ மகாராஜா வாரீரோ

மன்னவனின் கண்ணுறங்க மகிழ்வும் உறங்கும்
வண்ண மலர் விழிமலர வையகம் இலங்கும்
மங்காத சுபயோகம் வாழ்வினில் ஒருநாள்
மாராஜன் எந்நாளும் மறவாத திருநாள்
வாரீரோ மகாராஜா வாரீரோ.

படம் : அதிசய திருடன்
இசை :
பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்

முருகா என்றதும், உருகாதா மனம்
மோகன குஞ்சரி மணவாளா
உருகாதா மனம் உருகாதா

- முருகா என்றதும்

முறை கேளாயோ, குறை தீராயோ
மான்மகள் வள்ளியின் மணவாளா
உருகாதா மனம் உருகாதா

- முருகா என்றதும்

மன்றமே புகழும் மாதவன் மருகா
மாயை நீங்கி வழியே நீ புகல்வாய்
ஆறுபடை வீடுடனும் அன்பர்கள் இதயமே
அமர்ந்திடும் ஜோதியே நீ அருளாய்

- முருகா என்றதும்

ஜென்ம பாபவினை தீரவே பாரினில்
தினமே பாதம்புஜம் தேடி நின்றோம்
தவசிலா ஏ சிவபாலா
சகலமும் நீயே ஜெய சக்தி வேலா!

- முருகா என்றதும்

படம் : கல்யாணிக்கு கல்யாணம்
இசை :
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்

மன்னாதி மன்னரெல்லாம்
மண்ணைக் கவ்வும் காலத்திலே - அட
என்னாங்காணும் உனக்கு
இளம்பட்டு வேண்டிருக்கு
ஏங்கப்பா - ஏங்கப்பா
டேய் ஜால்ரா .... போடுறா ....

ரசமில்லாத கண்ணாடி
ராரா நைனா முன்னாடி
லாடமில்லா குதிரை இப்போ
போகுதடா பின்னாடி - ஹே !
(- ரசமில்லாத கண்ணாடி)

ஊரை அடிச்சு உலையில் போடற
உதாரி மச்சான் - அட
உனக்கு எவண்டா குடை கொடுக்கிற
மூளையும் வச்சான் - இந்த
சூரப்புலிக்கு யார்தான் இப்படி
சொக்காயும் தச்சான்
உன்னை சுட்டாலுமே பாவமில்லே
கொட்டாபுளி ராஜா
(- ஹே ரசமில்லாத)

பேடியாகவும் கூட சின்ன பொண்ணு வேணுமா
- இந்த
திருட்டு மூஞ்சிமேலே எதுவும் கண்ணு போடுமா
உன் சேதியாவுமே சந்தியிலே சிரிக்காமல் போகுமா
நீ சிச்சு சிச்சு கழுத்தை அறுத்த பாவம் விடுமா
(- ஹே ரசமில்லாத)

படம்: ராணி லலிதாங்கி
இசை: ஜி. ராமநாதன்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்.

## தொகையறா

மாயா உலகத்திலே மதிமயங்கி நில்லாமல் - உன்
மங்காத ஜோதியிலே மகிழ்வதுதான் எக்காலம்

## பாடல்

எட்டடிக் கோயிலிலே - நீ வசிக்க
இடமும் இருக்குதய்யா - அங்கு
நிஷ்டையில் நீ இருந்தால் - மாயா
நித்திரை மறையுமைய்யா
— எட்டடிக்

தேயாத நிலவு என்றே தேகத்தை எண்ணாமல்
கெடாத ஜோதியிலே திகழ்வது தான் எக்காலம்

ஆசையின் கயிற்றினிலே - பம்பரம்
அகந்தையால் ஆடுதைய்யா
ஐம்புலச் சிறைதனிலே - நீயமர்ந்தால்
அமைதியும் நாடுமைய்யா
- எட்டடிக்

காயாகி கனியாகி கனிந்திடும் நிலையாகி
கண்ணான ஜோதியிலே கலப்பதுதான்
எக்காலம்

பாதத்தின் ~~சத~~ சதங்கையிலே - ஓங்கார
நாதமும் தொனிக்குமைய்யா
பக்தி நிலையடைந்தால் என் வாழ்வும்
பண்புடன் இனிக்குமையா
- எட்டடிக்

படம் : ராணி லலிதாங்கி
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : டி. எம். செளந்திரராஜன்

ஆண்டவனே இல்லையே - தில்லைத்
தாண்டவனே உன் போல் தாராள சித்தனே
ஆண்டவனே இல்லையே

அலைமகள் தலைமீதில் நிலையானதேன்
மலைமகள் இடப்பாகம் மறைவானதேன்
உலகமே உனைத்தேடும் ஒளியானதேன்
உனையலாது ஓர் அணுவும் அசையாது
உண்மையாவும் புரியாத உலகில்
வேறொரு ஆண்டவனே இல்லையே - தில்லை

பக்தர்கள் போற்றுவார்
பலருன்னைத் தூற்றுவார்
இத்தரையில் மாந்தர்
எதையுமே மாற்றுவார்
பக்தியே மறைந்தாலும் சத்தியம் மறையாது
பரம தயாள சிவஞான பிரம்மமே
பாரெலாம் உனையன்றி வாழ்வில்
வேறொரு ஆண்டவனே இல்லையே - தில்லை

அலைமகள் = கங்கை

படம் : ராணி லலிதாங்கி
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : C. S. ஜெயராமன்

காதலுக்கு கண்ணில்லே
காதில்லை கேளாயோ
ஜாதியில்லை பேதமில்லே
நீ எண்ணிப் பாராயோ

— காதலுக்கு

வாலிபத்தின் வானத்திலே
வர்ணஜாலம் தோணுமடா
பாலைவனம் காணுவது போல்
கானல் நீராகுமடா
இளமையில் வேகத்தினால்
தேடி வந்து ஆடுமடா
நெஞ்சத்திலே மிஞ்சியதோர்
நேசம் தீர்ந்தோடுமடா

— காதலுக்கு

மின்னுவதைப் பொன்னெனவே
எண்ணுவதும் பேதமடா
புன்னகையின் ஜாடையிலே
மயங்கிடுவதும் மடமையடா
கண்ணிலாடும் பார்வையிலே
காதல் பிம்பம் காணுமடா
காளையான வயதினிலே
கட்டுப்பாடு வேணுமடா

— காதலுக்கு

படம் : மணாளனே மங்கையின் பாக்கியம்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : P. சுசீலா

அழைக்காதே நினைக்காதே
அவைதனிலே என்னை... யே.. ராஜா
ஆருயிரே மறவேனே

— அழைக்காதே

எழில் தரும் ஜோதி மறந்திடுவேனா
இகமதில் நானே மரிந்திடுவேனா
எனை மணம் நாடிட சமயமிதானா
கனிந்திடும் எந் நாளுமே
கண்ணான என் ராஜா

— அழைக்காதே

காதலினாலே கானத்தினாலே
காவலனே என்னைச்
சபையின் முன்னாலே
சோதனையாகவே நீ அழைக்காதே
கனிந்திடும் எந் நாளுமே
கண்ணான என் ராஜா

— அழைக்காதே

படம்: மணாளனே மங்கையின் பாக்கியம்
இசை: ஆதி நாராயணராவ்
பாடியவர்கள்: கண்டசாலா - P. சுசீலா

பெ: தேசுலாவுதே தேன்மலராலே
தென்றலே காதல் கவிபாடவா
விளையாடவா - தேசுலாவுதே

ஆ: மாசிலா இதய மேடை வாராய்
மதுநிறை தவழ்ந்திடும் புது நிலை பாராய்
மன ஊஞ்சலாடுவோம்
உல்லாசமாய்... சல்லாபமாய்
- தேசுலாவுதே

பெ: பாராய்... பாராய்
மறைந்து வரும் மின்னலையே
மின்னுவதேனோ
ஆ: மேகராஜன் புகழ் மேடைதானோ
பெ: உண்மையிதானோ
ஆ: உயிர்கள் வாழ மழை பெய்திடத்தானோ
இரு: உரிமையோடு மன வானில் நாமே
ஊஞ்சலாடுவோம்
உல்லாசமாய்... சல்லாபமாய்
- தேசுலாவுதே

பெ: இதோ வா வெண்ணிலாவே - இங்கு
ஆ: வருவாய் நிலாவே
வாழ்வினிலே ஒருநாள் இதுவே.. நிலவே
பெ: கண்ணால் பேசும் காவியமே
ஆ: காவியமே புகழ் காதலின் இன்பமே
இரு: மன ஊஞ்சலாடுவோம்..... சல்லாபமாய்
- தேசுலாவுதே

ஆ: மணத்தை போல் மலருமே இதயமே
மதுவினில் சுகம் தருமே
பெ: இதய மேடையும் நிலவே
இன்பம் தரும் உன்னாலே என் வாழ்விலே
இரு: மன ஊஞ்சலாடுவோம்.... சல்லாபமாய்

படம் : மணாளனே மங்கையின் பாக்கியம்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : P. சுசிலா

நீயே என் வாழ்வின் நிதியாகுமே
எந்தன் நிலவாகுமே
அன்பே என் ராஜா
ஆனந்த ஜோதி நீ தானடா - ராஜா
மதுவேந்தும் காதல் மலர் ரோஜா
மலர் பாதம் தேடுதே
அன்பே என் ராஜா
ஆனந்த ஜோதி நீ தானடா

தாலாட்டுதே இசை கானத்தினாலே
தனிமை காணவே வந்தேன் தன்னாலே
பாசம் நிறைந்தே கண்ணா உன்னாலே
அழகான காதல் மலர் ரோஜா - ராஜா
அனுராகம் தேடுதே
அன்பே என் ராஜா
ஆனந்த ஜோதி நீ தானடா

- அன்பே

படம் : மணாளனே மங்கையின் பாக்கியம்
இசை : ஆதி நாராயண ராவ்
பாடியவர்கள் : ஏ. எல். ராகவன்

ஏவண்டா ஏவண்டா – நம்
முன்னே வந்து எதிர்ப்பவன் – இங்கே
நீறை எகிறிப் போகும் அங்கே டணார் டணார்

சிக்கிலே கொடுத்தா நாக்கிலே தள்ளணும்
டிபு டிபு டிபுனு ரத்தம் கக்கணும்
டிம்மாங் டுக்குக் டுக்கு
டிம் டிம் டிம் டிம்மாங் டுக்கு
டுமிப் போகணும் டணார் முக்கு

அஞ்சநேயனுக்கு அண்ணன் தம்பிடா
பீம சேனனுக்கு பிறந்த பிள்ளைடா
என்னைக்கும் வோபிரயக் கும்பிடுப்போம்
வேளைகளுக்கே அள்ளி அள்ளி கொடுப்போம்
– ஏவண்டா

இந்த நாட்டுக்கு நாங்களே சிங்கம்
சாப்பாட்டுக்கும் சிறந்த சங்கம்
அட கேட்டுப் பாரு ஜெகமெங்கும்
இனிக் கேவலம் வந்தா அது அசிங்கம்
– ஏவண்டா

பெரியவன் சின்னவன் பேதமே இல்லை
உரியவன் வாழ்ந்தவன் வித்தியாசமில்லை
சிண்டுக்கும் சிண்டுக்கும் முடிஞ்சிட மாட்டோம்
சகோதரத் துரோகமே செய்திட மாட்டோம்
– நமக்கு

சொந்த சொண்டபதே இல்லே – கேளு
சொல்லிடப் பிள்ளைப்புத்தும் இல்லே – நமக்கு
எப்பவுமே கோபம் வராது
அது வந்தா திரும்பி போகாது
சண்டைக்கு எவனும் வரவும் மாட்டான்
மண்டை உடைபடாம திரும்பவும் மாட்டான்

இந்தச் சாலைக்குத் தங்கம் கட்டு
ஏன் காலையுமே நீ கிளம்பிட்டு
இங்கே இளைப்பில்லாமே கெட்டு வந்தா
இத்திமேலே விழும் வெட்டு..டு..டு
ஏவண்டா முன்னே வந்து எதிர்ப்பவன்

## நில்வளவன்

பாரதியே - நம் பாரத கலைத் தேரின்
சாரதியே
பாமாலையோடும் புகழ்மாலை சூடும் அருட்கவி
- பாரதி

தாரகை ஒளிபோல தமிழ்க்கவை உயர்வாலே
தாயின் மொழியே சிறந்ததென்றாலே
தாரணிமேல் - யாருன்னைப் போல்
தேசிய ஜீவத்தாளக்கவி
- பாரதியே

மஹாகாளி அருள் திறனும் - மகிழ்ந்திடும்
அகார உகார மகார பிரணவமும் பெற
ஜெகத்திலே கலியுகத்திலே இனி

சிறந்த கவிஞன் நிறைந்த அறிஞன்
பிறப்பது என்றோ
கனவிலே நினைவிலே - உனைக்
கவிச் செல்வனென என்னாளுமே - மனம்
கனிய தாரகமும் - சொன்னாலும்
பாரதியே

———— ooo ————

## நில்வளவன்

தொகையறா

கனவு பலிக்குமென எண்ணிடாதே - மனக்
கண்ணாடி உருவமே - காதலைத் தணிக்குமென
நினைத்திடாதே - மனம் போல் இழந்திடாதே

பாட்டு

மாறாத ஆசை வெள்ளம் - கானல்
நீராகிப் போகுமென்றோ
பாராண்ட மன்னரெல்லாம் - காதல்
போராட்டத்தால் மறைந்தாரே - எண்ணிப்
பாராமலே - இன்ப மோகத்தால்
மாறாதே நீ இனிமேல் வெ - மாறாதே நீ புவிமேலே
- மாறாத

கண்ணாலே பேசிடும் காதல் - அது
காணாமல் மறைந்திடும் காதல் - மனம்
புண்ணாகச் செய்திடும் காதல் - சதி
புயலாலே மாறிடும் காதல் - உன்னை
என்னாளும் ஏமாற்றும் காதல் - அதை
எண்ணாமல் வெறுத்திடக் காதல்
- மாறாத

படம் : அன்பு எங்கே
இசை : T. R. பாப்பா
பாடியவர்கள் : ஜமுனா ராணி

மேலே பறக்கும் ராக்கெட்டு
மின்னல் பூச்சி ஜாக்கெட்டு
ஆளை மயக்கும் பேன்கட்டு
அதுதான் இப்போ மார்க்கெட்டு
மாமா .... மாமா .... மைனா
மாமா .... மாமா .... மைனா
மாமா .... மாமா .... மைனா

மைனர் தும்பி மனதைப் பறிக்கும்
புல் புல் புல் மைனா
மந்திர தந்திர வேலைக் கெல்லாம்
மசியாது மைனா
மாதுக் கண்ணுக்கு காதல் ஜாலத்தை
தீர்த்திடுமே கொய்னா
மாத்திரை எத்தனை கண்ணிலிருக்கு
பார்த்துக்கோ மைனா - கொய்னா

மாமா .... மாமா .... மைனா
மாமா .... மாமா .... மைனா
மாமா .... மாமா .... மைனா

அன்ன நடையில் ஆயிரம் மைனர்
அசந்தே விடுவாங்க
மின்னல் இடையைக் கண்டாலே - மெய்
மறந்தே விடுவாங்க
பின்னல் ஜடையின் பின்னால் வந்து
பேட்டுக்கு நிப்பாங்க
பெரிய பெரிய மகாராஜாவும்
பேட்டுக்கு வருவாங்க

— மேலே பறக்கும்

படம் : அன்பு எங்கே
இசை : டி.R. பாப்பா
பாடியவர்கள் : A.M. ராஜா, ஜமுனாராணி

பெ: பூவில் வண்டு போதை கொண்டு
தாவும் நிலை தானே ஐயா
பார்வை ரெண்டும் பாசம் கொண்டு
காதல் பேசும் காலம் ஐயா

— பூவில் வண்டு

அழகான நிலவோடு பழகாமலே
அநுராக சுகமேதும் புரியாமலே
ஆ: இது தானே என் வாழ்வில் முதல் பாடமே
இனிமேலே மலரோடு உறவாடுமே

— பூவில் வண்டு

இமைக்காத விழி கூட கவி பாடுமா
சுவையான இதழ் கூட ஜதி போடுமா
பெ: எதிலேனும் இடம் மாறும் குணம் மாறுமா
இனியேனும் புரியாத நிலையாகுமா

— பூவில் வண்டு

பெ: இசை பாடும் குயிலேனோ விரைந்தோடுது
ஆ: உன் இசையாலே தான் வெட்கிப் பறந்தோடுது
பெ: அசைந்தாடும் மயிலேனோ நிலை மாறுது
ஆ: உன் அழகான உடல் கண்டு அது நாணுது

— பூவில் வண்டு

படம் : அன்பு எங்கே
இசை : டி. ஆர். பாப்பா
பாடியவர்கள் : (ராதா) ஜெயலக்ஷ்மி

தாசி : **தொகையறா**

என் வேல் விழியைக் கண்டு
மான் விழியைப் படைத்தான் பிரமா
என் தேன் இதழைக் கண்டு
ரதியின் சிலையை செதுக்கினான் விஸ்வகர்மா
என் சிவந்த மேனியைக் கண்டு
தேவியின் உடலையே தீட்டினான் ரவிவர்மா.

**பல்லவி**

காயா பழமா சொல்லு ராஜா - கி
காயா பழமா சொல்லு ராஜா - மெய்க்
காதலும் மிஞ்சுதே கண்களும் கெஞ்சுதே
காயா பழமா சொல்லு ராஜா

**அநுபல்லவி**

மாயா வலையென மயங்காதே - தேன்
மதுவே தருவேன் தயங்காதே
ஆயா கவலையில் சிக்காதே - இது
ஒன்றே போதும் மனம் தளராதே

- காயா பழமா

**சரணம்**

தேவரின் அடியார்கள் நாங்களன்றோ - எம்மை
நேசிக்கும் பக்தர்கள் நீங்களன்றோ
யாவும் உலகத்தில் வேறுமன்றோ - சொந்தம்
யாவும் உலகத்தில் வேறுமன்றோ
எதில் மேவும் இனி நானே இன்பம் தாராய்

- காயா பழமா

படம் : அன்பு எங்கே
இசை : டி.ஆர். பாப்பா
பாடியவர்கள் : ஜமுனாராணி

மாலா :

காதல் என்றால் என்ன - அதில்
காணும் இன்பம் என்ன
கண்ணோடு கண் கலந்து
காயும் நிசியாய் கனிந்து
என்னென்னமோ பண்ணுது கண்ணா
- மனசை
என்னென்னமோ பண்ணுது கண்ணா

- காதல் என்றால்

கனவிலும் நீயே நினைவிலும் நீயே
காண்பதினாலே கனிந்திடுவதாலே
காதலின் வேகம் செய்யுமோ இப்படி
கன்னி சகிப்பது எப்படி
காதலின் வேகம் செய்யுமோ இப்படி
கன்னி சகிப்பது எப்படி
என்னென்னமோ பண்ணுது கண்ணா - ஊணும்
என்னென்னமோ பண்ணுது கண்ணா

- காதல் என்றால்

தூணிலும் நீயே துரும்பிலும் நீயே
தோன்றுவதேனோ மாயம் இதானோ
தூக்கமில்லாம ஏங்குது மனசு
சொன்னா கேக்கிறா வயசு
தூக்கமில்லாம ஏங்குது மனசு
சொன்னா கேக்கிறா வயசு
என்னென்னமோ பண்ணுது கண்ணா - ஊக்கம்
என்னென்னமோ பண்ணுது கண்ணா

- காதல் என்றால்

படம்: அன்பு எங்கே
இசை: டி.ஆர். பாப்பா
பாடியவர்கள்: டி.எம். சௌந்திரராஜன்
பி. லீலா

ராணி: அமிர்த யோகம் வெள்ளிக்கிழமை கண்ணாளா
அதுக்குத் தானே காத்திருந்தேன் இந்நாளா
சோமு: அழகு சிலையே அமுதக் கலையே உன்னாலே
மெழுகு போல உருகி நின்றேன் தன்னாலே.
ராணி: உலகினிலே ஒரு புதுமை - இது
உனக்கென்னை மறந்திட்ட பதுமை
பருகி விட்டால் இதன் மகிமை - உயிர்
பசியும் எடுக்காத இளமை - இனி
பருகி விட்டால் .......... இளமை
இன்பம் தரும் கண்ணாளா
அதுக்குத் தானே காத்திருந்தேன் இந்நாளா
சோமு: அழகு சிலையே ...... நின்றேன் தன்னாலே
நீ கனிந்த காதலின் விருந்து - அது
கவலை தீர்த்திடும் மருந்து - ஒன்று
கலந்து கொஞ்ச காலம் இருந்து - மெய்
காதல் வாழ்வில் இணைந்து
இன்பம் பெற உன்னாலே
மெழுகு போலே உருகி நின்றேன் தன்னாலே
ராணி: அமிர்தயோகம் .......... இந்நாளா
நிகரில்லா பருவ தாகம் - தணிய
நீந்துவோம் இன்ப லோகம் - இனி
சோமு: இணையில்லாத சுகயோகம்
இது தானே வாழ்வின் அனுராகம்
இன்பம் தரும் உன்னாலே
மெழுகு போலே உருகி நின்றேன் தன்னாலே
ராணி: அமிர்த யோகம் வெள்ளிக்கிழமை கண்ணாளா
அதுக்குத் தானே காத்திருந்தேன் இந்நாளா

படம் : காத்தவராயன்
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன்

வா கலாப மயிலே - ஓடி நீ
வா கலாப மயிலே
வாழ்க்கை கனி அமுதம்
தாங்கி மகிழ்ந்திடவே
வா கலாப மயிலே - ஓடி நீ

வாழ்நாளில் இனி நான்
வளம் பெறுவே — வாழ்நாளில் இனி நான்
வண்ண மயில் கலையே
மின்னலிடும் அழகே நீ வா - கண்ணே வா
வா கலாப மயிலே - ஓடி நீ
வா கலாப மயிலே

ஆசையின் கரும்பானேன்
ஆடியில் துரும்பானேன்
காலமெல்லாம் உந்தன்
காதலில் மெலிந்தேனே
இன்றேனோ இளையாரும் வளர்மதியே - எந்தன்
கண்ணோடு கவி பாடும் கலைநிதியே
என்னாளும் மறவேனே எழில் நிதியே
மின்னலிடை கொடியே
அன்ன நடை நடந்தே நீ வா ... மின்னலிடை
கண்ணே வா ... அன்பே வா ...

ஆரிய மாலா ஆரிய மாலா
ஆரிய மாலா ஆரிய மாலா

படம் : காத்தவராயன்
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : C.S. ஜெயராமன்
குழுவினர்

தொகையறா

எண்ணிய எண்ணம் யாவும் நடந்தால்
இறைவனே இல்லை பாரிலே
கண்ணின் முன்னாலே பண்ணிய பாவத்தின்
உண்மையைப் பார் நேரிலே

பாட்டு

விதியா சதியா இந்த வேதனை உனக்கேனோ
முறையா சரியா
— விதியா சதியா

மாய உலகில் நீயும் பிறந்து
வேடர் மனையில் வளர்ந்தாய்
மமதை என்ற போர்வையோடு
மதியில்லாமல் திரிந்தாய்
தாயின் உள்ளம் தகித்திடவே
துரோகமே மறந்தாய்
— விதியா சதியா

வீரம் என்ற வேகத்தாலே
ஊரை அழிக்கத் துணிந்தாய்
மோகம் மீறி காதலாலே
முறையை மீறி நடந்தாய்
வீதி வீதியாக அலையும்
வேதனை ஏன் அடைந்தாய்

— விதியா சதியா

கை விலங்கு கோலத்தோடு
காட்சி தருவதேனோ
கானல் நீரைப் போல உந்தன்
வாழ்வும் நேர்ந்ததேனோ
காலன் போல கழுமரமே
காத்திருப்பது ஏனோ

— விதியா சதியா

படம்: காத்தவராயன்
இசை: G. ராமநாதன்
பாடியவர்கள்: J.P. சந்திரபாபு

தந்தானே தந்தானே தந்தானே
ஆண்டவன் சரியான ஜோடி தந்தானே
தந்தானே தந்தானே தந்தானே

செந்தூரக் காட்டுக்குள்ளே நின்னுகிட்டு - நீ
சிரிச்சு சிரிச்சு என்னென்னவோ பண்ணிகிட்டு
முந்தானையே வீசிக்கிட்டு
குறியாலே பேசிக்கிட்டு - என்னை
கூட்டாளுன்னு பட்டாப் போட்டு
சிட்டா பறந்து போகாதே

— தந்தானே தந்தானே

பப்பாளி பழம் போல நீயும் இருக்கிறே என்னை
பார்த்துப் பார்த்து ஏனோ இப்படி மொறைக்கிறே
பட்டாடையைக் கட்டிக் கிட்டு - உன்
பவுசைக் காட்டி வெட்டிக் கிட்டு - என்னை
கூட்டாளுன்னு பட்டாப் போட்டு
சிட்டாப் பறந்து போகாதே

— தந்தானே தந்தானே

மானம் பத்தினி உன்னைப் பார்த்தா
மானம் பத்திக்குமோ - நீ
தானா வந்தா ஜதிகை தேனை
தாவணி திருத்திக்குமோ - அது
போனாப் போகட்டும் புரிஞ்சுக்கோ - என்
பெருமையை நீ தெரிஞ்சுக்கோ - என்னை
கூட்டாளுன்னு பட்டாப் போட்டு
சிட்டாப் பறந்து போகாதே

— தந்தானே தந்தானே

படம் : வணங்காமுடி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : ஜிக்கி

கட்டழகு மாமா - பொட்டழகு பூமா
விட்டுவிட்டு ஓடாதே உங்கள் கெட்டபோமா

—கட்டழகு மாமா

காத்தாடி போலே அம்மா பறக்குறே
ஆத்தாடி ஐய்யா இப்படி மொறக்கிறே
கண்ணடிச்சி சிக்காதே
பொண்ணைக் கண்டு சொக்காதே
விட்டுவிட்டு ......... போமா

—கட்டழகு மாமா

மனதை அத்தவன் மானத்தை அத்தவன்
மனுஷன் தானா சொல்லிடுங்க
மதியும் கெட்டவன் அதியும் கெட்டவன்
வாழ்ந்திடுவானா சொல்லிடுங்க
மத்தாப்பு போலே மனையும் புரிஞ்சுக்கோ
—உந்தன்
அத்தாரம் செல்லாது இங்கே தெரிஞ்சுக்கோ
அக்கிரிச்சி சிக்காதே கொக்கரிச்சித் துள்ளாதே

—கட்டழகு மாமா

தென்னை மரத்துலே தேனு குடிச்சா
பனை மரத்துக்கு வலிக்குமா
புன்னை மரத்திலே ஏறி இறங்கினா
புளியங்காயும் கிடைக்குமா
புரியாம வெளிச்சம் போடும் பூச்சாண்டி
சரியான இளிச்சவாயன் ஆச்சாண்டி — இங்கே
ஜல்லிக்கட்டு காளையடி துள்ளிக்கிட்டு பாயுது
விட்டுவிட்டு ஓடாதே ....... கெட்டபோமா

—கட்டழகு மாமா

படம் : மாதர் குல மாணிக்கம்
இசை :
பாடியவர்கள் :

ஸ்ரீ லலிதா தயாபரியே
சிவமோகினி ஜகன்மாதா நீயே
சிங்காரமயே திரிபுர சுந்தரி
சிங்காரி அருள் மேவும் சங்கரி

ஸ்ரீ சக்ர ராஜ நிலையே - அடியார்
சங்கட ஹாரிணி சர்வ மங்களா
சக்ர ராஜ நிலையே உமையே
சர்வமும் நீயே தயை புரிவாயே
- ஸ்ரீ லலிதா

பரமேஸ்வரன் இடபாகம் அமர்ந்த நீ
பரிவுடன் மகிழ்ந்திடும் பர்வதராணி
கருணையுடனே ஹிருதமேஸ்வரன்
சந்நிதானம்
காணிடும் வரம் அருள்வாய் அம்மா
- ஸ்ரீ லலிதா

படம் : மகாதேவி
இசை :
பாடியவர்கள் : J.P. சந்திரபாபு, P. லீலா

## தொகையறா

ஆண் : கோபமான மதயானையை நம்பலாம்
கொல்லும் வேங்கை புலியை நம்பலாம்
- ஆனால் அய்யா
சேலை கட்டின மாதரை நம்பினால்

ஆ : தந்தனா பாட்டு பாடணும்
துந்தனா தாளம் போடணும்
கிங்கிணி கிங்கிணி கிணிகிணி சத்த
மங்கிணி மங்கிணி - தையமணியே

பெ : பாம்பை கூட நம்பிடலாம் - அதன்
பாஷாணத்தையும் நம்பிடலாம் - இந்த
பட்டாளத்து வீரனை நம்பினால்
கிட்டாயமா அட்டை ஜந்தி
தந்தனா பாட்டு பாடணும்
துந்தனா தாளம் போடணும்
ஆ : பத்தினி வேஷம் போடாதே - அம்மா
பகட்டுக் காட்டி ஆடாதே
சத்தியமா - நீ உத்தமியா - இந்த
கத்தி முனையில் அள்ளிக்கிட்டு என்னை
வெத்துப் பயல் போல எண்ணாதே
பெ : அங்கே இங்கே சுத்தி அலைஞ்சிகிட்டாலும் - இந்த
அம்மனை சேவிக்க வந்திடணும்
ஆ : இந்த அம்மனும் - [illegible] நம்பியானாலும்
சாமியை சேவிக்க வந்திடணும்
பெ : அம்மன் தான் உலகில் சிறந்தது
ஆ : சாமி தான் சாலச் சிறந்தது

இரு : அம்மனும் சாமியும் சம்மதப்பட்டா
அதை விட வேறு சிறந்தது ஏது
தந்தனா துந்தனா தாளம் வேண்டாம்
துந்தனா பாட்டும் வேண்டாம்

படம் : மகாதேவி
இசை :
பாடியவர்கள் : ஏ. எல். ராகவன் - P. லீலா

ஆண் : மானைப் பழிக்கும் அழகியே
மனதை பறிக்கும் மொழியே
தேனைப் பழிக்கும் கனியே
தேடி வந்தேனே உனையே - கண்ணே

உன் திருமுகத்தை ஒரு முகமா திருப்பு
இந்த பக்கம் திருப்பு எம்மா வெறுப்பு
உனக்கு என்ன வந்தாலும்
நானே பொறுப்பு

பெண் : மறைமுகமாய் பேசுவது சரியா
அது தான் முறையா - இங்கே
மனது இப்படி மாறுவதும் முறையா
உனக்கென்ன தெரியா

ஆண் : காதலுக்கும் கண்ணு இல்லே தெரியுமா
காவாலி என உடனே முடியுமா - பட்டா
கருணை வச்சி மனசி இறங்கி - நெஞ்சம்
ஆசைக் கண்ணாளா என சொன்னாப் போதும் கண்ணாளா

பெண் : எம் புருஷனுக்கு அத்தாச்சி - அந்த - திருமுகத்தை
வருஷம் கூட பத்தாச்சி
இளிச்சவாயன் தவிக்கச்சி
எல்லோருக்கும் பங்காச்சி - என்ற
கதையைப் போல இருக்குது - உன்
கண்ணு ரெண்டும் அழைக்குது.

ஆ : இந்த கலியுக அர்ஜுனனை
கண்ணாலே பாரு - திரும்பி கண்ணாலே பாரு

பெ : கையை கையை பிடிச்சிட்டா
கலைஞ்சிடும் பாரு - கற்பு கலைஞ்சிடும் பாரு

ஆ : கிட்டத்தில் உன்னை விட்டா
கதி இல்லே வேறு - எனக்கு கதியில்லே வேறு

பெ : உன் காலடித் தடம் புரிஞ்சிடுச்சி
காதல் பாரு - நிலா கவனிச்சிப் பாரு

ஆண் : உன் திருமுகத்தை ஒரு முகமா திருப்பு
இந்த பக்கம் திருப்பு எம்மா வெறுப்பு
உனக்கு என்ன வந்தாலும்
நானே பொறுப்பு

படம் : மகாதேவி
இசை :
பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்
குழுவினர்

கோரஸ் : ஏரு பூட்டுவோம் - நாளை
சோறு ஊட்டுவோம் - இந்த
ஏழைகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து
கொடியை நாட்டுவோம் - வெற்றிக்
கொடியை நாட்டுவோம்,
வாடிப் பிறந்தவன் வாழ்ந்திடவும்
வறுமைப் பிணியாவும் நீங்கிடவும்
வானகம் மாரி பொழிந்திடவும்
மானமுமானமே - தானாக ஓங்கிட

— ஏரு பூட்டுவோம்

பாடு பண்ணு பாடு - அண்ணாச்சி
துள்ளி ஆடு என்றும்
பால் போலே பொங்க வேணும் - நம்பநாடு
நல்ல காலம் வந்தாலே - இனி
எல்லை மீறி - இன்ப வாழ்வு - என்றும் ஓங்கவே
— ஏரு பூட்டுவோம்

சந்திரன் : மனசும் மனசும் ஒண்ணா சேர்ந்தா
மறக்க முடியுமா - ரெண்டு
வயதுக் கேத்த முடிச்சை - யாரும்
பிரிக்க முடியுமா

தந்தானமடி - தந்தானமடி - தந்தானக் குயிலே
- அந்த

சாக்கு நல்ல கிச்சுடசம்மா சிங்காரக் குயிலே
- இந்த

முத்தாரந்தான் முணுமுணுக்குது
மொறைச்சி பாக்குது

இந்த - அத்தானும் தான் - ஆசை காட்டுது
ஆளை ஏய்க்குது

ஆமா நிஜமா ஐயா பேச்சை கேளுங்கோ - இனி
ஆனந்தமா ரெண்டுபேரும் மாலை போடுங்கோ
தந்தானமடி - தந்தானமடி - தந்தானமடி

பாடியவர்கள்: சீர்காழி கோவிந்தராஜன்
ஜிக்கி

சங்: வந்தான் பாரு சலங்கை சத்தம்
தந்தானா தானம் போட்டு — வந்தான் பாரு
அக்கினையா பேசிக்கிட்டு
சக்கை போடு போட்டுக்கிட்டு
பா: வந்தான் பாரு சலங்கை சத்தம்
அழக்கையா இரைசத்தி
ஊரெல்லாம் புகழ்ச்சிக்கவே - வந்தான் பாரு
சங்: மூக்கும் முழியும் உடம்புங் கூட
மூடி மூடின்னு இருக்குது... ஹூம் ஹூம் ஹூம்...
பா: முறுக்கு பண்ணுறதுல பொண்ணேணே - உனக்கு
கிறுக்கு ரொம்ப பிடிக்குது — வந்தான் பாரு
தொ: குத்தாலத்தில் இடி இடிக்குதாம்
பெத்தாபுரத்தில் மழை பெய்யுதாம்
சங்: ஓ... ஓ...
முன்னழகும் பின்னழகும் என்னோட கூட மயக்குது
பா: மயக்கம் இருக்கும் மனசு கூட கலக்கும்
சங்: முன்னழகும் ...... மயக்குது
பா: முறைச்சி முறைச்சி கண்கள் ரெண்டு
ஜொலிச்சி போயி கிடக்குது
தொ: அக்காமக தண்ணிக்கு போக
ஆறும் பத்திக்கிச்சாம்
அடுத்திருந்த சுமைதாங்கி கல்லும் பத்திக்கிச்சாம்
சங்: பாக்க பாக்க ஏம் மனசும் பலவிதமா நினைக்குது
பா: பழுதில்லா உடம்பு ரெண்டு பம்பரமா ஆடுது
சங்: பருவமான பொண்கள் மனசை
பறிக்க வந்த திருடன் போல — வந்தான்

பா: நான் பட்ட பாட்டிலே
என் உடம்பு பட்ட பாட்டிலே
நாடாதம்மா உங்க கிட்டிலே - மனசு
நாடாதும்மா உங்க கிட்டிலே
தொ: அட கொழுந்தன் கையை
கொடுக்கபாரன்றா

இவர்: உருவாகும் காதலினாலே
மகிழ்வாகினோம் ஒன் மேலே
நிலவோடு தோகையும் போலே
நிறைவாழ்வில் நாயினி மேலே
உருமாறும் காதலினாலே
— வளமேவும்...

(தொடர்ச்சி)

பா: நாவுராந்தி தொங்கினா கீ வந்து முங்கினா
நம்மகிட்ட போட்டணுமே தூங்கினா போய்
நல்லாருக்குது ஏது அம்பாருக்கு - உங்க
பொல்லாத ஜானடையெல்லாம் யாருக்கு,
அம்மம்மா;

நான் பட்ட பாட்டிலே - உங்க மாமா
பட்ட பாட்டிலே - உங்க அத்தான்
பட்ட பாட்டிலே - உங்க தாத்தா
பட்ட பாட்டிலே
நாடாதம்மா உங்க கிட்டிலே - மனசு
நாடாதம்மா உங்க கிட்டிலே

தோ: அய்யா... உன்னைய கல்யாணம்
பண்ணிக்கிறேன்யா... எடுத்து விடய்யா.

பா: கும்மாளம் போடுறே
குறுக்கே கியும் பாயுறே
அம்மாடி ஏன்டி அம்மா பாக்குறே
துள்ளாதீங்க ஜம்பம் செல்லாதுங்க - இனி
எல்லோரும் வேறு இடம் பாருங்க
— அம்மம்மா,
— நான்

இருவர்: உள்ளமாரும் காதலினாலே
மகிழ்வாக்குனோம் மனமேலே
நிலவோடு தேக்கமும் போலே
நிறைவாழ்வில் நாமினி மேலே
உள்ளமாரும் காதலினாலே
— வளமேவும்....

படம் : ராஜா தேசிங்கு
இசை :
பாடியவர்கள் : C. S. ஜெயராமன்
சீர்காழி. கோவிந்தராஜன்
ஜிக்கி

ஆயிஷா : வனமேவும் ராஜகுமாரா
வளர் காதல் இன்பமே தாராய்
மனமோஹனா சுகுமாரா
மறவேன் உன்னை எழில் தீரா

மகமதுகான் : வனமேவும் ராஜகுமாரி
வளர் ஜோதியே சுகுமாரி
மணம் போல நாம் இனி பாரில்
மகிழ்ந்தே செல்வோம் மதன் தேரில்
— வனமேவும்
நிழல் நீயே தேகம் நானே
நிஜம் எது கேள் பெண் மானே
ஆயிஷா : மலர் மேவும் தென்றல் போலே
நிலை மாறாதே உன்னாலே

தொகையறா
மலராடும் சோலையெல்லாம் வணங்கவரும் மன்னவரே
அலைவாயின் அருளாலே எனக்குள்ளே நிறைந்தவரே

உலவாத வேளையிலே இனிய பூங்காவினிலே
உன்னன்பால் தேடிவந்தே உறவாடும் பூங்குயிலே

கலை வீசும் கண்களாலே
கனிந்தேன் உன்னை அன்பாலே
ஆயி : கவி பாடும் இன்பத்தாலே
கவர்ந்தாய் கண்ணா இந்நாளே
— வனமேவும்
தேசிங்கு : இயலோடு இசை போலே
எழில் மேவும் சோலையிலே
இணையில்லா ஜோதி சேர்ந்ததே . . .
ராணி : புயல் மேவும் அலை போலே
பொங்கிடும் காதலால்
பொறுமை கொள்ளா நேர்ந்ததே
— வனமேவும்
இருவர் : வளமாகும் காதலினாலே
மகிழ்வாகுவோம் மென்மேலே
நிலவோடு தென்றல் போலே
நிறைவாழ்வில் நாமினி மேலே
உண்மையாகும் காதலினாலே
— வனமேவும் . . . .

படம் : திருமணம்
இசை : S.M. சுப்பையா நாயுடு
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன் — ரத்னம்

ஆண் : லஹா லஹா லஹா லாஹா அதிர்ஷ்டம்
பெண் : ம்... அஹா ஏஹா ஏஹா ஏஹா அதிர்ஷ்டம்

ஆண் : வை ராஜா வை வை ராஜா வை
அதிலே வை இதிலே வை
எதிலே வேணுமானாலும் வை — வை ராஜா வை
அடிச்சா அடிச்சது அசந்தா அசந்தது
பெண் : புடிச்சா புடிச்சது போனா போனது

இருவரும் : வை ராஜா வை வை ராஜா வை

பெண் : இந்த ஜோசியம் கேட்டுப் பாரு அவசியம்
ஆண் : ரகசிய — ஜெயிக்க இன்னோர் இருக்கு இதையா
ரகசியம்
பெண் : இசேனும் ஜெயமாகலாம்
ஆண் : அட ஒம்பாலகிடி கிகிகிரி — ஜில்
கோவாலம்பூர் உடக்கிரி

இருவரும் : வை ராஜா வை வை ராஜா வை

ஆண் : கிறுப்படிச்சா மறுப்பு இல்லே
காசைச் அம்மா போடு
பெண் : சிகப்படிச்சாச் இல்லை தாரேன்
தைரியமா ஆடு — நீ தைரியமா ஆடு
ஆண் : அப்படிக் கிறுப்பும் சிகப்பும் கலந்தடிச்சா
அடுத்த ஆட்டத்தைப் பாரு
பாத்து வை... சேத்து வை
பச்சை நோட்டை எடுத்து வை
பெண் : காத்திருந்தவன் பெண்ஜாதியை
நேத்து வந்தவன் கொண்டு போவான்
காரியத்திலே கண்ணு வை
ஆண் : அப்படிக் காரியத்திலேயும் ஜெயிச்சிட்டா
நெஞ்சி மேலே கையை வை

இருவரும் : வை ராஜா வை
வை ராஜா வை
அதிலே வை இதிலே வை
எதிலே வேணுமானாலும் வை.

படம் : திருமணம்
இசை : S.M. சுப்பையா நாயுடு
பாடியவர்கள் : T.M. சௌந்திர ராஜன்

இன்பம் யாவுமே துன்பம் ஆகுமே
இது தான் வாழ்வின் அனுபவமே
அன்பின் ஊற்றிலே மலர்ந்த மலரும்
அன்றே வாடுமே
பண்புடன் பழகும் பலநாள் இனியும்
பறந்தே ஓடுமே
இது தான் வாழ்வின் அனுபவமே

— இன்பம் யாவுமே

சோதனையாலே தென்றலும் ஒருநாள்
புயலாய் மாறுமே
காதலர் வாழ்வும் எதிர்பாராமலே
கனவாய் மாறுமே
இது தான் வாழ்வின் அனுபவமே

— இன்பம் யாவுமே

கனவில் தோன்றிடும் காசும் பணமும்
கைதனில் கிடைத்திடுமா
கலை வான்நிலவை கவர்ந்திட நினைக்கும்
காரியம் முடிந்திடுமா
எண்ணம் போலவே எதுவும் நடந்தால்
இறைவன் இல்லையடா
இகம்தனில் நீ இருக்கும் வரை தான்
இத்தனை தொல்லையடா

— இன்பம் யாவுமே

படம் : அம்பிகாபதி.
இசை : G. ராமநாதன்.
பாடியவர்கள் : சீர்காழி. S. கோவிந்தராஜன்

போனாய்யென்னா, கிக்கன்னா, காவன்னா
ஜுனா, தித்திரையின்னான், அப்படியின்னா
பொய்க்காது திரையைச் சொன்னான் - அப்போ

டானா, ண்ணன்னா, டுனா, தீ வன்னா
டானா, போடாதின்னான், இப்படின்னா
மண்டை கூட போடாதின்னான்

ஆஹ்ஹா - ஆஹா — ஆஹ்ஹா — ஆஹா

தம்ஜலத்கா கம்கம் பாட்டுபாடும் - இது
திம்தலாக சையான் பத்திரி தாளம் போடும்
திரையைத் தான் ஓட்டிப்பாரு
திருவி ஜோஸியம் கேட்டுப்பாரு

கொள்ளு புல்லு தின்காதுங்க
- என் தில்லமட்டம்
இருக்கு குதிரை பாயுதுங்க
அப்போ போனா.... அப்போ டானா....

— போனா.....

படம் : அம்பிகாபதி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : ராஜேஸ்வரி - குழுவினர்

கன்னித் தமிழகம் கண்டெடுத்த - எழில்
காவியச் சாலையடி - தென்னாடு
கற்பகச் சோலையடி - இளம்
காதலர்கள் மனக் கண்களைக் கவரும்
ஓவியச் சாலையடி

தென்னாடு உன்னதச் சோலையடி
அன்புடன் பழகும் பண்பு நிறைந்திடும்
அற்புத சிருஷ்டியடி -
தென்னாடு யாருக்கும்
திருஷ்டியடி

அதி மதுரம் சித்தார சித்திரங்கள்
பேசிடும் பாருங்கடி - கவி மணம்
வீசிடும் தேசமடி

பாடம் : புனைதியல் 

## கண்டிராஜா கீர்த்தி

சீர் கொண்ட நெடிய கடல் சூழ்கின்ற உலகத்தில்
ஜெயவித்தை வாழ்வுற்ற சயறிந்து தேசத்தில்
சிந்தை மகிழுக்கமொடு அங்கம் கலிங்கம்
சந்து மகதப் பெருதி விந்தம் கௌரிந்தம்
தென்கணம் சிங்களம் சிந்து சௌவீரம்
கொங்கணம் கிந்தளம் குடகு காஷ்மீரம்
சிங்கார மலையாள நேபாள மாளவம்
வங்காள காந்தார பாஞ்சாலவம்
செப்பரிய ஆந்திர திராவிட மராடம்
பற்பறம் கூர்ஜரம் விதர்ப்பம் விராடம்
இதில்லா கர்நாடக காம்போஜக முதலான
ஆகும் ஐம்பத்தாறு தேசத்துள்ள மகாராஜர்
தினமும் வந்தெதிர் சிகைக் கண்டழ
பணியும் பங்கஜ நரகரும் சென்பக
தியாக யோக நாகரீக யேபோக மாவிவேக
கண்டிராஜேஸ்வரா பராக் பராக் பராக்

விருத்தம்

கதிர் வேலுக் கெதிர் வேலுமில்லை யென்றே சொல்லும்
கதிர்காமக் கடவுளே காவா
கங்காதரன் பெற்ற சிங்கார வேலவா
கலாப மயில் ஏறியே வாவா
நீதியோடு நிலவளம் நீர்வளம் செழித்திட
நிலையான வரமருள் தேவா
நேர்மையுடன் செங்கோல் நிலைத்திட
என்னாளும் நின் பாதம் சரணமே தேவா.

ஆண் : அந்த சித்திரப் பாவையை பிரம்மாவும்
சிருஷ்டிக்க எத்தனை நாளானதோ
பாரில் என்னதவம் செய்ததோ
இத்தரை மீதினில் கொத்திடும் கிளிக்கேற்ற,
எழில் கோவை இதுதானோ - ஒரு
முத்திரை தானமே பெற்றுவிட்டால் போதும்
முக்தியடைவேன் வாழ்வில்.

ஆடும் வண்ணம் கலாபத்தினால் எந்தன்
ஆவி பறி போகுதே மையல் மீறுதே மனம் வாடுதே
— இதனில்
ஆசை வெட்கம் அறியாமல் தன்னாலே
அலை மோதிடும் புயல் போலவே
நிலை மாறிடும் இவ்வேளையில் — ஆடும் ....

பெண்: நீங்கள் தர்மராஜா - இந்த
ஏழை முகம் பாரும்.

ஆண்: இனிமேலும் முடியாது

பெண்: இது எதும் இல்லையாது

ஆண்: இந்த சாகஸ வேஷமும் நானறிவேனடி

பெண்: தர்மராஜா இந்த ஏழை முகம் பாரும்

ஆண்: பாதகமாய் உன் நாதனும் இவ்விதம்
துரோகம் நினைத்திடலாமா

பெண்: ஒரு பாவமும் செய்தறியாதவர் மீதினில்
பழியை சுமத்திடலாமா

ஆண்: கொலை செய்யாமல் நான் விடுவேனா

பெண்: கொற்றவனே இது முறைதானா

ஆண்: என் கோபத்தினால் பலியாவதைப் பாரடி

பெண்: தர்மராஜா இந்த ஏழை முகம் பாரும்

பாட்டு

உக்ர தந்த்ரா இக்கணமே கொண்டு வருவீர்
வக்கணையாய் பேசுமிவள்
மக்களின் தலையை வெட்டி
சிக்கைக் சிக்கையாக வெட்டி
சுக்கு நூறாக நொறுக்கி
வதைத்திடவே துடித்திடவே மடித்திடுவீர்
— உக்ர.....

விருத்தம்

பாலும் பழமும் ஊட்டி வளர்த்த பாழும் கையாலே
— இந்த
பாரையாளவில் இருக்கவும் விதியோ பாவிகையாலே
பொட்டிட்டு மையிட்டு வளர்த்த பொல்லாக்கையாலே
— ரத்தம்
பீறிட்டோட இருக்கவும் விதியோ பாழுலக்கையாலே

பாட்டு

பாதகியாய் ஏன் பிறந்தேன் பகவானே சம்மதமா
பாலகனை வதைத்திடவே பாவி எந்தன் விதிவசமா
சோதனைக்கே அளவில்லையா
வேதனையே போதுமைய்யா — மன
வேதனையே போதுமைய்யா.

படம் : தங்க ரத்தினம்

இசை :

பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன்
ஜமுனா ராணி

ரத்தினம் : எதையும் தாங்கும் மனசு
என்னை எடுத்துப் பார்க்குது வயசு
என் இதய வானிலே உதய சூரியன்
எழுந்தது தான் புதுசு

– எதையும்

மனசைக் கிள்ளி விட்டு
மான் போல துள்ள விட்ட
மச்சானும் வருவாரா – இனியே
அச்சாரம் தருவாரா

– எதையும்

தங்கம் : மயக்கும் மாலையிலே
மந்தாரச் சோலையிலே
நடமாடி ஆடி வரும் மாடப்புறாவே
நீ ஒரு தினுசு – அதனால்
அமைச்சது சான்சு

– எதையும்

ரத்தி : கண்ணை மூடினால் கனவிலும் வந்து
கதைகள் பேசுவது நியாயமா

தங் : வண்ணத் தமிழ்க் கலை சொந்தமென்று – நான்
வருவது தவறாகுமா

– எதையும்

படம் : மணமகள்
இசை :
பாடியவர்கள் : C. S. ஜெயராமன்.

நாவலர் போற்றும் ஞானாதியனே
நானே உனக்கு அடிமையே
பாவியினும் படுபாவி இவனென்றே
பார்மேல் நாமம் பெறாமல் நின்றே
—நாவலர் போற்றும்

பாமாலையாம் பக்தி பாடல் பாடி
பாசாங்கு பண்ணாமலும் - பரம
பாகவதன் என்றே பாமரர் புகழ்ந்திட
பகல் வேஷம் போடாமலும்
மாற்றி பொருள் சேர்க்கும்
இதயமில்லான் தன்னை
இந்திரன் சந்திரன் என புகழாமலும்
எளியவர் எவர்க்கும் இன்னல் — பெறாமலும்
இன்பமான பணி
என்றுமே செய்யவும்
ஞானமே நீயினி உதவிபுரி
—நானே உன் அடிமையே

படம் : மதுரை வீரன்
இசை :
பாடியவர்கள் :

வாங்க மச்சான் வாங்க
வந்த வழியைப் பாத்து போங்க
வாங்க மச்சான் - அம்மா
வாங்க மச்சான் - கிட்டே
ஏங்கி - ஏங்கி நிக்க
ஏன் இப்படிப் பாக்குறீங்க
வாங்க மச்சான் வாங்க
மானைத் தேடித் தாங்க
கண் வலையைப் போடுறீங்க

தம்பி... - அக்கா.... — வாங்க மச்சான்
மந்திரத்தால் நாங்க - இங்கே
மசிய மாட்டோம் போங்க போங்க
— வாங்க மச்சான்

உப்பில்லாத பத்தியக்காரன்
ஊறுகாயைப் பார்த்தானாம்
உதட்டாலே சப்பு கொட்டி
ஓந்தி போல நின்னானாம்
கற்பனையா பேசி பேசி
கருதி தொட்டில் இருந்தானாம்
கதையைப் போல ஆனை மிரட்டி
காளை போல துள்ளாதீங்க
— வாங்க மச்சான்

தொகையறா

முத்துப் போல பல்லழகி முன் கோபச் சொல்லழகி
கத்திப் போல கண்ணழகி கனிவான பெண்ணழகி

பாட்டு எடுப்பு

தேடி வந்தேனே புள்ளிமானே - அது
ஓடி வந்தால் இங்கு தானே - நானே — தேடி

தென்றலாவும் பூங்காவனத்தில்
தானுலாவும் மலைமானை நானே — தேடி

கோடி நடுங்காரமே கோகிலமே மின் நேரமே
ஜாடையாய் என் கண்ணைத் தன்னை தூவிய
ஜாதிமானை மறைப்பதும் முறையல்ல — தேடி

படம் : மதுரை வீரன்
இசை :
பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன்
பி. லீலா

செய்தி மறைக்கும் தொழிலே சரிதானா
எண்ணிப் பாருங்க - அய்யா
எண்ணிப் பாருங்க

நாச்சியப்பா சங்கிலிக்கருப்பா
பூச்சி காட்டும் போக்கிரியப்பா
பூட்டை அடிச்சா உண்மையே வெளியானா
நினைச்சி பாருங்க - நல்லா
நினைச்சி பாருங்க

ஓட்டை போடும் புள்ளிகள் எல்லாம்
கோட்டை இட்டு கம்பி எண்ணனும்
பூட்டை உடைக்கும் புலியே இதை நீங்க
புரிஞ்சி கொள்ளுங்க - நீங்க
புரிஞ்சி கொள்ளுங்க

காவலெல்லாம் வழிப்பறி கொள்ளை
கன்னம் போட்டு மறைப்பது தொல்லை
கனவில் கூட வேண்டாம் அய்யா
நல்லா கேளுங்க - அய்யா
நல்லா கேளுங்க

ஊரை அடிச்சி மறைக்கவும் வேண்டாம்
யாருக்கும் நீ பயப்படவும் வேண்டாம்
ஏரைப் பிடிச்சி மானம் பெரிதாய்
வாழ வேணுங்க - நாம
வாழ வேணுங்க

படம் : குணசுந்தரி
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : ஏ.எம். ராஜா

கலையே உன் விழி கூட கவி பாடுதே - இன்பச்
சிலையே உன் நிழல் கூட ஒளி வீசுதே!

—கலையே உன்

கலையோடு விளையாடும் தாரா உன்னாலே
அலைமோதும் வேளை வாராய் முன்னாலே
அநுராக கலையே பாராய் தன்னாலே

—கலையே உன்

இளங்காதல் அமுதாகும் ஏகாந்த ராணி
இசையோடு பாடும் வேதாந்த வாணி
இணையாகும் இக்கலையே எழில் மேவும் மேனி

—கலையே உன்

படம் : குணசுந்தரி
இசை & பாடியவர் : கண்டசாலா

ஆண்டவன் கட்டளையை மீற முடியுமா
அவனவன் இஷ்டம் போல வாழ முடியுமா
(முடியாது முடியாது)

இந்த உலகமே நாடக மேடையடா
இந்த உருவமெல்லாம் வேஷதாரியடா

தற்பெருமை கொண்டவன் கெடுப்பாரின்றி
தானே கெடுவானடா தானே அழிவானடா
அற்பமதியின் ஆணிவேராகும் நான் எனும் அகந்தையடா
ஒளியான உருவத்தின் நிழலுமே இருளாக காணுமடா
முறையான உண்மையடா - இதை
உணராமல் உயர்ந்தவன் தாழ்ந்தவன்.
என்று பேசிடும் உலகமடா.

படம் : குணசுந்தரி
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : A.M. ராஜா - P. லீலா

பெ : நான் செய்த பூஜா பலம்
நல் வாழ்வு தனை நாட
இல் வாழ்வு கை கூட
நான் செய்த பூஜா பலம் - இல்லை
ஆ : நான் செய்த பூஜா பலம்

பெ : அரவிந்த மலரோடு
அநுராக நிலை காண
ஆதவன் உதயமானான்
ஆ : இல்லை - ஆதவன் ஒளியோடு
காதலின் நிலை காண
அரவிந்தம் உதயமானாள்
பெ : தேன் மலர் மணம் போல
தெய்வீக நிலை காண
தென்றலும் உதயமானான்
ஆ : இல்லை - தென்றலின் அலையோடு
தெவிட்டாத நிலை காண
தேன் மலர் உதயமானாள்
நான் செய்த பூஜா பலம் - இல்லை
பெ : நான் செய்த பூஜா பலம் - இல்லை
இரு : நாம் செய்த பூஜா பலம்

படம் : உத்தமபுத்திரன்
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்
பி. சுசீலா.

பெண் : புள்ளி வைக்கிறான்
பொடியன் சொக்குறான் - மச்சான்

இரு : பொல்லாதவன் அது இல்லாதவன் - ரெண்டு
போட்டாலுமே வெளியே சொல்லாதவன்
- புள்ளி

பெண் : பட்டான ராஜாவே - வா அசல் தேஜாவே
பார் இந்த ரோஜாவை
தொட்டாலுமே சொர்க்கம் காணுமே

ஆ : கட்டான லோட்டாவே - வா
வெத்து தோட்டாவே - எந்தன்
கிட்டாலி பட்டாலுமே பாவம் தீருமே
கை பட்டாலுமே பாவம் தீருமே - அந்த

இரு : வெண்ணாத்தைப் போலவே
அண்ணாந்து பார்க்கிறான்
கண்ணாலே மாப்பிள்ளை போல் ரெய்க்கிறான்
- புள்ளி

பெ : கண்ணு மேலே தூக்குது பார் ரொப்பவே
- மச்சான்
குழம்பிப்பானை போலிருக்கு தொப்பே - [illegible]

ஆ : கட்டழகன் மீசைப்பாரு சப்பே - என்
கண்ணுக்குட்டி உனக்கு கூட வெப்பே

பெண்
ஆண் - தள்ளாட்டம் போடுது
எல்லாம் கை கூடுது
தம்பி ரெண்டும் கொடை சாயுது
- புள்ளி வைக்கிறான்

படம் : தெய்வப் பிறவி
இசை : சுதர்சனம்
பாடியவர்கள் : ஜமுனா ராணி

காளை வயசு கட்டான சைசு
களங்கமில்லா மனசு
இன்னி உலகம் காணாத புதுசு
காதல் ஒரு தினுசு - எங்கள்
காதல் ஒரு தினுசு

— காளை வயசு

காதல் உள்ளம் ஒன்று உருவம் ரெண்டு
கண்களும் நாலு
காவல் மீறி நின்று ஆவல் கொண்டு
வாடுதே இன்று
பொல்லாதது மனம் பொல்லாதது - என்ன
சொன்னாலும் கேளாதது

— காளை வயசு

மாலை பொழுது போனா
மனம் ஏனோ மயங்குதே தானா
வேலை வந்த பின்னால்
இதம் கண்ணால் பேசுதேன் தன்னால்
பொல்லாதது மனம் பொல்லாதது - என்ன
சொன்னாலும் கேளாதது

— காளை வயசு

படம் : சக்கரவர்த்தி திருமகள்
இசை :
பாடியவர்கள் : எஸ்.ஸி. கிருஷ்ணன்
டி.வி. ரத்தினம்

ஆ: நினைச்சதெல்லாம் தப்புண்ணு
தாடையிலே போட்டுக்க வேணும்
பெ: போட்டுகிட்டேன் - போட்டுகிட்டேன் - இனிமேல் நீ
படிச்சதெல்லாம் பக்குவமா
சொல்லி கொடுக்க வேணும். அத்தான்
ஆ: உன் - அத்தானும் நான்தானே
சட்டை - பொத்தானும் நீதானே
பெ: என் முத்தாரம் நீதானே - நீ
செத்தாலும் மறவேனே

— அத்தானும்

ஆ: சித்தாடைச் செல்வமே
திகட்டாத வெல்லமே
பெ: இத்தார சங்கமே
வேதாந்த சிங்கமே
ஆ: மத்தாளங்கார சங்கீதமே
உனக்கு அத்தானும், அருமை அத்தானும்
ஆசை அத்தானும் நான்தானே

பெ: உன்னை மலை போலே நினைச்சிருக்கேன்
நீ அசையாமல் இருக்காதே
ஆ: உன்னையும் தங்கச் சிலைபோலே நினைச்சிருக்கேன்
நீ பேசாமல் இருக்காதே
பெ: உன்னாட்டம் புத்திசாலி
உலகினில் ஏது
ஆ: என்னாட்டம் உனக்கினி
எதுவும் அமையாது
பெ: எந்நாளும் நமக்கினி
இணையேதும் கிடையாது
ஆ: சுந்தரியே - அழகு சுந்தரியே
கண்ணனு சுந்தரியே அந்தரங்கமே
பெ: மனம் சொக்குது ஆனந்த ரங்கமே
சட்டை பொத்தானும் நான்தானே
ஆ: உன் அத்தானும் நான்தானே
நல்ல ஆதாரம் நீதானே

ரங்கமண்ணார் :

இழச்சித் தள்ள ஏகப்பட்ட செலவு ஆகும் போது
இருப்பதெல்லாம் கரைஞ்சு போகும் லாபமேஜோதி

அழகு :

சம்பளமும் வாங்கிக்கிட்டு கிம்பளமும்
வெத்துகிட்டு
சட்டதிட்டம் போடும் அதிகாரிங்க தம்மைத்
தள்ளிப் போட்டேன் வேலையை விட்டு நானுங்க
- இனி
சம்பளமும் மிச்சம் பல வம்புகளும் மிச்சம் - நம்ப
ஜனங்களுக்கும் இல்லை ஏதும் சங்கடம்
- மனசில்
சந்தோஷம் தன்னாலே பொங்கிடும்.

- இதனால் லாபமா நஷ்டமா
நானா லாபமா நஷ்டமா

படம் : மக்களைப் பெற்ற மகராசி
இசை :
பாடியவர்கள் :

ஆண் : அடி தாராபுரம் தாம்பரம் - உன்
தலையிலே கனகாம்பரம்
பெண் : அட செகாம்பரம் சிதம்பரம் - உன்
இடுப்புலே பீதாம்பரம்
- தாராபுரம்

ஆண் : கண் ஜாடையாலே தூண்டுகிறேன் - உன்
ஆடையாலே மயக்குகிறேன்
கட்டாயமா கண்ணையும் காதையும்
கட்டை வண்டியி லனுப்புறேன்
பெண் : உம்?
ஆண் : காதலைக் கட்டை வண்டியிலனுப்புறேன்
- அடி தாராபுரம்

பெண் : மனசுக்குள்ளே அடக்கி வச்சி
மாசக் கணக்கா மறைப்புறேன் [?]
ஆண் : நீ மறைச்சுப்புட்டுத் தூங்கினாலும்
மம்முட்டியாலே எடுப்புறேன்
பெண் : ஒம் புறாவைப் [?] பாத்துப் பருந்துபோல
பாஞ்சி பாஞ்சி குதிக்கிறேன் [?]
ஆண் : ஒம் பப்பாளிப் பழத்தலைய [?] வாங்கச்
சமயம் பாத்து நிக்கிறேன்
- அடி தாராபுரம்

பெண் : ஆளில்லாமெ வெம்புறேன்
ஆண் : இது நாலில்லாத பம்பரம்
பெண் : அட நாட்டுப் புறம்
ஆண் : சீ... சீ... காட்டுப் புறம்
பெண் : சே.. சே... மோட்டுப் புறம்
ஆண் : அப்புறம்?
பெண் : தீ... ஆ....
ஆண் : அடி தாராபுரம் தாம்பரம் - உன்
தலையிலே கனகாம்பரம்
பெண் : அட செகாம்பரம் சிதம்பரம் - உன்
இடுப்புலே பீதாம்பரம்

படம் : மக்களைப் பெற்ற மகராசி
இசை :
பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன்
பி. பானுமதி

ஆண் : கையிலே வளவி எல்லாம்
கலகலென்னு ஆடையிலே - இரு
காலிலே கொலுசு ரெண்டும்
ஜதி தாளம் போடையிலே
கருத்தப் பானை தூக்கிக்கிட்டு
கண்டும் காணாமல்
கண்டு நடை போட்டுக்கிட்டு

போறவளே போறவளே பொன்னுரங்கம் - என்னை
புரிஞ்சுக்காம போறியே நீ சின்னரங்கம்

பெண் : காடு வயலைப் படைச்சி - இரு
கண்ணு ரெண்டை ஏன் படைச்சான்
ஒரு ஜோடி ஜோரு காட்டும் - ஆசைமச்சான் - மச்சான்
யாரு உன்னை தாறுமாறாப் பேசவச்சா - மச்சான்

ஆண் : தாறுமாறாப் பேசவில்ல பொன்னுரங்கம் - கஞ்சி
ஆறிப்போனா புடிக்குமா என் சின்னரங்கம்

பெண் : ஆறிப் போனா போகட்டும் - என்
ஆசை மச்சான் - கஞ்சி
அப்பனுக்குக் கொண்டு போறேன்
அருமை மச்சான் - மச்சான்

ஆண் : தன்னந் தனியா போறியே - என்
பொன்னுரங்கம் - ரங்கம்

பெண் : போனா தைரியமா திரும்பி வருவா
சின்னரங்கம் - ரங்கம்

ஆண் : மண்ணை நம்பி மரமிருக்கேன்
பொன்னுரங்கம் - ரங்கம்

பெண் : அந்த மரத்து நிழலில் குடியிருப்பாள்
சின்னரங்கம் - ரங்கம்

ஆண் : போறவளே போறவளே பொன்னுரங்கம் - என்னை
புரிஞ்சுக்கிட்டுப் போனாசரிதான்
சின்னரங்கம் ரங்கம்

படம் : தீண்டுக்கிளி
இசை :
பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன்
ஜி. எஸ். சுந்தரம் - குழுவினர்

காயாத கானகத்தே நின்றுலாவும்
நற்காரிகையே
மேயாத மான் புள்ளி மேயாத மான்
மேயாத, மேயாத மானும் வரக் கண்டதுண்டோ
— வள்ளி
மேயாத மானும் வரக் கண்டதுண்டோ
அதைவிட
கோவலனார் என்ன சொன்னார் —
என்ன சொன்னார் — பெண்ணை
துவங்கி நடக்கும் மாதவியைக் கட்ட சொன்னார்
நாறா கட்ட சொன்னார்
கண்ணகியா என்ன சொன்னா
என்ன சொன்னா — பின்னே
காற்சிலம்பை விற்க சொன்னா
விற்க சொன்னா
பத்ரகாளி போல கண்ணகி வந்தாள்
பாண்டிய ராஜன் தாண்டிய மீனைப் போல
பாதுவிக்கவே பழியை வாங்கினா

குற்றவாளி யார்
கோவலன் தாண்டா
பாண்டியன் தாண்டா
கோவலன் தான்
பாண்டியன் தான்
கண்ணகி
மாதவி
இல்லே, ஆமா . . . அவதான் இத்திக் கிழிச்சா
ஆறுதல் சினமோ அன்றோ
ஆத்திரப் படல் நன்றோ - ஹைடாமா

படம் : திண்டுக்கிளி
இசை :
பாடியவர்கள் : டி.எம். சௌந்திரராஜன்

ராமனே ஆண்டாலென்ன!
ராவணனே ஆண்டாலென்ன!
ராத்திரிக்கு புவ்வாக்கே லாட்டரி
- வாழ்க்கை
லைட்டெரியப் பண்றானே பாட்டரி
- ராமனே ஆண்டாலென்ன

பஞ்ச காலம் வந்தாலென்ன?
பட்டினியால் செத்தாலென்ன
பாதாம் அல்வா ஜாங்கிரிக் கூட்டம்
படாடோபமாய் வாழ்ந்திடும் நாட்டிலே
-- ராமனே ஆண்டாலென்ன

இரும்பு பெட்டியில் பணத்தை வைக்க
இடமே இல்லாத நெருக்கடி
எனக்கும் உனக்கும் சம்பளம் வாங்கின
ரெண்டாம் நாளே நெருக்கடி
தெருட்டுப் பிள்ளை குட்டிகளோடு
வாடிப் பறந்தவன் என்ன செய்வான்
மலையாளி [ இந்த செய்யாம் சாயாக் கடை வச்சி
ரெண்டணா லாபம் இல்லல்லோ
எல்லா மார்க்கெட்டும் டல்லல்லோ!
தெலுங்கு [ ஏமி சேஸேதி ராமா! டப்பந்தா
எக்கட போயிந்தோ! கோவிந்தா
என்னான்னு சொல்றது? எங்கேன்னு போவது?
எந்த சாமியும் ஏன்னு கேக்கலே
பூவா திண்டானா இல்லையான்னு பாக்கலே!
- ராமனே ஆண்டாலென்ன
டேக்காக் கொடுத்தவன் கிழிச்சிக் கிட்டான்
- பணத்தை
தேடிக் கொடுத்தவன் படுத்துகிட்டான்
காக்கா புடிச்சவன் பொழைச்சிக்கிட்டான்
காலமெல்லாம் நாம் பாடுபட்டாலும்
ராத்திரிக்கே புவ்வாக்கு லாட்டரி - வாழ்க்கை
லைட்டெரிய பண்றானே பாட்டரி
- ராமனே ஆண்டாலென்ன

படம் : தீண்டுக்கிளி
இசை :
பாடியவர்கள் : P.A. பெரியநாயகி

அஹோ.... ஆஹா.... ஹோ....
அம்மா வாரேன்னு சொன்னாண்ணுத்தான்
- இந்த அம்மா

யார் வந்து என்னை எதிர்த்தாலும்
இன் ஜம்பம் ஒன்றும் சாயாதிங்க - எந்நாளும்

ஆடுதன் துருப்பு, அதையே நீ இருப்பு
ஆட்டமே போச்சு அந்தக் கறுப்பு

அஹோ... ஆஹா... ஹோ...

மாட்டிக்கிச்சி குட்டியானை மாட்டிக்கிச்சி
வாட்டமாகவே புலிக்குட்டை போலவே - இங்கே
மாட்டிக்கிச்சி மனிகைக் கடை யானை
- இல்லா போட்டுக்கிச்சி

அஹோ... ஹா ஹா... ஹோ...

மாட்டுப்புறா ஜோடி - இது பாடும் வானம்பாடி
மனவாத்து தாரேன் - ஐயாமாரே வாங்க
அம்மாமாரே வாங்க
முறைக்காதே ராஜா, டக்கு வேலை தானா
டக்கு வேலைதானா - மீசை
முறுக்காதே ராஜா
- அம்மா வாரேன்னு

படம் : பாசவலை
இசை :
பாடியவர்கள் :

லொள் ... லொள் ... லொள் ... லொள்
லொள் ... லொள் ... லொள் ...

மச்சான் உன்னைப் பாத்து
மயங்கிப் போனேன் நேத்து
மனசு வச்சா இன்பம் வரும்
பழைய நடையை மாத்து

— லொள் ... லொள் ... லொள்

முத்தாத கத்திரிச் செடி
கொத்தோட பூத்த கொடி
முத்துப் போல் சிரிச்சபடி
சுத்தி வரும் சித்திரக் கிளி
நான் தானய்யா மலைத் தேன் தானய்யா
வேண்டாமய்யா - அய்யா

— லொள் ... லொள் ... லொள்

கண்ணோடு கண்ணு மின்னி
எண்ணாத தெல்லாம் எண்ணி
தன்னந் தனி இருந்த கன்னி
இன்னும் சொன்னா இளம் கன்னி
நான் தானய்யா - மலைத்
தேன் தானய்யா, தடை வேண்டாமய்யா

— லொள் ... லொள் ... லொள்

படம் : இரு சகோதரிகள்
இசை :
பாடியவர்கள் : ஜிக்கி

அம்மா சாப்பிட வாங்க
அம்மா கூப்பிடறாங்க
புது மாப்பிள்ளை போல்
ஏய்க்கிறது போதுங்க

— அம்மா

இருந்தாலும் முன் கோபம் இருக்கக் கூடாது
இனிமேலும் என் வார்த்தை மறக்கக் கூடாது
ஏகாங்கி போலவே வெளியேறலாகுமோ
என்னையே நீர் மறந்தாலும்
மனசு கேட்குமோ உங்க
மனசு கேட்குமோ

— அம்மா

கனிவான முகத்தை இங்கே
திருப்பிக் காட்டுங்க
கண்ணாலே எனக்கு கொஞ்சம்
சிரிப்பு மூட்டுங்க
தனியான வாழ்விலே சுகமேதும் காணுமா
என்னையே நீர் மறந்தாலும் மனசு கேட்குமோ
உங்க மனசு கேட்குமோ

— அம்மா

படம் : மணம் போல் மாங்கல்யம்
இசை :
பாடியவர்கள் : A.M. ராஜா, P. லீலா

பெ: மாப்பிள்ளை டோய்! மாப்பிள்ளை டோய்!
மணியான மதராஸ் மாப்பிள்ளை டோய்!
ஆ: மைலேடி டோய் மைலேடி டோய்
மணம் போல வந்து வாச்ச பெண் ஜோடி டோய்
பெ: காப்பியிலே பல் தேய்க்கிற மாப்பிள்ளை டோய்
கோப்பையிலே தண்ணி குடிக்கிற மாப்பிள்ளை டோய்
— மாப்பிள்ளை டோய்

ஆ: சோப்பாலே மூஞ்சி தேய்க்கிற சுந்தரி டோய்
சுண்ணாம்பு கொழகச்சிப் பூசற சுந்தரி டோய்
பெ: சொன்னாலும் புரியாது அய்யாவுக்கு தெரியாது
மன்னாதி மன்னனின்னு
மனசுக்குள்ளே நெனச்சிடுவார்
— மாப்பிள்ளை டோய்

ஆ: பேயாண்டி தனைக் கண்டு
நீயேண்டி நையல் கொண்டாய்
பெண்களுக்கு கிடுகாடுபோ
பெ: நாயாய் அலைந்து தேடித் தாய்
மாமன் நடந்து வந்தார்
பெயர் இரும்பைக் கண்டு
தீராத காதல் கொண்டேன்
— மாப்பிள்ளை டோய்

(1) கலைச்சிலம்பு ஜென்றுளர்காது

படம் : கடன் வாங்கிக் கல்யாணம்
இசை :
பாடியவர்கள் : A. M. ராஜா

போதும் உந்தன் ஜாலமே
புரியுதே உன் வேஷமே
ஏழையான பெண்களுக்கே
பிரேமை உள்ளம் இருக்காதா
—போதும் உந்தன்

ஆவல் மீறி காதலினால்
அள்ளி விழிகள் துள்ளிடுதே
அந்தரங்கம் யாவையுமே
அழகு முகமும் சொல்லிடுதே
பேசாமல் இருந்தாலென்ன —போதும் உந்தன்
ப்ரேமை பாதை இது தானே
ஆசையோடு பாசம் வைத்தால்
நேசனாக வாழ்வேனே

—போதும் உந்தன்

பெண்ணாசி உன்னாலாகால்
என்னையே நான் மறந்தேனே
இன்னும் என்ன தாமதமோ
உன்னை என்றும் மறவேனே

—போதும் உந்தன்

படம் : கடன் வாங்கி கல்யாணம்
இசை :
பாடியவர்கள் : A. M. ராஜா, P. லீலா

எங்கிருந்து வீசுதோ
இனிதாகவே தென்றல்
இலைகளையும் தழுவியே
மலர்களையும் மருவியே
இயற்கையாவும் அன்பினால் - ஆசையால்
இன்பமாய் இணைந்து ஊஞ்சல் ஆடவே

எங்கிருந்து வீசுதோ
இனிதாகவே தென்றல்
வெண்ணிலாவில் ஆடியே
புன்னகையால் பாடியே
மனம் மயங்கி ஆசையால்
அன்பினால் இன்பமாய்
மெய் மறந்து போகவே

எங்கிருந்து வீசுதோ
இனிதாகவே தென்றல்
இதய வீணை மீட்டியே
இன்பகீதம் பாடியே
இயற்கையாவும் அன்பினால் - ஆசையால்
இன்பமாய் இணைந்து ஊஞ்சல் ஆடவே

படம் : கடன் வாங்கிக் கல்யாணம்
இசை :
பாடியவர்கள் : A.M.ராஜா, P.லீலா

மஞ் : சந்திராங்கியைப் பார்த்ததினாலே
சிலபேர் மனமே சீறுவதேன்
சிலபேர் குணமே மாறுவதேன்

நியா : பருவமும் அழகும் பணமும் நிறைந்தவள்
பாரினில் கிடைப்பது அரிதாமே
பைங்கிளி வேறிடம் பறந்திடுமோ என்கிற
பயத்தாலே மனம் ஏங்கிடுதே

— சந்திராங்கியைப்

ராஜ : இதயமே ஆடும் காதல் இதமே
ஹாரமாகவே கனிந்திடுதே
புதுமை காணவே ரகசியம் பேசும்
புன்னகை அதனால் கவர்ந்திடுதே

மஞ் : காதல் சோதனையில் கலந்ததினாலே
சிலபேர் பரவசமடைவதும் ஏன்
சிலபேர் கலவரம் அடைவதும் ஏன்

நியா : கன்னியின் அருகில் அந்நியன் இருந்தால்
கவலையினால் மனம் வேகாதா
காதல் போட்டியில் வெற்றி காணும் வரை
கணமும் கலவரம் ஆகாதா

ராஜ : கோகில கானத்தின் இனிமையினாலே
குலவிடவே இனித் தோணாதா
கோரிய வரம் தரும் காதல் தேவியை
கண்டால் பரவசமாகாதா

## கடன் வாங்கிக் கல்யாணம்
### டீ.ஜி. கிருஷ்ணன் - பி. லீலா.

ஆண் : காசிக்குப் போனேனே நாடோமாறுதே
கிழிக்கைக் குந்தும் கொண்டாந்தேன் நாடோமாறுதே

பெண் : காசிக்குப் போகவே மாடோமாறுதே - இது
கரிப்ப ரோஜனத் தின்னணி மாடோமாறுதே

ஆ : பட்டுக்குப் போனேனே நாடோமாறுதே - ஜோடி
திருக்கு கொண்டாந்தேன் நாடோமாறுதே - லீலாமி
திருக்கு கொண்டாந்தேன் நாடோமாறுதே

பெ : பட்டுக்குப் போகவே மாடோமாறுதே - அசல்
அடுக்காட்டு சாம்பல்து மாடோமாறுதே - நிஜமா
அடுக்காட்டு சாம்பல்து மாடோமாறுதே!

ஆ : அன்னமே உண்டதில்லை நாடோமாறுதே - எத்தன்
ஆகாரம் காறுதான் நாடோமாறுதே - என்றும்
ஆகாரம் காறுதான் நாடோமாறுதே!

பெ : ஆகாரம் காற்றோடு மாடோமாறுதே - பால்
கோவாவும் இருக்கிறது மாடோமாறுதே - பாதாம்
அல்வாவும் இருக்கிறது மாடோமாறுதே!

ஆ : கைலாசம் போனேனே நாடோமாறுதே - இவளை
கண்ணாலே பார்த்தேனே நாடோமாறுதே - ரெண்டு
கண்ணாலே பார்த்தேனே நாடோமாறுதே!

பெ : கண்ணாலே பார்த்திருந்தா மாடோமாறுதே - இவளை
கண்ணாலே பார்த்திருந்தா மாடோமாறுதே - எத்தன்
பின்னாலே சுத்துவியா மாடோமாறுதே!

ஆ : ஆசைக்கு மனைவி இல்லை நாடோமாறுதே - என்றும்
ஆத்மயோகி நானே நாடோமாறுதே - பெரிய
ஆத்மயோகி நானே நாடோமாறுதே!

பெ : அதுமாத்திரம் இருந்தாலே மாடோமாறுதே - நானும்
அதுக்காகத் தான் வந்தேன் மாடோமாறுதே - நிஜமா
அதுக்காகத் தான் வந்தேன் மாடோமாறுதே!

படம்: கடன் வாங்கிக் கல்யாணம்
இசை:
பாடியவர்கள்: A.M. ராஜா, சுசீலா

ஆனந்தம் பரமானந்தம்
பால கிருஷ்ணனின் லீலையை உணர்ந்த
பக்த கோடிக்கே பரமானந்தம்

— ஆனந்தம்

யமுனா கரைதனில் கோபியர் அனைவரும்
கிருஷ்ணனைத் தேடுதல் ஆனந்தம்
யாருக்கும் அரிதெனும் முரளீதரனும்
ராதைக்குக் கிடைப்பது பரமானந்தம்

— ஆனந்தம்

வேணு கானத்தால் சிரிக்கிறதும் பார்க்கிறதும்
தன்னையே மறந்தது ஆனந்தம்
கிருஷ்ணனின் நினைவால் உலகையே மறந்த
ராதையின் தரிசனம் பரமானந்தம்

— ஆனந்தம்

படம்: கடன் வாங்கி கல்யாணம்
பாடியது: சீர்காழி OR SG கிருஷ்ணன்

கடன் வாங்கி கல்யாணசாதம் சாப்பிடடா மனிதா
கடந்த ஞானி பொன்மொழிபோல நடந்திடடா மனிதா

— கடன்

கன்னக் கோலும் தவறுடா கத்திரிக்கோலும் தப்புடா
முன்னே பின்னே யோசிக்காம கடனை வாங்கி ரொப்புடா

— கடன் வாங்கி

குடியிருக்கும் வீட்டைக்காட்டி சொந்தமென்று சொல்லடா
கொடுத்த பணத்தைக் கொண்டு சொந்த வீடு கட்டிக்கொள்ளடா

— கடன் வாங்கி

ஆறுநூறு வட்டி அதிகம் ஆனாலும் அஞ்சாதேடா
அதுக்கும் மிஞ்சிப் போனா ஐ.பி. எடுத்து ரெண்டு இருக்குடா.

— கடன் வாங்கி

படம் : ஜெகதலப் பிரதாபன்
இசை :
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்

சிவசங்கரி
சிவசங்கரி சிவானந்தலகரி

சந்திர கலாதரி ஈஸ்வரி
கருணாம்ருதம் தனை பொழியவே அம்மா
சந்திர ...... அம்மா

மனது உருகி வா
மகிமை தோன்ற வா
ஏழை பாலனையும் காக்க வா
- சிவசங்கரி

படம் : நீலமலைத் திருடன்
இசை :
பாடியவர்கள் : ஜிக்கி

ஏங்கி ஏங்கி நிக்காதே
எதிலும் மனதை வைக்காதே
இஞ்சி தின்ன குரங்கு போல
என்னைப் பார்த்து சொக்காதே
தூங்கு மூஞ்சி மாமா- நீயும்
துவண்டு போயி ஆடாதே
ஜோக்குக் காட்டும் சொகுசு- ராஜா
சொல்லிக்காமே ஓடாதே

- ஏங்கி ஏங்கி

துள்ளி துள்ளி ஜாடை காட்டி
தாண்டி போட முடியாது
அள்ளி அள்ளி வீசினாலும்
அதனாலே இது படியாது
சூரப்புலி போல் மீசையை முறுக்கி
தூர நின்னு மொறைக்காதே
தப்பட்டாவை வீசிக் காட்டி
தப்பட்டாவும் வாங்காதே

- ஏங்கி ஏங்கி

படம் : நிலமலைத் திருடன்
இசை :
பாடியவர்கள் :

ஆண் : வெத்திலை பாக்கு சுண்ணாம்பு
பத்திரி லவங் கிராம்பு
ரத்தம் போல செவந்து போச்சுதே
— என் ராஜாத்தி
ஒம் மேலே ஆசையாச்சுதே !

பெண் : போறு– வெத்திலை பாக்கு சுண்ணாம்பு
பத்திரி லவங் கிராம்பு
ரத்தம் போல செவந்து போச்சுதே
— என் ராசாவே
ஒம் மேலே ஆசையாச்சுதே !

ஆண் : மாத்தி மாத்திப் போடும் போது
மனசு தாளம் போடுது

பெண் : ஏ மாத்தி நீயும் போயிடுவேன்னு
எனக்கும் தாளம் போடுது

ஆண் : மனசும் மனசும் ஒட்டிய பிறகு
மறக்க முடியுமா

பெண் : நீ புதுசு புதுசாப் பாக்க நெனைச்சா
எனக்கு புடிக்குமா

ஆண் : அடி என்னையே உன்னிடம் ஒத்தாச்சு
அதுக்கு இருக்குது அத்தாட்சி

இருவரும் : போறு வெத்திலை பாக்கு சுண்ணாம்பு
பத்திரி லவம் கிராம்பு

படம் : [illegible] அன்பு
இசை :
பாடியவர்கள் : A.M. ராஜா

ஐயா முதலாளி வாங்க - ஆ
நோ வேக்கன்ஸி போர்டு பாருங்க
வேலை கேட்கும் பேரை
விரட்டியே ஓட்டும்
மேலான போர்டுங்க போய்
ஒண்ணே ஒண்ணுதானுங்க (அய்யா)

படித்தவர் வேலை தேடி வந்தால்
இதைக் காட்டலாம்
பாங்கு முதல் ஓட்டல் வரை எங்கும்
இதையே மாட்டலாம்
கெட்டியான வேலை கிட்ட வந்து பாருங்க
போனா வராது பொழுது போனா கிடைக்காது
போய் ஒண்ணே ஒண்ணுதானுங்க
— அய்யா

யாரும் என்ன பார்த்திடமெல்லாம் சொன்னது
வேலை இல்லை நோ வேகன்ஸி என்பது
ஹலோ ஜாலி - ஜாலி
சொந்த வியாபாரி இன்றே நான் ஹலோ

— அய்யா

படம் : காவேரியின் கணவன்
இசை : K.V. மஹாதேவன்
பாடியவர்கள் : எம். எஸ். ராஜேஸ்வரி

மாப்பிள்ளை வந்தான் மாப்பிள்ளை வந்தான்
மாட்டு வண்டியிலே
பொண்ணு வந்தா பொண்ணு வந்தா
பொட்டி வண்டியிலே
புள்ளைப் பெத்த அப்பன் வந்தான்
மொட்டை வண்டியிலே
பொண்ணைப் பெத்த அப்பன் வந்தான்
ஓட்டை வண்டியிலே
— மாப்பிள்ளை வந்தான்

காக்காக் கடி கடிச்சிக் கொடுத்த
கமருகட்டு மிட்டாயி
சோக்கா வாங்கித் தின்னுபுட்டு
விட்டானய்யா கொட்டாவி
விட்டாரு சல்லியை எடுத்துகிட்டு
ஓடுனாங்கி மாருகட்டு
ஓராழக்கு அரிசி வாங்கி
(2) உலையிலே தான் போட்டுகிட்டு
கூட்டாஞ் சோறு ஆக்கிக் கிட்டு
கும்பாளந் தான் போட்டுகிட்டு
குழிவிகல்லு புள்ளையை பொண்ணு
ஜோடியாக பெத்துகிட்டு
ஆராரோ... ஆராரோ .... ரீ யாரோ
அருமையான குழந்தை ஆரோ
ஆராரோ ரீ யாரோ
அருமையான குழந்தை ஆரோ

படம் : கணவனே கண்கண்ட தெய்வம்
இசை :
பாடியவர்கள் : P. சுசீலா

அன்பில் மலர்ந்த நல் ரோஜா
கண்வளராய் என் ராஜா
—அன்பில்

வாழ்விலே ஒளி வீசவே
வந்தவனே கண் வளராய்
தாலோ... தாலோ...
—அன்பில்

தென்றல் மலர் மாலை சூட்டுமே - அன்று
தேனை வாயில் ஊட்டுமே
மான்களின் கூட்டமே தோழமைக் காட்டுமே
மன்னவனே உன் நாட்டிலே
—அன்பில்

திங்கள் தொட்டிலில் தாலாட்டிடுமே
சுகுமாரனை சீராட்டிடுமே
வெண்ணிலா காட்டிடுமே
பாலன்னம் ஊட்டிடுமே
கொஞ்சிடும் நாள் வந்திடுமே

—அன்பில் மலர்ந்த

படம் : விஜயபுரி வீரன்
இசை :
பாடியவர்கள் : ஏ.எம்.ராஜா

உள்ளத்திலே உரம் வேணுமடா
உண்மையிலே திறன் காணுமடா
ஒற்றுமையாய் வெற்றி தேடுமடா

— உள்ளத்திலே உரம்

வல்லவன் போலே பேசக் கூடாது
வானரம் போலே சீறக் கூடாது
வாழத் தெரியாமலே
கோழைத் தனமாகவே
வாலிபத்தை விட்டு விடக் கூடாது
மானம் ஒன்றே பிரதானம் என்றே
மறந்து ~~விடக்~~ விடாதே வாழ்விலே

— உள்ளத்திலே உரம்

வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்
ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்
எட்டிச் சுரக்காயெல்லாம்
கிட்டைக் கட்டு ஆகணும்
நாட்டினிலே வீரம் பொங்கும்
நாள் வரணும்
மானம் ஒன்றே பிரதானம் என்றே
மறந்து விடாதே வாழ்விலே

— உள்ளத்திலே உரம்

படம் : தாய்க்குப் பின் தாரம்
இசை :
பாடியவர்கள் : ஜமுனாராணி

காதல் வியாதி பொல்லாதது - அது
கண்ணும் காதும் இல்லாதது
காதல் வியாதி பொல்லாதது

காத்துக் காத்து வழி பார்த்திருக்கேனே
கண்ணாளா உன்னை நம்பி - இன்னும்
கள்ள மார்க்கெட்டு வேலைக்காட்டி
கிட்டாதே கம்பி

— காதல் வியாதி

கற்பனைக்கு எட்டாத ஒரு
அற்புத புதுமை எல்லாம்
கண்ணுக்குள்ளே ஜொலிக்குது பாரு

இன்பக் காவியப் புலவர் முதல்
இயல் கலைஞர் வரை
கண்டவர் மயங்கிடுவாரு - விஷய
கர்மாவினாலும் தர்மாவினாலும் - அந்த
பிரம்மாவினாலும் முடியாது ராஜா

— காதல் வியாதி

தேடிவிட்டுக்கு வெட்கம் பாயாது - எந்தக்
குபேரன் வந்தாலும் சாயாது
ஜம்பம் சாயாது - மனம்
கொந்தளிக்கும் வேளைதனில்
சிந்தனையைக் கவர்ந்து கொண்டு
தந்திரங்கள் செய்யலாமா - ராஜா

— காதல் வியாதி

படம் : தாய்க்குப் பின் தாரம்
இசை :
பாடியவர்கள் : A. L. ராகவன் - P. லீலா

ஆ: விட்டது ஆசை விளாம் பழத்தோட ஓட்டோட
வேதாந்தம் சொன்னாலும் விடமாட்டேன்
கூட்டோட

பெ: எறவுட்டு எண்ணி எடுக்கும் ஆம்பளை சாதி
உன்னை எப்படித் தான் நம்புவாள் பொம்பளை சாதி

ஆ: எல்லோரும் போல நானும்
இருக்க மாட்டேன் சிரிக்கிட்டு
கல்லான உன் மனசு
கரைஞ்சிடாதோ தவிக்கக்கட்டு
எறவுட்டு எண்ணி எடுக்கும் பொம்பளை சாதி
உன்னை எப்படித் தான் நம்புவான் ஆம்பளை சாதி

பெ: ஜல்லிக் கட்டு காளை போல
தாவித் தாவித் துள்ளுறே
நொள்ளைக் கண்ணை
உருட்டி உருட்டி காட்டுறே
சமயம் பார்த்து மாட்டிக்கிட்டே
சாசமாகப் பேசிக்கிட்டே
வெளைக்க வேறே நின்னுக்கிட்டே
சரிதான் போ போ தெரியும்

ஆ: மானாகி மானம் விட்டு
மனுஷன் போல நின்னுகிட்டு
தானாகத் தட்டிக் கேட்டு
தவிக்கிறியே வெக்கங் கெட்டு

ஆ: மண்ணை நம்பி மரமிருக்குது
தெரிஞ்சிக்க வேணும் அடி
மனசும் மனசும் ஒட்டிக்கிச்சி
மஞ்சத் தண்ணையும் பட்டுக்கிச்சி
விரலும் விரலும் தொட்டுக்கிச்சி
இந்த வயலும் வாய்க்காலைப் போல
இருமனமும் ஒரு மனமாய்
இருந்திட வேணும் - நம்ம
திருமணத்தைக் கண்டு ஊரும் திருந்திட வேணும்
இரு: இருமனமும் ஒரு ...... திருந்திட வேணும்

படம் : தாய்க்குப் பின் தாரம்
இசை :
பாடியவர்கள் : பி. பானுமதி

அசைந்தாடும் தென்றலே தூது செல்லாயோ - தேன்
அமுதான கவிபாடிச் சேதி சொல்லாயோ

- அசைந்தாடும்

அலையைப் போலே ஆழியின் மேலே - உள்ளம்
அலைமோதும் வேளை ஆசையினாலே
நிலை தடுமாறுதே விழிகளும் தேடுதே
நினைவிலுமே கனவிலுமே அவரை நாடுதே

- அசைந்தாடும்

கலையா கற்பனையா காவியமா
கண்ணால் பேசும் ஓவியமா
காதலின் தியாகமா கடந்திடும் யோகமா
காரணமே நானறியேன் என் மனம் ஏங்குதே

- அசைந்தாடும்

படம் : தாய்க்குப் பின் தாரம்
இசை : K.V. மகாதேவன்
பாடியவர்கள் : T.M. சௌந்திரராஜன்

தொகையறா

தந்தையைப் போல் உலகிலே தெய்வமுண்டோ
ஒரு மகனுக்கு சர்வமும் அவனென்றால்
இந்தை யுண்டோ

– தந்தையைப்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஔவையின் பொன்மொழி வீணா
ஆண்டவன் போலே நீதியைப் புகன்றால்
அநுபவமே இது தானா

தொகையறா

உண்ணாமல் உறங்காமல்
உயிரோடு மன்றாடி
என் வாழ்வின் இன்பமே
எதிர் பார்த்த தந்தை எங்கே

– உண்ணாமல்

கண்ணிமை போலே என்னை வளர்த்தார்
கடமையை நான் மறவேனோ
காரிருள் போலே பாழான சிதையில்
கனவானார் இது தானா – தந்தை
கனவானார் இது தானா

– அன்னையும் பிதாவும்

படம் : தாய்க்குப் பின் தாரம்
இசை :
பாடியவர்கள் : T. M. சௌந்திர ராஜன்
P. பானுமதி

பெ : என் காதல் இன்பம் இதுதானா
சிறைக் காவல் நிலை தானா
— என் காதல்

காதலே இல்லையேல் உலகிலே
சாதல் ஒன்றே தெய்வீகமே
கனவோ நினைவோ காணல் நீராகுமா
கவலையின் நிலை மாறுமோ

ஆ : வாழ்வினிலே ஒரு நாள் பொன்னாளாய்
வாழ்ந்தாலும் போதும் ஜீவிதமே
— என் ஜீவிதமே
கனவோ நினைவோ காணல் நீராகுமா
கவலையின் நிலை மாறுமோ

பெ : என் காதல் இன்பம் இதுதானா
சிறைக் காவல் நிலைதானா
என் காதல் இன்பம் இதுதானா

படம் : கலைவாணன்
இசை :
பாடியவர்கள் : பி. லீலா - குழுவினர்

லீலா : இருக்காரா இங்கிருக்காரா - எனை
வென்றிடும் ஜோடி இருக்காரா

கோரஸ் : ஹோய் - ஹோய்... ஹோய்
ஹோய் - ஹோய்... ஹோய்

லீலா : இருக்காரா இங்கிருக்காரா - எனை
வென்றிடும் ஜோடி இருக்காரா
ஆடலிலே பாடலிலே
அழுக்கி குலுக்கிடும் - எந்தன்
அழகினிலே

- இருக்காரா

ஓ... கஜ்ஜை கட்டி நான் ஆடினால்
ஜஜ்ஜை இட்டு நான் பாடினால்

ஹரி : ஹை ஆடினால் நான் பாடினால்

லீலா : ஜிகு ஜிகு நடையிலும் தக தக உடையிலும்
ஜில்லென உள்ளமே துள்ளிட கில்லுவேன்
சொக்கிய மனமே பண்படுமே
சொர்க்கமும் இங்கே தென்படுமே
- மெய் மறந்திடுமே

- இருக்காரா

ஸரிகமபதநி ஸ்வர ராகமுடன்
சாளயமாகவே பாடுவேன்
தத்திமி திமிகிட தாளங்கு திமியென
ஜதியுடன் நாட்டியமாடுவேன்
சரி ஜோடியோடு சவாலு செய்வேன்

ஹரி : நான் சவாலு செய்வேன் சவாலு செய்வேன்
என்னை அடைந்தோர்க்கு
சலாமும் செய்வேன் ஜியோதி... ஜியோதி

படம் : கலைவாணன்

இசை :

பாடியவர்கள் : கண்டசாலா, P. B. ஸ்ரீனிவாஸ்

காசி : கலை சாரதா தேவி என் தாயே
கனிவான இன்பமருள்வாயே நீயே

— கலை

மானா : கானமேவும் இயலோடிசையாலே
கலைஞர் உள்ளமதில் காவியம் போலே

காசி : கலைஞர் உள்ளமதில் காவியம் போலே
கண்கள் போல் உலவும் பாரதியே
கடைத் தேறிட வரமருள்
மறைபுகழ் திருக்
கலை சாரதா தேவி என் தாயே
கனிவான இன்பமருள்வாயே நீயே

படம் : தேடி வந்த செல்வம்
இசை :
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்
பி. வி. ரத்தினம்

ஆ: பூவாடை .....
பெ: என் பாவாடை ......
ஆ: பூவாடை நீ எனக்கு
பாவாடை நான் உனக்கு
பொருத்தமான வயசு - ரெண்டும்
அழுத்தமான மனசு - ரெண்டு
பொருத்தமான.......... பூவாடை
பெ: நீ வாரது தெரியுது என்னை மாமா
ஆ: ஆமா
பெ: நீ வாரது தெரியுது என்னை
தூண்டிக் கிளிபோல அடைச்சி வச்சி
இல்லாப் பெட்ட ராஜா - நான்
கொடுத்து வச்ச ராஜா

ஆ: நம்ம - மனசும் மனசும் ஒண்ணாச் சேர - பூவாடை
மாசக் கணக்கும் ஆச்சு - பல
மாசக் கணக்கும் ஆச்சு
பெ: அந்த - மதுரராஜன் தயவினாலே
ஆ: சம்மதமாகிப் போச்சு
மதுரைவீரன் மேக்கோட்டையில்
பெ: மறந்தும் நாளாச்சு
மச்சான் உனக்கு சீக்கிரமே
அச்சாரந்தான் கொடுக்கப் போறேன்

ஆ: கட்டெறும்பு கரும்புக்காகக் - பூவாடை
காத்து இருந்தது
பெ: கால நேரம் வந்ததுமே
கவலை தீர்ந்தது
ஆ: கட்டை வண்டி மாடு போல
ஜோடியும் சேர்ந்தது
பெ: கண்ணு ரெண்டும் பேசப் பேச
கதையும் முடிஞ்சது

- பூவாடை

படம் : தேடி வந்த செல்வம்
இசை :
பாடியவர்கள் : டி.எம். சௌந்திரராஜன்
டி. சுசீலா

ஆ: பங்குனி போய் சித்திரை வந்தா
பத்திரிகை வந்திடும் - கல்யாண
பத்திரிகை வந்திடும்
பெ: அதைப் பார்த்தவுடனே தான் எனக்கு
நித்திரையும் வந்திடும்

- பங்குனி போய்

ஆ: பெத்தவங்க மனசு போல
நிச்சயமா முடிஞ்சிடும்
பெ: பித்துப் பிடிச்ச எம் மனசும்
அப்பவே தெளிஞ்சிடும்

- பங்குனி போய்

ஆ: கருவ மரமே நீயே சாட்சி
காதலி இவள் தானே - என்
காதலி இவள் தானே
பெ: கன்னி மரமே நீயே சாட்சி
காதலர் இவர் தானே - என்
காதலர் இவர் தானே
ஆ: கன்னித் தமிழன் வாழ்வினில் கண்ட
காவியம் நீ தானே - இன்பக்
காவியம் நீ தானே
பெ: அதில் - கண்ணகி போல வாழப் பிறந்த
ஓவியம் நான் தானே - உயிர்
ஓவியம் நான் தானே

- பங்குனி போய்

ஆ: படிகப் படிகப் பாலும் புளிக்கும்
பழமொழியை நாம் மறக்கணும்
பெ: வெளிப்-படைக்குக் காட்டிடும் பெண்களைப் பார்த்தா
பத்தியமாகவே இருக்கணும்
ஆ: நீ தாயும் ஆகிட வேணும்
பெ: நீங்க தந்தையும் ஆகிட வேணும்
இரு: நல்ல - தங்கச் சிலை போல் தங்கக் குட்டிக்கு
தாலாட்டுப் பாட வேணும்

- பங்குனி போய்

படம் : குறவஞ்சி
இசை :
பாடியவர்கள் : ஏ. எல். ராகவன்
எம். எஸ். ராஜேஸ்வரி

நண்டு : நடையா நடையாகி - அடி
நாதாங்கி காதாகி - நீ
சிமிட்டி நடக்கையிலே
இவன் பசிபோகுதடி - என்
இவன் பசிபோகுதடி
அடி அத்தாச்சி நாடி பத்தாச்சி - என்
ஆசையெல்லாம் அங்கே அடகு வச்சாச்சி

வண்டு : வித்தாச்சி என்னை வித்தாச்சி - இந்த
விலைமதியா மச்சானுக்கே
வித்தாச்சி என்னை வித்தாச்சி

நண்டு : கண்ணிரண்டும் பேசி களைச்சி போச்சுது - இங்கே
காத்திருந்து உடம்பு இளைச்சி போச்சுது
வண்டு : என்ன மருந்து போட்டுட்டியோ தெரியலே - எனக்கும்
உன்னை விட்டு பிரிஞ்சிருக்க முடியலே
நண்டு : தனியா வீடு கட்டிக்கணும் - அங்கே
சந்தடியில்லாம பார்த்துக்கணும்
வண்டு : மனசு விட்டு பேசிக்கணும் - என்னை
மறந்திடாம நேசிக்கணும்
நண்டு : மாசக் கணக்கிலே எண்ணிக்கணும் - நீ
மருந்து தீட தின்னுக்கணும்
வண்டு : நீ பெண்ணு
நண்டு : ஆமா நான் பெண்ணு, நீ பெண்ணு
அப்புறம் மேலே பெண்ணு
இருவரும் : குவா ...... குவா ....... குவாங்
ஆராரோ .... ஆரிராரோ

படம் : ஜீவந்தி
இசை :
பாடியவர்கள் :

எந்நாளும் தண்ணியிலே
எங்கப் பொழப்பே இருக்கு
ரா... ரா... ரா... ரா...
ஆழ கி வாரா... ரா... ரா...

படம் : இறவுஞ்சி
இசை :
பாடியவர்கள் : டி.பி. ஜெயராமன்
P. லீலா - P. சுசிலா

கிரி : காதல் கடல் கரை ஓரமே என் கண்ணே
காத்திருந்து நானே தவம் புரிகின்றேனே
— காதல்

குமரி : காதல் கடல் கரை ஓரமே என் கண்ணே
காத்திருந்து நானே தவம் புரிகின்றேனே

பொன்னி : நித்தம் உன் காலடியை தேடி
இணையாடி வந்து
முத்தமிடும் அலையாக மாறிடுவேனே

குமரி : நித்தம் உன் காலடியைத் தேடி
இணையாடி வந்து
முத்தமிடும் அலையாய் நான் வாழ்ந்திருக்கேனே

கிரி : முத்தமிடும் அலையானால் முத்தாகவே மாறி
முழு மதி போலவே ஜொலித்திடுவேனே
ஒளி வீசிடுவேனே

கிரி
பொன் } காதல் கடல் கரை ஓரமே கண்ணே
காத்திருந்து நாமே தவம் புரிவோமே
காதல் கடல் இன்பமே
காதல் கடல் என்றுமே
காதல் கடல் கரை ஓரமே - கண்ணே
காத்திருந்து நாமே தவம் புரிவோமே

படம் : சதாரம்
இசை :
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்
எஸ். ஸி. கிருஷ்ணன்

அழகு : லாபமா நஷ்டமா - நைனா
லாபமா நஷ்டமா
அரசாங்கம் நம்ம கையில் வந்ததாலே
நாட்டிலுள்ள மக்களுக்கு நம்மளாலே
- லாபமா நஷ்டமா

சாலையிலே நிக்கும் மரம் சர்க்காரு வச்ச மரம்
ஆருமேலே சாஞ்சதுனா ஆபத்து. அவன்
ஆவியது போகுமின்னு யூகிச்சு - நல்லா
வேரைக் கெல்லி மரத்தையெல்லாம்
வெட்டித் தள்ளி காயவச்சு
வித்துவிடச் சொல்லிவிட்டேன் காசுக்கு
விறகு பஞ்சம் தீர நம்முடைய ஊருக்கு
- நைனா லாபமா நஷ்டமா

ரங்கமன்னார் :
பழங் கொடுத்து பலன் கொடுக்கும்
பலமரமும் போனா கிடையும் ஏது
பணமும் ஏது லாபமேது நைனா

அழகு :
சத்திரங்கள் இருப்பதாலே தண்டச் சோத்து
சாமிகளே ஜாஸ்தியாகி போச்சி நம்ம நாட்டிலே
- அதுங்க
சஞ்சரிக்க வேண்டியது காட்டுலே - அதனால்
இத்தனமே எங்குமுள்ள சத்திரங்களை
இடிச்சு தள்ள உத்தரவு போட்டுவிட்டேன் நேரிலே
என்னைப் போல் புத்திசாலி யாரு இந்த
ஊரிலே

இதனால் லாபமா நஷ்டமா

தொடரும்.

படம் : சதாரம்
இசை :
பாடியவர்கள் : எஸ்.வி. இருஞ்ஞனன்

சுண்டல் காரம் சுண்டல்
காயம் கருவேப்பிலை கூடண்டு
சகாயம் தான் டப்பு போடண்டு

— சுண்டல் காரம்

காசு பணமெல்லாம் தூசி போல் நெனச்ச
கர்ண ராஜு அப்போ - நாகி
கஷ்ட காலமே வந்ததுனாலே
காரம் சுண்டல் விக்க வந்தேனிப்போ

— சுண்டல் காரம்

சுண்டல் காரனென்று இண்டல் ஏத்துக
ஜோராய் வாழ்ந்தவன் செல்லிதேது
ஜோராய் வாழ்ந்தவன் செல்லி - நாது
போனதையாலே அந்தா போயி
உனை சித்தரேன் - தில்லி, . . தில்லி

— சுண்டல் காரம்

நான் - இருந்த இருப்பு போயிந்தே - நா
நா - இருப்பு பெட்டி கோயிந்தே
நாகி - மருந்து வாங்கவும் டப்பு இல்லாம
மசாலா சுண்டல் விக்கவும் வந்தேன்

— சுண்டல் காரம்

படம் : சதாரம்
இசை :
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்

பட்டுப் பட்டாடையும் கட்டி
பகட்டான கிரீடம் சூட்டி
கத்திக் கட்டாரியும் பட்டி
கஸ்தூரி பொட்டுப் பெட்டி
அழகேசராஜனும் வச்சாரு - ஏ
அத்திரி அல்வா
அந்தனா ராஜனும் வச்சாரு - ஏ
அத்திரி அல்வா

அப்பாவி சேனாபதி - சமையல்
பணியாந்தா - ஆயிந்தா
சப்பாயி போலவே துள்ளாட்டம் சேஸ்தாவு
செப்பவாரி கிட்டே இல்லாவும் வேஸ்தாவு
- அப்பாவி சேனாபதி

பகியுவானுரானைப் போல வச்சே
பப்பானி பண்ணு - இந்த
பட்டா கத்தியில் யுத்தம் ஜேசி
பாரது வண்டு ஏக்... மார்... தோ... துக்கடா

கோழி தீனா பொழுது விடியுது
தீடு ஆகினா பசியும் மாறுது
மேகம் வச்சிருந்தே மழையும் பெய்யுது
தாகம் வச்சிருந்தே - தண்ணி கேக்குது
யோகம் வச்சிருந்தே தலையை கனக்குது
யுத்தமும், புத்தமும், சத்தமும் கலிகின
அழகேசராஜனும் வச்சாரு - அட
அத்திரி அல்வா
அந்தாயு ராஜனும் வச்சாரு - ஏ
அத்திரி அல்வா

படம் : சதாரம்
இசை :
பாடியவர்கள் : கே. ஆர். ராமசாமி

ராஜாத்தி கண்ணே ராஜாத்தி
கண்ணே ராஜாத்தி பெண்ணே ராஜாத்தி
— உன்
ராப்தாவுக் கெல்லாம் - இங்கே
ஜாப்தாவும் போட்டாச்சு

— ராஜாத்தி

ராம் பட்டா பரம்பரை - அந்த
வாலாபுரம் வடகரை - நான்
ராம் பட்டா பரம்பரை
வாலாபுரம் வடகரை
ஏன் இப்படி நிக்கிறே - இன்னும்
நீ யாரைப் பார்த்து சொக்குறே

— ராஜாத்தி

நீ - பணக்காரன் சொத்து
நான் - பட்டாளி வித்து
நீ - பகட்டான முத்து
ஏழை - பங்காளி கொத்து
இந்த - பாராளும் ராணிக்கிப்போ
வந்திருச்சே தித்து

— ராஜாத்தி

காத்திருந்தவன் பெண்சாதியை
நேத்து வந்தவன் கொண்டு போனா
கதையுந் தெரியுமா
ஆத்திரத்தால் அறிவிழந்து
ஆசை ஏணபணைத் மறந்து
கொத்திரத்தைக் கெடுக்க வந்த
கோடாரிக் காம்பே - என்

— ராஜாத்தி

படம் : சதாரம்
இசை :
பாடியவர்கள் : கே. ஆர். ராமசாமி

## கள்ளர் பாட்டு

இல்லாதி இல்லனடா - உங்களை
வேட்டு வச்ச கள்ளனடா
துள்ளாட்டம் போட்டதெல்லாம்
சுருண்டுப்பா போகுதடா - பங்காரு
அட அங்கொங்காரு
அவனைப் பாரு மன்னாரு - எங்க
அம்மா மவன் உங்கிட்ட என்ன சொன்னாரு

கன்னக்கோல் ராஜாவாம்
கத்திரிக்கோல் மந்திரியாம்
கொன்னக்கோல் தாளத்துடன்
குமுறுது ஓப்பா போகுதடா - ஜவ்வாது
எங்கப்பா ஜவ்வாது - அது
நமக்கு ஒவ்வாது - அந்த
செத்தப் பாம்பு தவளையே தான் கவ்வாது
டம்பமாய் பெண்களிடம்
டாவு செய்த கோமாளி - உன்
ஜம்பம் ஒண்ணும் சாயாது நீ சரியான ஏமாளி

அதிவீர சிங்கம் என்றால்
ஆகாயம் தான் பறக்கும்
ஆலாட்டம் போட்டு சும்மா துள்ளாதே - உந்தன்
ஊலாட்டம் எல்லாம் இங்கே செல்லாதே
ஏ டங்கிரி கண்ணா, டமார சிப்பா
சங்கிலி திருடன் நான்தானப்பா
ஆலாட்டம் போட்டு சும்மா துள்ளாதே - தம்பி
உந்தன்
ஊலாட்டம் எல்லாம் இங்கே செல்லாதே....
துள்ளாதே...

படம் : புதுமைப் பித்தன்
இசை :
பாடியவர்கள் : சந்திரபாபு - P. லீலா

தொகையறா

ஆ: ஆராய்ச்சிக் கடலிலே
அறிவென்னும் படகை ஓட்டி
அனுபோகம் என்றதோர்
வெற்றிக் கொடியை நாட்டி வாழ்ந்திடுவோம்
இல்லானை பாட்டு பாடி சொன்னாங்கோ இங்கே
இல்லா நீ போடாதே சொன்னாங்கோ

பெ: இல்லாத இல்லறமெல்லாம் அம்புக்கானா
இழியாலே பலியானார் அம்புக்கானா - ஏங்க
ஆ: இல்லானா இல்லானா ....... சொன்னாங்கய்யா

ஆ: அண்டமா முனிவரெல்லாம்
அடங்கினார் அந்திக் காலம் - அதை
அறிந்துதான் உயிர்கள் இழியாலே - ஆனாலும்
அசைய மாட்டார் இந்தக் காலம் - இல்லானா
பெ: வானும் புவியும் வெண்பாவும் தொட்டிலே போல
வாயினாலே பேசிடுவார் பிறகு
வைத்தியரும் அறியாத
வைத்தியம் செய்து தேற்றி
வலியை வந்து காலில் விழுவார்
ஆ: அப்படியா
பெ: முன்னே எப்படியாம்
நிலவில்லாத நிலவில்லே நிலவில்லாத மேகமில்லே
மலரில்லாத இசையில்லே இசையில்லாத
தெருவில்லே

ஆணில்லாத பெண்ணில்லே
பெண்ணில்லாத ஆணில்லே புரியுதா
ஆ: புரியுதே.. புரியுதே.. புரியுதே...
மனைவியான என் மனதை சொன்னாங்கய்யா

உள்ளியாலே பேத்திட்டியே சொன்னாங்கய்யா - அந்த
பெ: கல்யாண ஆட்டிமெனாயும் அம்புக்கானா
கனியாலே பலியானார் அம்புக்கானா
இரு: இல்லானா பாட்டைப் பாடி ஆடுவோமே - நாம்
எல்லோரும் ஒன்றாக வாழுவோமே

படம் : புதுமைப் பித்தன்
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : C. S. ஜெயராமன் - ஜிக்கி

பெ : உள்ளம் ரெண்டும் ஒன்று - நம்
உருவம் தானே ரெண்டு
ஆ : உயிர் ஓவியமே - கண்ணே
நீயும் நானும் ஒன்று
— உள்ளம் ரெண்டும்
பெ : காதல் ஜோதி வானிலே
கலையாய் திகழ்வோமே
கண்ணாளா அநுராகத்திலே
களித்தே மகிழ்வோமே
ஆ : அன்பே அநுராகம்
அது தானே வாழ்வின் யோகம்
அசைந்தாடும் பூங்கொடியே
ஆசை தென்றல் நானே

பெ : கானில் மேவும் நிலவே - இன்னலை
காதல் வெல்லும் இலையோ
ஆ : வானில் மேவும் வளர்மதியே
வாழ்வில் இன்பம் நீயே

— உள்ளம் ரெண்டும்

படம் : புதுமைப் பித்தன்
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : பி. லீலா

தேன் மதுவை வண்டினம் தேடி வரும்
இன்பமாய்
வான்மதியை வெண்முகில் நாடி வரும்
— தேன் மதுவை

நிராழிபோலே நிலையாததாலே
ஆராய்ந்து பாராமல் பேராசையாலே
தீராத வீண் மோகம் கொண்டதாலே
வீணாத சதியாலே முடிவானதாலே
— தேன் மதுவை

காணாத இன்பம் கண்டாலே துன்பம்
வாழ்நாளும் இன்றோடு வீணாவதோ
மாணார்கள் விதியாலே மயங்காதே ராஜா
மதியோடு விதி ஆடும் கலங்காதே ராஜா
— தேன் மதுவை

படம் : புதுமைப் பித்தன்
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : C.S. ஜெயராமன்

மேளம் கொட்டி தாலிகட்டி
மேதை போல வாழ்ந்திட்டாலும்
பாதை விட்டு பாதை மாறி போவதோ - கண்
பார்வை கெட்டு பள்ளந்தேடி விழுவதோ

பாச மிகும் ஆசையோடு நீ
பாவை ஊட்டிட ஆவலாகவே
பாடுபட்டு பாம்பை தேடலாகுமா...
கூடு விட்டு கூடு பாய்வதாகுமா
நானும் கெட்டு நீயும் கெட்டு
நம்பி வந்த ஆளும் கெட்டு
தானும் கெட்டு திரிசங்கனதோம் போடவா
தாளந் தேடி காலை தூக்கி ஆடவா
— ஆதி தானும் கெட்டு

ஆணையிட்ட ராஜாவெல்லாம்
நாணப்படும் போது - இந்த
ஓணாப் போன மனுஷன் போடும்
வெளிச்சமும் பலிக்காது

கைலாசத்துக்கு போகு வழியைக்
காட்டு கொடுத்தும் பார்ப்போம் - அதைக்
காணாத இந்தக் கூட்டத்தையும்
அங்கே கொண்டு சேர்ப்போம்

வித்தாரமா செப்படி வித்தையில்
மயங்கிடாதே அப்பா — நீ
செத்தாலும் பிழைக்கமாட்டே
தெரிஞ்சுக்கடா அப்பா

தனானந்தோம் தந்தனத் தான
தந்தானந்தோம் தானே

படம் : புதுமைப் பித்தன்
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : C. S. ஜெயராமன்

கரும்பும் எறும்பும் போலே
காவியும் இருவோரும் போலே
இரும்பும் காந்தமும் போலே
இருக்கணும் மறக்காமலே

மானே உன் மேல் மையலானேன் நில்லு நில்லு
தேனே உந்தன் இஷ்டமென்ன சொல்லு சொல்லு
தேகமெல்லாம் உன்னாலே
தேனாக கொட்டுதடி - இந்த
பாகமெல்லாம் தன்னாலே
பாம்பாக் கடிக்குதடி
மோகத்தினால் என்னை மிக
மேல் பிச்சி வாங்குதடி
கண்ணே என் ராஜா பெத்த ரோஜா பூவே
கண்ணால் ஜாடை காட்டி விட்டாள் நானே போனேன்

— மானே உன் மேல்

படம் : மாயாபஜார்
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : திருச்சி லோகநாதன்

கல்யாண சமையல் சாதம்
காய்கறிகளும் பிரமாதம் - அந்த
கௌரவ பிரசாதம் -
இதுவே எனக்குப் போதும்
ஹ ஹ ஹ் ஹ ... ஹ ஹ் ஹ ஹா
— கல்யாண சமையல் சாதம்

அஹ்ஹா பஜ்ஜி அங்கே
அஹ்ஹா சொஜ்ஜி இங்கே
சந்தோஷம் பீறிப் பொங்கி
இதுவே எனக்கு திருப்தி
— கல்யாண சமையல் சாதம்

புளியோதரையும் சோறு - வெகு
பொருத்தமாய் சாம்பாரு
பூரிக் கிழங்கு பாரு
இதுவே எனக்கு ஜோரு.
— கல்யாண சமையல் சாதம்

ஜோரான பேணி லட்டு
சுவையான சீனி புட்டு
ஏராளமான திட்டு - இனி
இஷ்டம் போல வெட்டு
— கல்யாண சமையல் சாதம்

ஹ ஹ ஹ் ஹ ஹ ஹ் ஹ ஹ ஹ் ஹா

படம் : மாயாபஜார்
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : கண்டசாலா
P. லீலா

ஆஹா இன்ப நிலாவினிலே
ஓஹோ ஜகமே ஆடிடுதே
ஆடிடுதே விளையாடிடுதே

— ஆஹா இன்ப

தாரா சந்திரிகை உலாவும் நிலையிலே
தவழும் நிலவின் அலைதனிலே - அலைதனிலே

— தாரா சந்திரிகை

தேன் மலர் மதுவை சிந்திடும் வேளை
தென்றல் பாடுது தாலேலோ

— ஆஹா இன்ப

அலையின் அசைவிலே ஆசை நிலையிலே
நிலை மறந்தோடும் நேரத்திலே - காலத்திலே

— அலையின் அசைவிலே

கலைவாண் மதி போல் காதல் படகிலே
காணும் இன்பம் அநுராகத்திலே

— ஆஹா இன்ப

படம்: மாயா பஜார்
இசை: கண்டசாலா
பாடியவர்கள்: கண்டசாலா
P. லீலா

பெ: உனக்காகவே நான் உயிர் வாழ்கிறேனே
உறவும் தாபமே இனி எதிர்த்தாலுமே
நிம்மதி வானில் முகில் சேர்ந்தாலும்
என் மனம் தன்னில் இருள் சூழ்ந்தாலும்

— உனக்காகவே நான்

ஆ: ராகத்தின் கனவே சுகமாகாதா
இதயத்தின் நினைவே இனிமையாகாதா
பிரிவினில் காணும் இன்பத்தைப் போல
பேரின்பம் வேறுண்டோ
உயிரோவியமே உனையே பிரியேன்
உனது ஞாபகம் நானே மறவேன்

— உனக்காகவே நான்

பெ: இதயமே உன்னை இணைந்து சென்றாலும்
இன்பக் கனவெல்லாம் மறைந்து விட்டாலும்
இணையேதுமில்லா பிரேமையினாலே
இதுநாள் வரை தானே

— உனக்காகவே நான்

ஆ: கனவிலும் நீயே நினைவிலும் நீயே!
மனமாளிகையில் மகிழும் தேவியே
உலகமே யாவும் ஒன்றாயினும் என்
உடலும் உயிரும் நீயே

— உனக்காகவே நான்

படம் : மாயா பஜார்
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : பி.டி. கிருஷ்ணன், கோமளா

தங்கமே உன் போல
தங்கப் பதுமையை
தங்கத்திலே தேடியும் யாருமில்லே - உன்னை
எப்பவும் எண்ணாத நேரமில்லே
தங்கமே ஆசைத்தங்கமே நாணத்தங்கமே

தூரமில்.. தூரமில்!

தூரம் தூரம் என்று
சொல்லாதே துள்ளாதே
தூரப்புலி போல யாருமில்லே - இ
காதல் ஜோடியே என் கல்யாணம்
தூரமில்லே தங்கமே ஆசைத்தங்கமே

நிறுத்துங்க போதும் !

போதும் போதும் என்று
புள்ளியை வைக்காதே
பொண்ணு கேட்க
மன்னன் வேணும்லே - இந்த
பூமியில் என் போல ஆளுமில்லே
தங்கமே ஆசைத்தங்கமே நாணத் தங்கமே

பெரியவங்க எல்லாம் ?

பெரியவன் சிறியவன்
பேரைச் சொல்லிச் சொல்லி
பேசுவதில் ஒண்ணும் சாரமில்லே
கொஞ்சம் ஆசை வைச்சால்
இன்பம் இருக்குமில்லே
தங்கமே ஆசைத் தங்கமே நாணத் தங்கமே
தங்கமே ... ங்கமே ... கமே ... மே ... மே...

படம்: மாயாபஜார்
இசை: கண்டசாலா
பாடியவர்கள்: P. லீலா

டும் டும் என் கல்யாணம்
ஜம் ஜம் என் கல்யாணம்
உங்களுக்கு கொண்டாட்டம்
உலகமெல்லாம் கொண்டாட்டம்
டாம்.. டாம்.. டாம்.. டாம்
— டும் டும் என்

வில்லாதி வீரர்களாம் நாணிக்கும் வீரர்களாம்
கொல்லை கொல்லையாகவே
சம்பந்திங்க வந்திட்டாராம்
அப்பப்பா அப்பப்பா போ
— டும் டும் என்

அன்ன நடை அந்தரியாம்
மின்னலிடை பெண் இவளாம்
என்னைக் கண்ட மாப்பிள்ளையும்
ஏங்கி பிச்சாவானாம்
அய்யய்யோ அய்யய்யோ

— டும் டும் என்

தாலி கட்ட வருவானாம்
தூக்கி காட்டி கிடப்பேனாம்
தலையின் மீது குதிரை ஏறி
சாகசமாய் விளையாடுவானாம்
ஹா ... ஹா ... ஹா
— டும் டும் என்

படம் : மாயாபஜார்
இசை : கண்டசாலா
பாடியவர்கள் : கண்டசாலா
P. லீலா

ஆ: கண்ணுடன் கலந்திடும் சுபதினமே
கண்ணே உனக்கேன் கலவரமே
காதல் கனியே கனிரசமே - உன்னைக்
கண்டேன் களித்தது என் மனமே

பெ: கண்ணுடன் கலந்திடும் சுபதினமே
கண்ணா உனக்கேன் பரவசமே
ஏகாந்தமதில் இதயம் மகிழ்ந்தே
என் கனவே நினைவானதே
- கண்ணுடன்

ஆ: கானில் உலாவிடும் கோகிலமே - உன்
கானாமிர்தமே ஆனந்தமே
கலாப மயில் போல் உலாவும் கலையே
கலைமான் விழியே காவியமே
- கண்ணுடன்

பெ: மலர்க்கணையாலே மாரனைப் போலே என்
நிலையறியாமலே வீசுவதேன்
மலர்க்காவினிலே வீசிடும் சாரமும்
மங்கையின் இடம் உன் பிரதாபமே
- கண்ணுடன்

படம் : மிஸ்ஸியம்மா
இசை : ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : பி. லீலா.

<u>மோஹி</u>

மாயமே நானறியேன் ..... ஓ.....
தண்மதி ராஜா வெண்ணிலா ராஜா
மாயமே நானறியேன்

அழகு நிலாவே உனது மகிமையை
அறிந்திருந்தாலும் அனுபவியேனே
மறைந்தே தாவிடும் கலையின் ஜோதியோ
மறைந்திக்காகவே நானிறிவேனே

— மாயமே நானறியேன்

கண்ணில் கலக்கமிடும் கதிரவையாலே
கரைந்திட உள்ளமே கனிந்தேனே
அன்னையே கோரி அருகினில் யாரோ
அழைப்பது போலே நானுணர்ந்தேனே

மாயமே நானறியேன்

படம் : மிஸ்ஸியம்மா
இசை : ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : பி. லீலா

<u>தொகையறா</u>

ராகா ஸாமிர்த பானமே தினமே
ரஞ்சிதமே... ஓ... மனமே

— ராகா

யாக யோக தியாக போக
பாக்யம் தருமே

— ராகா

சதாசிவ மயமென்னும்
நாத ஓம்காரஸ்வர
தியானமே ஜீவன் முக்தி
சுகம் காணுமே தினமே

— ராகா

படம் : பிள்ளையம்மா
இசை : [illegible] ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : [illegible] பி.லீலா

எனையாளும் மேரிமாதா
துணை நீயே மேரிமாதா
- எனையாளும்

பரிசுத்த ஆவியாலே
வரபுத்திரன் பெற்ற தாயே
பரம யேசுநாதன் அருளால்
புவியோரும் புனிதமடைந்தார்
- எனையாளும்

நெறி மாறி வந்த தாலே
நகைப்பானதே என் வாழ்வே
கணமேனும் சாந்தி இல்லையே
அனுதினமும் சோதியாதே
- எனையாளும்

படம் : மிஸ்ஸியம்மா
இசை : ஸாலூரு ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : ஏ.எம். ராஜா
பி. லீலா

பிருந்தாவனமும் நந்தகுமாரனும்
யாவருக்கும் பொதுச் செல்வமன்றோ
ஏனோ ராதா இந்தப் பொறாமை
யார்தான் அழகால் மயங்காதவரோ
— பிருந்தாவனமும்

புல்லாங்குழலின் இனிமையினாலே
உள்ளமே ஜில்லெனத் துள்ளாதா
ராகத்திலே அநுராக மேலினால்
ஜெகமே ஊஞ்சலி லாடாதா

— பிருந்தாவனமும்

கண்ணனின் உன்னத லீலையை நினைத்தால்
தன்னையே மறந்திடச் செய்யாதா
ஏனோ ராதா இந்தப் பொறாமை
யார்தான் அழகால் மயங்காதவரோ

— பிருந்தாவனமும்

படம் : மிஸ்ஸியம்மா
இசை : எஸ். ராஜேஸ்வரராவ்
பாடியவர்கள் : பி. லீலா

தெரிந்து கொள்ளணும் பெண்ணே - அதைப் போல்
நடந்து கொள்ளணும் பெண்ணே
நிலை மாறிடும் ஆடவருடன்
நெருங்காமலே பழகவே
- தெரிந்து கொள்ளணும்

தனக்கு உதவி வேண்டுனாலும்
தானாகவே போகாதே
இனிக்கப் பேசி அவதூறாய்
ஏளனமே செய்வாரென்று
- தெரிந்து கொள்ளணும்

பல வார்த்தைக்கும் ஒரு வார்த்தை
பதிலே சொல்லக் கூடாது
பல பொருள்பட இல்லாததைப்
பறை சாற்றவே துணிவாரென்று
- தெரிந்து கொள்ளணும்

படம் : பிள்ளையம்மா
இசை : ஸாலூரி ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : ஏ.எம்.ராஜா

பழகத் தெரிய வேணும் - உலகில்
பார்த்து நடக்க வேணும் - பெண்ணே
-பழகத் தெரிய வேணும்

பழங் காலத்தின் நிலை மறந்து
இருங் காலத்தை நீ உணர்ந்து
-பழகத் தெரிய வேணும்

பிடிவாதமும் எதிர்வாதமும்
பெண்களுக்கே கூடாது
பேதமில்லா இதயத்தோடு
பெருமையோடு பொறுமையாய்
- பழகத் தெரிய வேணும்

கடுகடுவென முகம் மாறுதல்
கர்நாடக வழக்கமன்றோ
கன்னியர்கள் ஆடவரை
புன்னகையால் வென்றிடவே
- பழகத் தெரிய வேணும்

படம் : பிள்ளையம்மா
இசை : [illegible] ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : எஸ். சி. கிருஷ்ணன்

தர்மம் தலை காக்கும் - சாமி
தர்மம் தலை காக்கும்
தர்மம் செய்தால் புண்ணியமுண்டு
கர்மம் தொலையுமே - சாமி
- தர்மம்

கோடி சொத்துக்களும் வயித்துக்காகவே
ஒண்ணுதே உடல் பிச்சை கேட்கவே
பார்வை இல்லாமலே பார்க்கப் பிறக்கவே
பாடுபடவும் ஒரு வழியும் தெரியலே
- தர்மம்

ஐஸ்கிரீம் தின்றால் பசியடங்காது
காசிருந்தாலும் வயிறு நிறையாது
செய்யும் தானமே சிறியதானாலும்
தீராத வினையும் தீருமே சாமி
- தர்மம்

ஐயா கொடுக்கவும் அடியேன் வாங்கவும்
எல்லாம் பூர்வீக பந்தமே சாமி
பிச்சை இட்டதையே நீ மறந்தாலும்
பிரம்மாவும் ஏட்டிலே வரவு வெச்சிட்டான்
ஐயா.... சாமீ.... அப்பனே

- தர்மம்

படம் : மிஸ்ஸியம்மா
இசை : எஸ். ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : ஏ.எல். ராகவன்

சீதாராம் - ஜெய் - சீதாராம்
சீதாராம் - ஜெய் - சீதாராம்

உள்ளே விகாரம் வெளியில் அபாரம்
உலகமெல்லாம் இன்று டம்பாச்சாரம்
- சீதாராம் - ஜெய்

தன்னலமில்லாத தலைவரென்பாராம்
தலையிலே மிளகாய் அரைத்திடுவாராம்
- சீதாராம் - ஜெய்

உண்டியும் நிதியும் சேர்த்திடுவாராம்
கிண்டி ரேஸிலே விட்டிடுவாராம்
- சீதாராம் - ஜெய்

பாண்டித்யம் பெற்ற சிங்கமென்பாராம்
பண்டைய பின்னாடி இளரால் படிச்சிருப்பாராம்
- சீதாராம் - ஜெய்

காரியம் சாதிக்க காக்கா பிடிப்பாராம்
காரியம் முடிஞ்சா டேக்கா கொடுப்பாராம்
- சீதாராம் - ஜெய்

டிப்பு டாப்பு டகல் பேப்பு டமாராம்
கலிகாலம் நம்ம இரகசாரம்
- சீதாராம் - ஜெய்

படம் : தில்லியம்மா
இசை : ஏ.எம்.ராஜா ராஜேஸ்வர ராவ்
பாடியவர்கள் : ஏ.எம்.ராஜா

முடியும் என்றால் படியாது
படியும் என்றால் முடியாது
மங்கையின் வார்த்தையிலே
அர்த்தமே வேறுதான்
அகராதியும் வேறுதான்

— முடியுமென்றால்

அழுக்கி குலுக்கி பதுங்கி நின்றால்
அருகில் ஓடி வாருமென்றே
வலியப் பேசி வாருமென்றால்
வந்த வழியைப் பாருமென்றே

— முடியுமென்றால்

வெறுப்பும் முறைப்பும் இருப்பதெல்லாம்
இதயமதிலே விருப்பமென்றே
சிரித்து சிரித்துப் பேசினாலும்
சரசமினியும் போதுமென்றே

— முடியுமென்றால்

படம் : தூக்குத் தூக்கி
இசை : K.V. மகாதேவன்
பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்

ஏறாத மலைதனிலே - ஒரு
ஜோரான கௌதாரி ரெண்டு
தாராளமா இங்கே வந்து
திகிங்கிணதும் தாளம் போடுதையா

கல்லான உங்கள் மனம்
கரைஞ்சி நின்னு எங்கையிலே
கண் கண்ட காளியம்மா - உங்களை
கருணை செய்வதுக்காவும்
தாம் திமி திமி திமி தாந்தக் கோனாரே
தீம் திமி திமி திமி தீந்தக் கோனாரே
ஆனந்தக் கோனாரே
அறிவு கெட்டுத் தான் போனாரே

செக்கச் செவேரென செம்மறி ஆடுகள்
சிங்காரமாய் நடை நடந்து
வக்கணையாக பேசிக் கொண்டு - பலி
வாங்கும் பூசாரியை நம்புதடா
- தாம் திமி திமி திமி

சோலை வனங்கள் தழைச்சிருக்க - அதை
சொந்தமாய் திங்கும் சுகமிருக்க - இந்த
பாலைவனத்தையே நம்பி வந்து
பலி வாங்கும் பூசாரியை தேடுதடா - போடு
தாம் திமி திமி திமி தாந்த கோனாரே
தீம் திமி திமி திமி தீந்த கோனாரே
ஆனந்தக் கோனாரே
அறிவுக் கெட்டுத் தான் போனாரே

படம் : தூக்குத் தூக்கி
இசை : K.V. மஹாதேவன்
பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்

சட்டாம் பிள்ளையை ஜாடை காட்டி
வரச் சொல்லி விட்டு
முட்டாள் தனமா காலி கோவில்
முன்னே வந்து நிக்கலாமா - உங்க
நிலைமையை நான் அடகு வைக்கலாமா
வாங்க வாங்க வாங்க

பூங்காவின் சிங்கார வண்டுகளா
புத்தி கெட்டுப் போன அசல் மண்டுகளா - சிங்க
தூங்காமலே கனவு கண்டிங்களா - இப்படி
ஜோடியாகவே திண்டாங்களா

மூக்கு நனைஞ்ச பின்னே
முக்காடு வேணுமா
அழுக்கி குலுக்கிக் கொண்டு
அக்காளுந் தானுமா
டிக்கானா போலும் இளம் மொட்டுகளா - சிங்க
தெரிஞ்சிருந்தும் இப்படி மதி கெட்டீங்களா
உட்டாலக்கடி சட்டாம் பிள்ளையை
நம்பி மோசம் போனீங்களா
பட்டா போலும் மயக்கத்திலே
பகுத்தறிவை விட்டீங்களா - இந்த
பராசக்தி மனசு வச்சா
பாதாளமெல்லாம் இடி இடி

பூங்காவின் சிங்கார வண்டுகளா - சிங்க
புத்தி கெட்டுப் போன அசல் மண்டுகளா
வாங்க வாங்க வாங்க

படம்: தூக்குத் தூக்கி
இசை: K.V. மஹாதேவன்
பாடியவர்கள்: டி.எம். சௌந்தரராஜன்

அபாய அறிவிப்பு - ஐயா
அபாய அறிவிப்பு - ஆத்தியார் அய்யா
அபாய அறிவிப்பு - நான்
மெய்யாக சொல்லுவதை
பொய்யாக எண்ணாதே
- அபாய அறிவிப்பு

ஆளுந் தெரியாம காலை விட்டான் - நம்
அரசாங்கத்தையே தூக்கிட்டான்
காலுந் தெரியாம இல்லாத பய - ஒரு
கல்லாலே ரெண்டு காய் அடிச்சுப்புட்டான்
- அபாய அறிவிப்பு

ஜாடையாகவே மாதுவி மல்லிகா
சிட்டாம் பின்னை வலையில் இருந்தாச்சி -
தூக்கு மேடையில் ஏறி ஊஞ்சலாடவே
சக்ர திசையும் அடிச்சிடுச்சு
சக்ர திசையும் அடிச்சிடுச்சு
- அபாய அறிவிப்பு

கண்ணாலே பாடம் சொல்லிக் கொடுத்து
கணக்கும் பண்ணிட்டான் டொய்.. டொய்... டொய்

காளி கோவிலுக்கு ரெண்டையும் வரச் சொல்லி
கம்பி நீட்டவே டொய்... டொய்... டொய்...

கம்பன் மகனான அம்பிகாபதி
கதையைப் போலவே டொய்... டொய்.. டொய்

காதலாலே பலியாகவே போறான்
கவலைப் படாதே டொய்... டொய்... டொய்
கண்ணீர் விடாதே டொய்... டொய்.. டொய்..

படம் : கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
இசை :
பாடியவர்கள் : பி. லீலா - குழுவினர்

ஜெய ஜெய ஜெய
ஜெய பாரதி - இதமே ஆதாரமே
ஜெகமேல் ஒன்றாகவே - நாம்
வாழ்வதே நன்றாகுமே

- ஜெய ஜெய ஜெய
ஒரு தாயின் குழந்தைகள் - நாம்
இனியேனும் உணர்வோமே
- ஒரு தாயின் குழந்தைகள்

ஒரு தேவன் ஒரு குலமெனும்
வேதமே ஆதாரமே

- ஜெய ஜெய ஜெய

படம் : திருடி வாழ்ந்தால் கோடி நன்மை
இசை :
பாடியவர்கள் : டி. எம். சௌந்திர ராஜன்

நாட்டு வளப்பம் அறியா
கிணற்றுத் தவளைகளே கேளுங்க - உங்க
வீட்டை விட்டு வெளியில் வந்தா
உண்மை விளங்கும் பாருங்க

நல்லாத்தான் சொன்னாரு பாரதியார்
கவி பாரதியார் தமிழ் சாரதியார்
எல்லோரும் ஒன்றாக வாழ்ந்திடவே - நலம்
சூழ்ந்திடவே
ரொம்ப நல்லாத்தான் சொன்னாரு பாரதியார்

ஞா வேறா தான் வேறா பறையணும் - எம்
நாடு விட்டு அஞ்ஞானம் மறையணும் - இனி
நாலாவிதம் பேசலாகாது - இதை
நாஸ்திகமாய் எண்ணக் கூடாது

— நல்லாத்தான்

கேளு ஒத்தே இவா ஒத்தே தேவா - ஜாதி
பந்தா இந்தா பேடா பாவா - ஓய்
இந்தாங்கணும் ஏட்டிப் போகாதே - எது
வந்தாலுமே மனம் மாறாதே

— நல்லாத்தான்

இட்டு ராவம்மா ஓ சின்னதானா - வந்து
கேளம்மா சியாந்தானா
ஜாரா தேக் கோஜி அப்துல் கபூர் - மதம்
இல்லையென்று கூறு - இனி
நமக்கேன் தாழ்வு - நாம்
கண்டால் உண்டு வாழ்வு
என் சொன்னாரு பாரதியாரு

— நல்லாத்தான்

படம் : திரு வாழ்ந்தால் கோடி நன்மை
இசை :
பாடியவர்கள் : P. B. ஸ்ரீனிவாஸ்

பதுமை தானோ
பாயும் புள்ளி மானைப் போலே
பார்வை பட்டதாலே
பாவையே என் ஆவியே
ஆவலாலே ஏங்குறேன்

மௌனம் ஏனோ
பாடி ஆடும் பருவமேடி,
உன்னருகில் எந்நாளும் நான் அழகை
காதலே...காதலே...
காதலே...காதலே...
வா... வா... வா....

காதலின் ஜோதியே
கண்ணிலே சதா சதா
உன் சாயலே நான் கண்டதால்
ஆவலும் மீறுதே
கவலை தீர கனவில் வந்து தோன்றுதே
நான் வேண்டினேன்
காவல் மீறும் காதல் ஜோடி பாராயோ
கண்ணா நீ பாராயோ
காதல் ஜோதி தீரவே நீ வாராயோ
கண்ணே நீ வாராயோ

வா... வா... வா... வா...

படம் : நீடு வாழ்ந்தால் கோடி நன்மை
இசை :
பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்

என் உள்ளத்தையே கொள்ளை கொண்ட
ஓவியம் நீயே .. உயிரோவியம் நீயே
கலை வெள்ளத்திலே நீந்தி வந்த காவியம் நானே
ஓ.....

மிஞ்சும் அழகாய் இன்றே
மின்னல் கொடி போலவே
கொஞ்சும் கிளியே - எந்தன்
நெஞ்சம் நிலைமாறுதே

— என் உள்ளத்தையே

இசைத் தென்றலிலே ஆடி வரும் தேன்மலர் நீயே
ஓ....

கோவை இதழ் மீதிலே கோபமில்லாமலே
பார்வை சதிபோடுதே பதில் சொல்லாமலே
மன ஊஞ்சலிலே ஆடி வரும் மாங்குயில் நீயே

— என் உள்ளத்தையே

அன்ன நடை மீதிலே ஆவி தடுமாறுதே
மின்னல் ஜடை மீதிலே பிரேமை தான் மீறுதே
எழில் வானமுதே — மான்விழியே
என் வாழ்வினில் நீயே ......

— என் உள்ளத்தையே

படம் : குடி வாழ்ந்தால் கோடி நன்மை
இசை :
பாடியவர்கள் : எஸ். ஜானகி

மன ஊஞ்சலிலே ஆடும் - மன்னா
மறையாதடா மணிவண்ணா
மலரோடு மணம் சேரவே
மதியோடு கலை இசைவே
கனியோடு வருவாயோ - கமலக்கண்ணா

ராதை முன்னாலே - ஆடவாடா
ரகசியம் கேளடா - கண்ணா
ஆதவன் நீயே அரவிந்தம் நானே
காதலின் சோதனை செய்யாமல் வாட
மதுவிலை ஏந்தி தேடுறான்
மதன் கணையாலே வாடுறான்
மகிழ்ந்திடவே உன்னாசை ராதா
மர்மமும் ஏனோ - தர்மமிதானோ
தாபமும் மீறுதே
கண்ணா நீ வாடா ரகசியம் கேளடா

படம் : திரு வாழ்ந்தால் கோடி நன்மை

இசை :

பாடியவர்கள் : பி. பி. ஸ்ரீனிவாஸ்

மாதா பிதாவின் மனங் குளிரச் செய்த
மங்கையர் திலகமும் நீயே

— மாதா பிதாவின்

மனதோடு உறவாடினானே - உந்தன்
மனம் போலே நிலை மாறினானே
ஆசமலர் மேனும் மனம் மாறலாச்சே
வைரமணி கூட ஒளி மாறிப் போச்சே

— மாதா பிதாவின்

கங்கணம் விலங்காகலாமா - உந்தன்
காதணி சுமையாகலாமா
சந்தனம் மணம் மாறலாமா - பண்ணிடும்
தீனவாகும் நிலை நேரலாமா

— மாதா பிதாவின்

படம் : திரு வாழ்ந்தால் கோடி நன்மை
இசை :
பாடியவர்கள் : எஸ். ஜானகி

மச்சான் உன்னைத் தானே
மாமா உன்னைத் தானே
இன்னும் புரியாததேனோ என்னைத் தானே
உன்னை எந்நாளும் எண்ணி எண்ணித் தானே

— மச்சான்

நான் ஏங்கியே நின்றேனே
என் ஆவல் தன்னை தீராயோ
அன்று - கண்ணாலே காவியங்கள் பேசி
மெய் - காதல் வலை வீசி
களித்து உள்ளம் பாராயோ - என்றும்
காணாத இன்பம் ஒன்று உண்டு
அதன் சுவையைக் கண்டு
மனம் மகிழ வாராயோ

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் :

ஜெயமே பெறவே ஜெகமே புகழவே

நாயகமே நபி நாயகமே
நலமே அருள் நபி நாயகமே
நாடாளும் மன்னர் நீடூழி வாழ
நலமே அருள் நபி நாயகமே

இணையில்லாத எங்கள் பாதுஷா - பிறந்த
இன்ப நாளிதே நாயகமே
நாயகமே நபி நாயகமே
இந்து முஸ்லீம் ஒற்றுமையோடு
இன்புற வேண்டும் நாயகமே
- நாயகமே நபி நாயகமே

அறியாமை இருள் நீங்கி இன்ப ஒளி
அடைய வேண்டும் நபி நாயகமே
நாயகமே நபி நாயகமே
அன்பின் இதயமே காணிக்கை செய்தோம்
ஆண்டவனே நபி நாயகமே

- நாயகமே நபி நாயகமே

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் : சந்திரபாபு - பி. லீலா

குலாடம் : பாராண்ட மன்னரெல்லாம்
பதுங்கியிருந்த பூமியிலே - இந்த
பச்சோந்திக் கூட்டமெல்லாம்
பகல் வேஷம் போடுதய்யா - இந்த
பச்சோந்தி.... போடுதய்யா

பாட்டு

அச்சி நிமிர்ந்த வண்டி
ஆளைக் கொண்டை சாய்க்கும் வண்டி
அநியாய வட்டியும் கேட்பாண்டி
என் தங்கமே தங்கம்

குல்சார் : ஆமாம் சிங்கமே சிங்கம்
ஆலவட்டம் போட்டுக்கிட்டு
காளைப் போல துள்ளுறீங்கோ - அந்த
வாலாட்டம் நம்மகிட்டே
வேண்டாம்னு சொல்லிடுங்கோ... ஓ....

டகல்பாச்சி வேலையும் பண்ணாதே
அட சிங்கமே சிங்கம்
டம்பாச்சாரி போலவே துள்ளாதே

தொகையறா

குலாடம் : அஞ்சாறு பெண் பிறந்தா
அரசனும் ஆண்டியடா
அறியாமல் இனிமேலே - எங்கப்பா நீ
அமிழ்ந்தி செய்யாதே - இதை
அவசியம் மறவாதே

பப்பளப்பள பட்டுகளா - அங்கே
பறந்து போற சிட்டுகளா

குல்சார் : பளிங்கு போலக் குலுங்கி நடந்து
பவுசைக் காட்டும் பெட்டுகளா

இருவரும் : நம்பவே நம்பாதீங்க - இந்த உலகத்திலே
நம்பி மோசம் போகாதீங்க

பக்காப்பழக்கு மூக்காப்பழ அளக்கிறான் - அந்த
பாதூப் போறவன் நம்பனைக் கண்டு மொறைக்கிறான்
கண்ணில்லாத கபோதியை ஏய்க்கிறான் - அந்த
கட்டையிலே போறவன் துட்டுகளை பதுக்கிறான்
ஊரை வளைச்சி உலையில் போட்டு
பிழைக்கிறது ஒரு கூட்டம்
உழைச்சதை ஏச்சி ஏச்சி
உப்புது ஒரு கூட்டம் - இங்கே

எல்லாத்துக்கும் இடம் கொடுக்கிற அல்லாவே
மொத்திட்டா போட்டுடுவான் குல்லாவே - நீயும்
ஆமாம் குலாடு.. ஆமாம் குல்சாரு......

படம்: குலேபகாவலி
இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள்: திருச்சி லோகநாதன்
பி. லீலா, வெங்கடேஷ்

லக்கி: வில்லேந்தும் வீரரெல்லாம்
வீழ்ச்சிப் பெற்றார் பகடையிலே - என்னை
வெற்றிபெற முடியாது - நீர்
கற்ற வித்தையும் செல்லாது
யுவராஜன்: அகம் பாவத்தினாலே - என்னை
அலட்சியம் செய்யாதே - வீண்
அகம் பாவத்தினாலே ...... செய்யாதே
இந்த ஜெகமே புகழ் யுவராஜனை
மதியாமல் உளறாதே
என்னாளும் ஆடவரை
ஏளனமாய் எண்ணாதே
என்னாளும் .......... எண்ணாதே.
லக்கி: என்ன வேணும் துரையே
இஷ்டம் போலே கேள் இனியே
யுவ: பன்னிரண்டு போட வேணும்
பலித்தாலே ஜெயம் காணும்
லக்கி: ஏ. ராஜா பன்னிரண்டு
வெறிக்குதே உன் கண்ணிரண்டு
லக்கி: வீராப்பு பேசி வந்த
பூராப்பு ராஜாவை
வெட்டிடச் சொல்லு - மண் வெட்டிடச் சொல்லு
அந்த ஆராதிதாரண சோம்பேறியாய் இருந்தால்
கட்டிடச் சொல்லு மரத்தில் கட்டிடச் சொல்லு
லக்கி: வில்லேந்தும் ...... வித்தையும் செல்லாது
என்ன வேணும் துரையே
இஷ்டம் போலே கேள் இனியே
ராஜா: அன்னமே அபராஜிதே - என்
ஆசையான கற்கண்டே
எண்ணம் போலவே வெற்றி காணவே
போட வேணுமே ரெண்டு
லக்கி: வீணான ஆசையாலே
வீழ்ச்சி பெற்ற மன்னவா
நானென்ற கர்வம் கொண்டு
நிலை மறக்கும் மன்னவா

- பின் பக்கம் -

வக்கு: நெளிஞ்சி வுணாஞ்ச அழகு ராஜா - நீ
நெஞ்சு குத்தி ஆகணும்
நேரத்தோடு குதிரைக் கெல்லாம்
கொள்ளுச்சித்தப் போடணும்

---

இந்திராஜா: மியாரி ஆவோ ஹமாரா வட்டு
வக்கு: தேரி அங்கி நஹி வட்டு
ராஜா: மை மில்மே அதுராங்க் கேல்னே
ஆயா ஹூம் மை - ஆயா
வக்கு: ஜலா - ஹைஹோ - டைடலா - ஹைகியா
அதுராங்க் கேலோ ஆவோ - மியாரே

---

மலையாள ராஜா: பத்துமுள்ள அந்தராங்கி
பகடை களிக்கான் வந்து - ஞான்
சந்துமுள்ள ராஜன் ஞானே
சொந்த மக்கான் போகுன்னு
வக்கு: நாடு விட்டு நாடு வந்து
~~ஜ~~ நசிஞ்சி போகாதே ராஜா
நஞ்சி போறவுள்ள பகடை களியில்
நாட்டம் கொள்ளாதே ராஜா

---

வக்கு: நருணி துவைபுல மிருஞ்சு நடசிக துண்றட்ன
பணி வெறியுண்டு சாவேஸ்வருணக்
கல கிஜம் மெபருகணி கர்வாந்துடவு கிவு
பாணி சித்வம் புவோ பருதுமையா

---

மதியே இழக்கிறார்
மணப்பால் கிழக்கிறார்
திணை விதியால் காலக்கதியால் வந்து
தனியே வாடுறார்
விதியோடு வாழும் செல்வந்தர் யாவும்
விதியால் பாவம் மாய்கிறார்
நினைவே வாழ்வின் கனவானதாலே
நிலையே மாறி ஏங்குகிறார்

---

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன்
பி. லீலா

மாயா வலையில் வீழ்ந்து மதியை இழந்து - தன்னை
மறந்தவன் பெரும் பாவி - மனமே
சாயாபுரிக் கோட்டையைக்
கற்கோட்டையாய் எண்ணும்
கயவர்கள் வெறும் பாவி
ஆணாய்ப் பிறந்துலகில் மானாபிமானமின்றி
வாழ்பவன் பெரும் பாவி - மனமே
தேனாகவே பேதமமானார் குலத்தை நம்பி
திரிந்தவன் வெறும் சாவி
நெருக்கு நேரான ஆட்சி புரிந்திடும்
நேர்மையான எங்கள் தேசமடி
யாருக்கும் அஞ்சாத வெள்ளைநாடு - இந்த
பேரைச் சொன்னாலே புரியுமடி

—

வித்தாரக் கள்ளியெல்லாம்
விறகு வெட்டப் போகையிலே
கத்தாழைக் காட்டுக்குள்ளே
காடு வந்து துள்ளுதடி - வெள்ளை
காடு வந்து துள்ளுதடி - போடு
வித்தார...... போகையிலே
பாறாணம் குடிச்சவனும்
பருசி கோலம் ஆனவனும்
காறாய வேறுமெல்லாம்
கண்ணுக்குள்ளே காணுதடி - போடு
வித்தாரக் ...... போகையிலே.

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் : டி. எம். சௌந்தரராஜன்
பி. லீலா

ஆண் : கையைத் தொட்டதும்
மெய்யைச் சிலிர்க்குதே
காதலின் வேகந்தானா - அந்திக்
காலத்தின் யோகந்தானா
அனுராகத்தின் மோகந்தானா

தெய்வீகக் காதல் கனிந்திடும்
தேகத்திலே ஒரு சக்தியுண்டு
அதைத் தேடி சித்தி பெற்றுவிட்டால்
இந்த லோகத்தில் பெரும் முக்தியுண்டு
பெண் : பழுத்த பழம் ஆசைப்பட்டு - அம்மா
பாசாங்கு போடாதே வெட்கங் கெட்டு
களைத்துப் போன காலத்திலே - இங்கே
கல்யாண மாப்பிள்ளை போல வந்து
ஆண் : பழுத்த பழம் தித்திக்குமடி - இந்த
பாழுங் காயெல்லாம் புளிக்குமடி
அழுத்தமாகப் பேசாதடி - பெண்ணே
அத்தனையும் இளம் ரத்தமடி

பெண் : கிடுகிடு வயசிலே கும்மாளமா நீ போடுறே
குழந்தை போலவே அங்கேயும் இங்கேயும் இன்னா
ஓடுறே

ஆண் : கடுகடு வெனவே பேசியே கேவலம் பண்ணாதே
காவடி சத்திரஞ் சாவடியாகவே அன்னைக் எண்ணாதே

பெண் : திடுதிடு வெனவே வந்தது யேன் இங்கு நில்லாதே
நடுத் தெருவில் தள்ளியே கதவைச் சாத்துவேன்
- நீ துள்ளாதே

ஆண் : படபட வெனவே பகடையாட வந்தேனே
என் செந்தேனே - அது
பலித்துடனே உன்னையும் திருமணம் செய்வேனே

பெண் : நட நட கிழவா நடக்காது இந்த வயதினிலே
யாரும் ஜெயிக்கவே முடியாது இந்த பகடையிலே

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பாடியவர்கள் : ஜிக்கி

லா... லா... ல... லா... லா... ல
லல்லல்ல .... லல்லல்ல...... லா

சொக்காப் போட்ட நவாபு
செல்லாதுங்க ஜவாபு
நிக்கா புருஷன் போல வந்து
மொய்க்கும் என்ன கிராப்பு
— சொக்கா போட்ட

கண்டாலே மயங்கிடுவார்
கத்திரி மீசை ராசாவே
அண்டாவை முறுக்கி முறுக்கி
அசந்து போன தேசாவே
— ல சொக்கா போட்ட

தீராதி தீரர்களே வீராதி வீரர்களே
சொல்லாமல் ஓடிப் போங்க சொக்காப் போட்ட
ராசாவே
சொக்கட்டான் ஆட்டத்திலே
சொக்கியே விழுந்தீரே
உள்ளதை நான் சொல்லப் போனால்
உங்களுக்கேன் பொல்லாப்பு
— ல சொக்கா போட்ட

எட்டாத கனியை எண்ணி
ஏங்கி ஏங்கி மயங்காதீர்
எந்நாளும் பெண்ணாசையால்
மோசமே அடையாதீர்
ரோசான ஆண் சிங்கம் போல
துள்ளியே வந்தவரே
லோகத்திலே மாதர் முன்னே
ஆத்திரம் செல்லாதே
— ல சொக்கா போட்ட நவாபு

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் : ஜிக்கி

~~துணை~~

தாகமும் சோகமும் தணிந்திடும் பயணமடா
தாபமும் கோபமும் காணும் நிதானமடா

ஆசையும் நேசமும் ரத்தபாசத்தினால்
வாழ்த்துவதைப் பாராயடா - என்
ஆவலும் நிறைவேறிடும் - என்
ஆருயிரே நீயருகில் வாராயடா

— ஆசையும் நேசமும்

தாமரை சோலையிலே
ஜாடை செய்யும் வெண்ணிலவே
தயங்குவதேனோ மாறாது எண்ணமே
மணம் போலே வாழ்நாளிலே
தேன் மலர் மேலே
தென்றலைப் போல வாழ்ந்திடுவோம்

— ஆசையும் நேசமும்

மானம் பிரதானமென்றே
வாழ்ந்திடும் எழில் ராஜா
மானை என்னாலே மயங்குறானே மனோராஜா
காரணமே புரியாமலே கலங்குவதேனோ
கருதுவதேனோ கவலையுமேனோ

— ஆசையும் நேசமும்

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் : டி.எம். சௌந்திரராஜன்

பகாவலி நாட்டிலே பகாவலி ஆட்சியிலே
நியாயமாய் வாழவும் வழியுமில்லையே
இது அநியாயம் அநியாயம் அநியாயம்

அநியாயம் இந்த ஆட்சியிலே இது அநியாயம்
இங்கே ஆண்களை பெண்கள்
அடக்கியாளுவது அநியாயம்
- அநியாயம் இந்த ஆட்சியிலே

கனிவாகப் பேசும் பெண்கள் கையிலே
கத்தியும் ஈட்டியும் இருக்குது
கணவனைக் கண்டால் மனைவியர் எல்லாம்
காளை போலவே முறைக்குது - இங்கே
ஆண்களைப் பெண்கள் அடிமையாக்குவது அநியாயம்

தனிமையாக ஒரு வாலிபன் இருந்தால்
தரவேணும் பிரம்மச்சாரி வரி
தாலிகட்டியே குடும்பம் நடத்தினால் - அவனும்
தரணும் சம்சாரி வரி - இங்கு
தூங்கி விழுந்தா வரி தின்னு நிமிர்ந்தா வரி
இட்லி வரி... சட்னி வரி... பட்னி வரி - இதுபோல்
ஆண்களைப் பெண்கள் அடிமையாக்குவது அநியாயம்

அர்த்தமே இல்லாத வரிகளை அமைக்கும்
பகாவலி ராணி ஆட்சியிலே
ஆதரவில்லாத ஏழை மக்களும்
அடிமையாகிறார் ஆட்சியிலே
பொருத்தமே இல்லாத புதுப் புது வரிகளை
போடுவதெல்லாம் நியாயமில்லை - அவுங்க
என்ன செய்தாலும் கேள்வியில்லை - இங்கே
ஆண்களைப் பெண்கள் அடிமையாக்குவது அநியாயம்

படம் : குலேபகாவலி
இசை : விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள் : ஜிக்கி - குழுவினர்

கண்ணாலே பேசும் பெண்ணாலே - ஆண்கள்
தன்னாலே மயங்கும் காலமே - ஆண்கள்
தன்னாலே மயங்கும் காலமே

எந்நாளும் இன்னில் காதல் வாழ்விலே.. ஓ....
தன்னாலே மயங்கும் காலமே - ஆண்கள்
தன்னாலே மயங்கும் காலமே

கலைமகள் தனியே மலைமேலே
கானில் எங்கும் கதை போல் விழுந்து
ஓ கலைமான் தனியே கதை போல

அலைமேல் சீறும் புயல் போல் மாறி
நிலையே மாறும் மனம் போல
அலைமேல் சீறும் மனம் போல
எந்நாளும் இன்னில் காதல் வாழ்விலே
தன்னாலே மயங்கும் காலமே - ஆண்கள்
தன்னாலே மயங்கும் காலமே

மாயா உலகம் எனவே பேசி
மதியே இழப்பான் சந்நியாசி... மாயா உலகம்...
மலர்மேல் மேவும் மணம் போல் வீசி
மறந்தே இருவான் சுகவாசி
எந்நாளும் இன்னில் காதல் வாழ்விலே
தன்னாலே மயங்கும் காலமே

- கண்ணாலே பேசும் பெண்ணாலே

படம் : குலேபகாவலி
கதை, வசனம், பாடல்கள்
தஞ்சை. ராமையா தாஸ்

குலேபகாவலி படத்தில் வரும் பகுத்தறிவு போட்டி

கே: நஞ்சினும் கொடியது ?
ப: வஞ்சியரின் உள்ளம் - நய
வஞ்சகம் படைத்த வஞ்சியரின் உள்ளம்

கே: வில் அம்பை விடக் கொடியது ?
ப: அழகியரின் விழி அம்பு

கே: கவலைக்கு மருந்து ஏது ?
ப: மது என்கிறான் மதிமயக்கத்துள்ளவன்
மங்கை என்கிறான் காமாந்தகம் பிடித்தவன்
மக்களின் மழலைச் சொல் என்கிறான்
குழந்தை உள்ளம் படைத்தவன்
கே: இன்பம் எங்கே இருக்கிறது ?
ப: மக்களுக்கு தொண்டு செய்வதில்.

கே: பெண்களுக்கு எதிரி ஆண்கள் தானே ?
ப: இல்லை. பெண்களுக்கு எதிரி அவர்களது
இளமையும் அழகும்.

கே: பெண்களை பூங்கொடி கோழைப் பிறவி என்று
பலவிதமாக வர்ணிக்கிறார்களே; ஆண்களை
ஏன் அப்படி வர்ணிப்பது இல்லை ?
ப: அழகுப் புகழ்ச்சியைக் கேட்டு ஆண்கள்
பூங்கொடி போல் துவண்டு விடுவதில்லை.
கோழைப் பிறவி போல் கண்ணீர் பெருக்குவதில்லை
அதனால் தான் பொது பெண்களை மட்டும்
புகழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்.
கே: கற்பு பற்றிய உங்கள் அபிப்ராயம் ?
ப: கற்பு என்பது ஒரு விசித்திரமான நெருப்பு
கணவன் ஏற்றினால் அது தீபம். மற்றவர்
ஏற்றினால் அது தீ.
கே: ஒரு பெண்ணை ஆண் எதற்கு கல்யாணம்
செய்து கொள்கிறான் ?
ப: ஊர் விஷயங்களையும் உலக விஷயங்
-களையும் தெரிந்து கொள்ள.
கே: ஆட்சி பீடத்துக்கு அவசியமானவர்கள்
ஆண்களா, பெண்களா ?
ப: ஆண் பெண் என்ற வித்தியாசம் ஆட்சி

படம் : வணங்காமுடி
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : [illegible]
எம். எல். வசந்தகுமாரி

## தொகையறா

சிரமதில் திகழ்வது சீவகசிந்தாமணி
செவிதனில் மிளிர்வது குண்டலகேசி
திருவே நின் இடையணி மணிமேகலையாம்
கரமதில் மின்னுவது வளையாபதியாம்
காலதனில் ஒலிப்பது சிலப்பதிகாரம்
கண்கண்ட ஐம்பெரும் காவியத் திலகமே!

## பல்லவி

வா... வா... வா... வளர்மதியே வா
கலைமதியே வா! வரமருள வா, வா, வா!

## அநுபல்லவி

வண்ணம் மேவும் இசை வாரிதி - என்
வாழ்வில் இன்பம் தரும் பாரதி
அன்னையே கலையின் சாரதி - மகிழ்ந்(து)
உன்னையே பணிந்தேன் என்னையாண்டருள்.

- வா வா வா

## சரணம்

கம்பனோடு கவி காளமேகமும்
களித்த உள்ளம் நீயே
காவியம் புகழ்ந்திடும் ஜீவ ஜோதியே
கவிதை தீட்டிடும் தாயே!
காணக் காணத் திகட்டாத இன்பநிலை
காணும் செல்வம் நீயே,
[illegible]ணமே புகழும் ராணியே - உன்
கமல சேவடியே களித்து நீயருள்

- வா வா வா

படம் : வணங்காமுடி
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : P. சுசீலா - குழுவினர்

ராஜயோகமே பாரீர் - அது
ராஜயோகம் பெறுவாரீர்
வாழ்வினிலே ஒரு நாள்
அந்த திருநாள் - அன்பே அருளால்
இன்பம் தரும் நாள்

- ராஜயோகமே

தேன் பாயும் சோலை - இளந்தென்றல் வேளை
மான் பாய்வதாலே மயங்கும் தன்னாலே
மணம் போல ஆடிப்பாடி
மகிழ்வோம் இந்நாளே

- வாழ்வினிலே ஒரு நாள்

மின் மேவும் தாரா - விளையாட வாராய்
பண் பாடி ஜோராய் படகோட்ட வாராய்
வளர் மதியாலே - வண்ணக்கலை மேவும் பாராய்

- வாழ்வினிலே ஒரு நாள்

ராஜயோகமே பாரீர் - அது
ராஜயோகம் பெறுவாரீர்

படம் : இணைந்கோடு
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்

மலையே உன் நிலையே நீ பாராய்
கலைஞன் கை உளியாலே
காவியச் சிலையான
மலையே உன் நிலையே நீ பாராய்

அலை போன்ற மனதில்
அமைதியும் நீ தானே
பல நாளும் உனைச் செய்து
பலனே அடைவேனே
ஆவலும் உனக்காக ஆண்டவன் எனக்காக
ஆனந்தம் கொண்டேன் எந்தன் வாழ்விலே

— மலையே உன் நிலையே

தொகையறா

கண்ணிலே பவனிவரும் கலைமணியே - என்
கனவும் நினைவாகவே - கற்பனை இதயத்தில்
புதியவளானாய் - என் கவலை தீரவே

சரணம்

தொழிலாளி உழைப்பாலே
தோன்றிடும் சிலையே
உலகோரும் - உனை நாடி
உள்ளம் மகிழ்வாரே
கலைஞனும் உனக்காக காவியம் எனக்காக
இலைமதியாச் - செல்வமும் நீயல்லவோ

— மலையே உன் நிலையே

படம் : வணங்காமுடி
இசை : G. ராமநாதன்
பாடியவர்கள் : சுசீலா P. லீலா

பல்லவி

என்னைப் போல் பெண்ணில்லையோ - தேவி ஸ்ரீ
உலக இருள் நீக்கும் கண்ணில்லையோ - தேவி

— என்னைப் போல்

அநுபல்லவி

பொன்னோடு பொருள் யாவும் இருந்தாலும் - நான்
மின்னாத சுடர் போல வாழ்கின்றேன் அம்மா
சொன்னாலும் புரியாத உலகத்திலே - குறையைச்
சொன்னாலும் புரியாத உலகத்திலே - இனி
என் வாழ்வில் உனையன்றி துணையேதம்மா - ஸ்ரீ

— என்னைப் போல்

மலரோடு மணம் சேர வினை வேண்டுமா
மணதோடு மணம் சேர நினை வேண்டுமா
மலை போன்ற இடர் தீர கதியாரம்மா - ஜெகன்
மாதா உன் அருள் தந்து குறை தீரம்மா - ஸ்ரீ

— என்னைப் போல்

படம் : வணங்காமுடி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன்

ஓங்கார மாய் விளங்கும் நாதம் - அந்த
ரீங்காரமே இன்ப கீதம்
- ஓங்காரமாய்

ஆங்கார உள்ளமே அமைதியும் பெறுமே
நீங்காத துயர் மாறி நிம்மதி தருமே
நிகரேது - புவிமீது -
இயலும் இசையும் கலையும்
இகமதில் மகிழ்வுற சிகந்தரும்
- ஓங்காரமாய்

இசை பாடும் அலையாலே
அசைந்தாடும் நாகம்
இடர் சூழும் அலைமேவும் ஒலியாவும் ராகம
ஆவினங்களும் மகிழும் இசையே
தீவிடும் குயில் தொனியில் இசையே
காவிய மதில் புகழும் இசையே
ஜீவிய மதில் திகழும் இசையே

தாலே லோ வெனத் தீங்கில்லா அமுத கீதமே
துவழும் போதை~~யில்~~யால் மதலை தூங்குமே
இணையிலாக் கலை இதாகுமே
எங்கும் புகழுறவே கனிந்து நிறைந்து
- ஓங்காரமாய்

வணங்காமுடி - படம்
இசை: ஜி. ராமநாதன்
பாடியவர்கள்: ஏ.எம். ராஜா - சுசீலா

பெண்: மோகனப் புன்னகை செய்திடும் நிலவே
மேகத்திலே நீ மறையாதே
ஆண்: பாகுடன் தேனுமே கலந்திடும் நேரம்
சாகசமே நீ புரியாதே
— மோகனப் புன்னகை

~~பெண்~~ ஆண்: தியாகமும் யோகமும் சேர்ந்து இணாலே
தென்றலே நீயும் பிரியாதே

ஆண்: தேன்மலர் தூவும் நேரம் இதே - என்
செல்வமே நீயும் மறையாதே — மோகன

பெண்: தேன் இதழ் மேலே சிந்திடும் மதுவைத்
தேடியே வாராய் இந்நாளே — தேன்

ஆண்: மான் விழியாலே வீசிடும் கணையே
மாரனும் மறைந்தான் உன்னாலே —

— மோகன புன்னகை

பெண்: காதினில் யாருமே தேடியே வருவார் — காதினில்
கண்ணா நீயும் பாடாதே
ஆண்: காதலின் வேளையில் சோதனை புரிவார்
கண்ணே நீயும் ஆடாதே — காதலின்

— மோகன புன்னகை

படம் : வணங்காமுடி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : ஜிக்கி

கட்டழகு மாமா பொட்டழகு பூமா
ஜட்டு ஜிட்டு ஆடாதே வெங்கப்பெட்ட டோமா

— கட்டழகு மாமா

காத்தாடி போல சும்மா பறக்குறே
ஆத்தாடி ஏணய்யா இப்படி மொறைக்குறே
கண்ணடிச்சி சிக்காதே
பெண்ணைக் கண்டு சொக்காதே

— கட்டழகு மாமா

மனசை அறிந்தவன் - மானத்தை அறிந்தவன்
மனுஷன் தானா சொல்லுங்க
மதியும் கெட்டவன் அதியும் கெட்டவன்
வாழ்ந்திடுவானா சொல்லுங்க
மத்தாப்பு போல மறையும் புரிஞ்சுக்கோ
— உந்தன்
அத்தாரம் செல்லாது இங்கே தெரிஞ்சுக்கோ
அக்கரிச்சு சில்லாதே கொக்கரிச்சு துள்ளாதே
— ஜட்டு ஜிட்டு ஆடாதே
— கட்டழகு மாமா

தென்னை மரத்துலே தேளு கடிச்சா
பனை மரத்துக்கு வலிக்குமா
புன்னை மரத்திலே ஏறி இறங்கினா
புளியங்காயும் கிடைக்குமா

புரியாமே வெளிச்சம் போடும் பூச்சாண்டி
- இங்கே
சரியான இளிச்சவாயன் வாச்சாண்டி
ஜல்லிக்கட்டு காளையடி
துள்ளிக்கிட்டு பாயுதடி

— கட்டழகு மாமா

படம் : வணங்காமுடி
இசை : G. ராமநாதன்            சீர்காழி
பாடியவர்கள் : ~~டி.எம். சௌந்தரராஜன்~~

ஆட்சியின் திமிராலே அகந்தையின் பெயராலே
சூழ்ச்சியும் வஞ்சமும் சேர்ந்ததடா
வீழ்ச்சியினால் உள்ளம் வேதனைப் புயலாலே
வீண்பழியே உன்னைச் சார்ந்ததடா!

ஆதரவில்லாமல் நீதியும் இல்லாமல்
அன்னையைப் பிரிந்தேங்கும் கோலமடா
காதலின் நிலையாலே பேதமை செயலாலே
கரை கடந்தே செல்லும் காலமடா
— ஆட்சியின்

கடமையை மறவாமல் மகனென்றும் நினையாமல்
காவலாய் வருவதும் விந்தையடா
உடல் உயிர் மறைந்தாலும் உன்னையே மறவாமல்
எண்ணி எண்ணி ஏங்கும் தந்தையடா
— ஆட்சியின்

---

பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்

தொகையறா

ஈரைந்து மாதமே
இடை நோக உடல் நோக
ஈன்றெடுத்த - என் அம்மா
ஏழேழு ஜென்மமே
எடுத்து நான் வந்துமே
என்னையே துண்டித்து
காணிக்கை வைத்தாலுமே
என் பாவம் தீருமா

அம்மா... அம்மா... அம்மா...

முத்தம் கொடுத்த வாய் பற்றி எரியுதே
நித்தம் அணைத்த கரம் நீறாக வேகுதே - உலகில்
ரத்தம் கொதித்து உடல் துணைவால் துடிக்குதே
சித்தம் தடுக்குதே செந்தீயும் சூழ்ந்திடுதே
அம்மா... அம்மா...

படம் : மனிதன் மாறவில்லை
இசை :
பாடியவர்கள் : ஏ.எல்.ராகவன்; பி.சுசீலா

ஆ : இன்பமான இரவிதுவே
இதயம் ரெண்டும் மகிழ்வுறவே

பெ : இன்பமான இரவிதுவே
இதயம் ரெண்டும் மகிழ்வுறவே

ஆ : சிந்தை ரெண்டும் மகிழ்வுறவே
விந்தை மருந்தை தூவுதே

பெ : சிந்தை மயக்கும் வெண்ணிலா
பன்னீர் துளியை தூவுதே

ஆ : ஒருவர் பார்வை ஒருவர் மீது
நறுமலர் கணை வீசுதே

பெ : ஒருவர் பார்வை ஒருவர் மீது
நறுமலர் மணம் வீசுதே

ஆ : மலர்கள் வீசும் மணத்தினாலே
விரக தாபம் கனியுதே

பெ : மலர்கள் வீசும் மணத்தினாலே
விரக தாபம் தணியுதே

ஆ : மாங்குயிலின் காதல் கீதம்
மனதில் உணர்ச்சி தூண்டுதே

பெ : மாங்குயிலின் காதல் கீதம்
மனதையே தாலாட்டுதே

ஆ : இனிமையான நினைவு அலையில்
இதயம் விரைந்து செல்லுதே

பெ : இனிமையான நினைவு அலையில்
இதயம் மிதந்து செல்லுதே

இரு : இன்பமான இரவிதுவே
இதயம் ரெண்டும் மகிழ்வுறவே

படம்: மனிதன் மாறவில்லை
இசை:
பாடியவர்கள்: ஏ. எல். ராகவன், பி. சுசீலா

ஆண்: காதல் யாத்திரைக்கு
பிருந்தாவனமும்
கற்பகச் சோலையும்
ஏனோ
வேல்விழி மாது என்னருகில் இருந்தால்
வேறே சொர்க்கமும்
ஏனோ

பெண்: தீர்த்த யாத்திரைக்கு
ராமேஸ்வரமும்
திருக்கழுக்குன்றமும்
ஏனோ
ஆருயிர் பதி என் அருகில் அமர்ந்தால்
ஆனந்தம் காண்பது
ஏனோ

ஆ: புன்னகை வதனம் பூரண சந்திரன் போல்
பகலில் நிலவாய் காயவே
உன் எழில் மேவும் பணிமலர் பார்வையில்
உலகம் நீலகிரி ஆகவே
காதல் யாத்திரைக்கு கொடைக்கானலும்
காஷ்மீரமெல்லாம் ஏனோ

பெ: தந்தை தாயுடன் தமையன் பாசமும்
தம்பிகள் அன்பினால் காணவே
பதி ஆதாலே சதியின் மோட்சமென
பழைய சாஸ்திரம் பேசவே
தீர்த்த யாத்திரைக்கு சிவ கைலாசமும்
ஸ்ரீவைகுண்டமும் ஏனோ

இருவரும்: உயிரும் உடலும் போல்
சதிபதி இருந்தால்
உலகமே சொர்க்கம் ஆகாதா

— காதல் யாத்திரைக்கு

படம் : மனிதன் மாறவில்லை

பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்

சர்வம் சக்திமயம் பாரு - எங்கு
பார்த்தாலுமே அம்மையாரு
அப்பவே சொன்னாரு பட்டினத்தாரு
~~அத~~ அப்புறமா சொன்னாரு பாரதியாரு
இப்பவும் சொல்லுறாரு இந்த வாத்தியாரு
எட்டு திசை எங்கும் பதினெட்டு சித்தர் சொன்னது போல்
- சர்வம்

பட்டிக் காட்டிலே பஞ்சாயத்திலும்
பட்டணத்திலே உத்யோகத்திலும்
அது இது என்ன எல்லா துறையிலும்
அரிவையார் பதவியை அடைந்தார்கள் - ஆண்கள்
தெருவில் வேலையின்றி திரிந்தார்கள் - சர்வம்

சட்ட சபையிலே சீட்டுக்குப் போட்டி
சவாலு கேட்டு கணவனை விட்டு
டில்லி சிறையிலே டிக்கானா போட்டு
டிப்டாப் லைக்சர் அடிச்சாங்க
டைவர்ஸ் சட்டத்தை முடிச்சாங்க - சர்வம்

படம் : மனிதன் மாறவில்லை • பாடியவர் : பி. சுசீலா

தென்றல் பாடவும் தென்மலர் ஆடவும்
கண்கள் மூடவும் கனவு கண்டேன்
வெண்ணிலாவும் ஒளி விரித்த பஞ்சணையில் - ஆ
கனவில் நானொரு காட்சி கண்டேன் - அதை
எடுத்து சொல்லவே நாணம் கொண்டேன்
கண்கள் மூடினால் உனைக் கண்டேன் - என்
கண்கள் திறந்தால் உனைக் காண்பேன் - தென்றல்

உறங்கிய எந்தன் உடமைதை யாரோ
உலுக்கி எழுப்பியதை உணர்ந்தேனே
கலவரமுடனே கண்கள் திறக்க என்
கண்ணின் மணிகளில் உனைக் கண்டேன்
எங்கு பார்த்தாலும் உன் எழில் கண்டேன் - கண்கள்

அயர்ந்து எழுந்த என் மனமதை யாரோ
அழைத்திடும் குரல்தனைக் கேட்டேனே
துள்ளி எழுந்து நான் சுற்றித் தேட என்
உள்ளக் கோயிலில் உனைக் கண்டேன்
கண்கள் மூடினால் உனைக் கண்டேன் - என்
கண்கள் திறந்தால் உனைக் காண்பேன்.

படம் : ஹரிச்சந்திரா
இசை : கே.வி. மகாதேவன்
பாடியது : பாலசரஸ்வதி, ராணி

ஆடும் மயில் வேணுமா
பாடும் குயில் வேணுமா
அழகான அன்னபட்சி வேணுமா
- ஆடும்

அரிதான விலைகாணா ஆபரணமோ ராஜா
அன்பே எங்கள் இன்பம் என்றும் வாடாத ரோஜா

கண்ணோடும் கண்ணோடும் பேசுது
காதல் வலை வீசுது
காரணம் என்னவென்று சொல்லவா

இந்த வண்ணமலர் கண்டு
இங்கே வட்டம் போடும் வண்டு - அதை
எண்ணி எண்ணி தன்னாலே ஏங்குது

இந்த மலராக உன்னை தேடி போகுமா
தேன் மதுமாரி போனால் இன்பம் காணுமா

படம் : ஹரிச்சந்திரா
இசை : கே. வி. மகாதேவன்
பாடியவர் : டி. எம். சௌந்திரராஜன்

காசியில் வாழும் கருணைக் கடலே
கடைக்கண் பாராய் அடைக்கலம் நீயே!
— காசியில்

பேசிடும் உன்னைப் போல் தெய்வமுண்டோ
பேரருள் புரிந்தே என் துயர் தீராய்
— காசியில்

தஞ்சமென்றே உன்னை நம்பி வந்தேன்
நெஞ்சம் புண்ணாகி மிக நொந்தேன்
சஞ்சலம் தீர விஸ்வநாதா - ஆ... ஆ...
சஞ்சலம் தீர விஸ்வநாதா
சத்தியம் நிலை பெற
அங்கே என அபயம்
அருள்வாய் தேவா
— காசியில்

படம் : ஹரிச் சந்திரா
இசை : கே.வி. மகாதேவன்
பாடியது : பாலசரஸ்வதி

ஓராம் மாதம் உடலது தளர்ந்து
ஈராம் மாதம் இடையது தளர்ந்து
மூன்றாம் மாதம் முகமெல்லாம் வெளுத்து
நான்காம் மாதம் நற்கதிர் நெகிழ்ந்து
ஐந்தாம் மாதம் அன்னநடை மறந்து
ஆறாம் மாதம் அறுசுவையிர் கசந்து
ஏழாம் மாதம் என் நாவுக்கினியது புசித்து
எட்டாம் மாதம் எழில் மேனியும் நிறைமதி-
யாக
ஒன்பதாம் மாதம்
உன் மாமன்மார்கள் சீர்வரிசையில்
மகிழ்ந்து
பத்தாம் மாதம் பனிக்குடம் உடைந்து
பெற்று வளர்த்து
பாம்புக்கு இரையாக
பறிகொடுத்தேனடா
பறிகொடுத்தேனடா!

படம் : ஹரிச்சந்திரா
இசை : கே.வி. மகாதேவன்
பாடியவர் : டி.எம். சௌந்தர் ராஜன்

ஆதியிலும் பறையனல்ல
ஜாதியிலும் பறையனல்ல
நீதியிலும் பறையனல்லவே - நானே
பாதியில் பறையனானேனே
— ஆதியிலும்

வெள்ளிப் பணம் கேட்டவர்க்கு
அள்ளி அள்ளி ஈன்ற கையால்
கொள்ளிகாசு வாங்கலானேனே
— நானே பாதியில்

சத்தியத்தின் நீதியிலே
ஜாதியில்லை பேதமில்லை
இத்திரையில் உன் வசமானோ - வீணே
இன்று நான் பறையனானேனே
— ஆதியிலும்

படம் : ஹரிச்சந்திரா
இசை : கே.வி.மகாதேவன்
பாடியது : கே.ஏ. தங்கவேலு, கிருஷ்ணன்

பெண் : கட்டுக்கடங்காத ஆசையாலே
காடு போல காணும் மீசையாலே
காதலாலே, காதல் போதையாலே
- உள்ளம்
கலங்குதே மன்மதன் வேலையாலே

பாடல் :

இங்கே இருக்கு அங்கே இருக்கு
இன்பம் தரும் காதல் எங்கே இருக்கு

தங்க பதம் போல
சிங்காரமான பொண்ணு
தன்னாலே தேடி வந்து காத்திருக்கு
- என்
கண்ணாளா மன்னவனே
என்னாயிருக்கு
- உன்
காதுல வெச்சும் நன்னாயிருக்கு
ரொம்ப நன்னாயிருக்கு!
ன்னாயிருக்கு... னாயிருக்கு...
யிருக்கு... ருக்கு... க்கு... கு..

ஆண் : ஜெய்சங்கர் ... அடி பெண்ணே
அடி பெண்ணே - என்
மன்னவனே மன்னாயிக்கு?
அடி பெ[illegible]ணே - உன்
மன்னவனே [illegible] மன்னாயிருக்கு?
[illegible]

பாடல்-ஆ

பெண் : காதலாகினேன் சாமி
கண்ணனை நெஞ்சம் தொறந்துகாமி
காதலாகினேன் சாமி.....

ஆண் : ஜெய்சங்கர்
காதலுக்கு கண்ணு ஏது
நீ சொல்வது
காதலுக்கு கண்ணு ஏது ?

பெண் : கண்ணிருக்கு காதிருக்கு
கையிருக்கு காலிருக்கு
காலநேரம் பார்த்திருக்கு
கன்னிப் பொண்ணும் காத்திருக்கு
காதலாகினேன் சாமி காதலாகினேன்
.......

ஆ : இனிமேலே எனக்கும் உனக்கும்
என்னாயிருக்கு

பெ : நம்ம மனம் போல பெத்து பொண்ணு
நின்னாயிருக்கு

ஆ : ஆகா நீ எங்கே இருக்கு

பெ : என்ன எங்கே இருக்கா ?
நம்ம இன்பம் தந்த காதல்
இங்கே இருக்கு !
நம்ம இன்பம் தந்த காதல்
இங்கே இருக்கு !....

படம் : ஹரிச்சந்திரா
இசை : கே.வி. மகாதேவன்
பாடியவர் : டி.எம். சௌந்தராஜன்
எஸ்.சி. கிருஷ்ணன், ராணி

ஆ: நீதிதேவன் உலகில் நீயல்லவோ - இன்ப
நிலையே யாவும் உன் செயலல்லவோ

பெ: ஜோதியே சுடரே அருள் புரியவே வா
பொன்னுலகம் மகிழ்ந்திடும் வள்ளலே வா..வா

ஆ: பாவலரும் நாவலரும் பாமாலை சூடவே
பக்தகோடிகள் மகிழ்ந்து பூமாலை போடவே
தேவாதி தேவர்களும் நல்வாசி கூறவே
திரிசங்கின் வருங்கால செல்வம் நீ
வாழ்கவே!

படம் : ஹரிச்சந்திரா
இசை : K.V. மஹாதேவன்
பாடியவர்கள் : T.M. சௌந்திரராஜன்

உலகம் அறியாத புதுமை - இந்த
உலகம் அறியாத புதுமை - என்
உடல் பொருள் ஆவியை
கடனுக்கே விற்பது
உலகம் அறியாத புதுமை

அலை கடல் மேலே துரும்பினைப் போலே
யானை வாயின் கரும்பினைப் போலே
நிலையும் இழந்தேனே
விதி அதனாலே
உலகம் அறியாத புதுமை

கேளுமய்யா இதை கேளுமய்யா
வாழப் பிறந்தோர் நிலை பாருமய்யா
தன்மானம் எந்நாளும் சன்மானம் என்றே
பெண் மானம் காக்கவே
பிறந்தவள் அன்றோ
அரசாளும் ஆண்டியும் விதியின் முன்னாலே
அமைதியை இழப்பார் தீவினையாலே
- இந்த
அநுபவம் வாழ்வில் நேர்ந்ததினாலே
உலகம் அறியாத புதுமை - இந்த
உலகம் அறியாத புதுமை

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன்

ஆயலோட்டும் பெண்ணே
அநுராக சித்திரக் கிளியே
அசைந்தாடும் சுந்தர மயிலே
அன்பே ஆரமுதே
— ஆயலோட்டும்

இந்தக் காவில் கவண் வீசி நின்று
ஆயலோட்டும் பெண்ணே

பொல்லாத மாறன்
வில்லேந்தி நானே
உல்லாச வேளையிதானே
ஓடி வந்தேனே

மாறாத காதல் இன்பத்தாலே - நான்
மன்றாடி ஏங்கி நின்றதாலே
கல்லான உள்ளம் இனி மாறாதா - உன்
கல்லான உள்ளம் இனி மாறாதா
கனியாதா இன்னும் வாராதா
கண்ணே உன் மனமிரங்காதா

— ஆயலோட்டும்

படம்: ஸ்ரீவள்ளி
இசை: ஜி. ராமநாதன்
பாடியவர்கள்: ஜிக்கி & கோரஸ்

மானைத் தேடி வந்தவரோ
மாப்பிள்ளை இவங்க - மத
யானையைப் போல நிக்காதே
மாப்பிள்ளை இவங்க
பூனை திருடா திருடன் போல முழிக்கிற
பெண்களைப் பார்த்ததும்
பைத்தியம் போலவே முறைக்கிற
மான வெட்கமே இல்லாமல்
நீ சிரிக்கிற
வீரன் போலவே - சூரன் போலவே
வில்லை விட்டுறே - பல்லைக் காட்டுறே
- மானைத் தேடி
அய்யோ மச்சான் மன்னாரு - உங்க
அப்பா என்ன சொன்னாரு
அடியம்மாடி இவரு
அசந்து ஏண்டி நின்னாரு

கண்ணுக்கு பண்ணாலே நினைச்சவருக்கு
கண்ணுக்கு புரியலே - அவன்
கையும் காலும் ஆடுக்கிறது
எதுக்கு தெரியலே
கன்னிப் பெண்களை பார்த்தவுடன்
மனசும் சரியில்லே
காளையை விட்டுட்டு வாலை புடிக்கிற
கோழையை போல ஏங்குவதேன்
- அய்யோ மச்சான்

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : ஜிக்கி & கோரஸ்

மானைத் தேடி வந்தவரே
        மாப்பிள்ளை சிங்கம் - மத
யானையைப் போல நிக்காதே
        மாப்பிள்ளை சிங்கம்
பூனை திருடா திருடன் போல முழுங்கிற
பெண்களைப் பார்த்ததும்
        பைத்தியம் போலவே முறைக்கிற
மான வெட்கமே இல்லாமல்
                சிரிக்கிற
வீரன் போலவே - சூரன் போலவே
வில்லை விடுறே - பல்லைக் காட்டுறே
                — மானைத் தேடி

அய்யோ மச்சான் மன்னாரு - உங்க
அப்பா என்ன சொன்னாரு
அடியம்மாடி இவரு
அசந்து ரெண்டு நின்னாரு

கணக்கு பண்ணாலே நினைச்சவருக்கு
கணக்கு புரியலே - அவன்
கையும் காலும் ஆடுக்கிறது
எதுக்கு தெரியலே
கன்னிப் பெண்களை பார்த்தவுடன்
மனசும் சரியில்லே
காளையை விட்டுட்டு வாலை புடிக்கிற
கோணங்கியை போல ஏங்குவதேன்
                — அய்யோ மச்சான்

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. எம். சௌந்திரராஜன்

காயாத கனல் பாய
கவலையின்றி விளையாடும் கலையினமே
தேயாத நிலவு போல்
தெய்வீக ஒளிவீசும் கலைச் செல்வமே
தாயாதி மாமனை கண்டதும் போல்
புன்முறுவல் செய்தாலும் - நிலை
சாயாத மான் நல்ல ஜாதி மான் - துள்ளிப்
பாயாத மான் - நல்ல ஜாதி மான்
கானல் வளமாய் செழித்தாலும்
துள்ளிப் பாயாத மான்

கற்பனைக் கெட்டாத ஒரு
அற்புதப் புதுமையோடு
காவனத்தில் ஆடியோடி
களிப்பருவம் நிறைந்தும்
பாயாத மான்
கணையில் படாத நிலையிலே - மெய்
காதல் உலாவும் வனையிலே - உளம்
கனியவே மணம் மகிழவே - தன
நினைத்தை மறந்து வனத்தில் வசித்திடும்
பாயாத மான்

காவன மீதினில் தீவிரமாகவே
காவல் புரிந்திடும் சுந்தர மான்
கலைச் சந்தனக் கடம்பவனை
கடந்திடும் அழகிய யௌவனமான்
கங்கை கணகண வென்று முழங்கி
சிறங்கை இயங்கிடும் சித்திர மான்

கலங்காது கணையைக் கண்டு மயங்காது
மனமும் தயங்காது மறைந்து பதுங்காது
மதியும் தவறாது - எதையும் மதியாது
அநுதினமும் தனைக் காவல் புரிந்தாலும்
அழகுக்கலை தவழும் நிலை
இளமலர் எழில் வதனம் - வாடாத மான்
வந்ததுண்டோ உந்தன் பார்வையிலே
உந்தன் பார்வையிலே

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. எம். சௌந்திர ராஜன்

ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா

- ஆதியந்தமும்

ஜோதி தவமும் வேதாந்தப்ப்ரம்மமே
தூய ஞான ஒளி ரூபமே
நாத ரூபமே ஓம் சிவாயமென
நவிலும் ஓங்காரமே
அம்பிகை மகிழும் தேவா
அன்பர்கள் இதய ஜீவா
ஆதாரமுன் பாதாரமே
அமைதி நிலவும்
ஆனந்த வாழ்வு பெற
ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. ஆர். மகாலிங்கம்

உனக்காகவே பிறந்த அழகன் - திரு
உருவான வேல் முருகன் மால் மருகன்
- உனக்காகவே

நினைத்தாலே உள்ளம் கனியாதோ - செந்தமிழ்
நிதியான பதியோடு மகிழ்வாய் சதா
இணையற்ற வீரன் - குமரன் - திருமுருகன்
வெற்றி வடிவேலன் - சக்தி உமைபாலன்
மகிழுறவே - புவனமதில்
- உனக்காகவே

பரமனின் நெற்றிக் கண்ணில்
அவதரித்தான் - முருகன்
சரவணப் பொய்கை தன்னில்
உருவெடுத்தான்
காரமதில் மலைமகள் கண்டே
அணைத்திட
ஆறுமுகத்தோடு உடல் ஒன்றானான்
அன்பர் தொழும் பாதன் - ஆறுமுகநாதன்
இறைவர் குலம் பெருமையுற
- உனக்காகவே

அன்றொரு நாள் குட்டி பிரமனை
சிறை செய்து
ஆக்கும் தொழில் புரிந்த மறைவேந்தன்
குன்றமர்ந்தே அன்று குருபரனாய் நின்று
தந்தைக்குபதேசம் செய்த குருநாதன் - தந்தை
சத்ரு ஸம்காரன் - பக்தர் உபகாரன்
திருமணமே புரிந்திடவே
- உனக்காகவே

படம் : பூவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : பி. லீலா & குழுவினர்

சின்னஞ்சிறு குருவிகளா
சிங்கார பறவைகளா
வண்ணமிகும் தினைக் கதிரை நாடாதீர்

கன்னங்கருங் குயிலே — இந்த
கானகத்தில் ஒயிலாய் வந்து
கவணையும் தாங்காதே
ஆலோலம் ... ஆலோலம் ..... ஆலோலம்

— சின்னஞ்சிறு

கொத்திக் கொத்தித் தினையருந்தும்
கூட்டங்களா — கிளிக
கொஞ்சமேனும் பயப்படவே மாட்டீங்களா

கும்பலாகப் பறந்து வந்து
கும்மாளமே போட்டா — இனி
சும்மா விட மாட்டேன்

தேனும் தினைமாவுக் கென்று
காத்திருக்கான் மலைமேலே

வேணும் என்று தினையில் வந்து
விழாதே இனிமேலே
சோ.... சோ.... சோ....

— சின்னஞ்சிறு

அச்சமின்றி பச்சைக் கிளி
அங்கே இங்கே பாக்குது ஆளை சும்மா வெய்க்குது

கானம் பாடியே வானம்பாடி
கண் ஜாடை காட்டுது தன்னால் வந்து மாட்டுது

கானாங் குருவி தேன் சிட்டு
கதிரைத் தான் சாய்க்குது
கல்லால் அடி கேட்குது

ஆவல் மீறி வரும் தாராவே
காவல் மீறி இங்கே வாராதே
தொல்லை கொடுக்கும் புத்தி போகலையா
இல்லை வேற இடம் இல்லையா
சோ.... சோ.... சோ....

— சின்னஞ்சிறு

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : பி. சுசீலா & குழுவினர்

எட்டாத கனிமேலே கொட்டாவி விட்டானாம்
ஊ... ஊ... மூடவன் - ஊ....
கிட்டாத தேன்மேலே வட்டாரம் போட்டானாம்
ஆ.... ஆ.... ஆ... அதைப் போலே

வந்தாங்க மாப்பிள்ளைங்க
வானரம் போல - குறத்தி
வஞ்சிப் பெண்ணையே மயங்கி
மாலையை போட
— வந்தாங்க

வாயாடி வீரன் வளைஞ்சி ஓடவே
வயசு சென்ற கிழம் தள்ளாட்டம் போடவே
வாட்டுப் பாவலன் வாயையும் மூடவே
தானனே தன்னானே தானனே தன்னானே
மரியாதை இழந்தாரே வீண் மதியாலே
— வந்தாங்க

கண்ணே இல்லாதவன் காட்சியை பாக்குறான்
காதே இல்லாதவன் காணத்தை கேக்குறான்
ஒண்ணுமே இல்லாதவன் ஊரையே எய்க்குறான்
உதவாத ஆளெல்லாம் என் வலை வீசுறான்
பெண்ணாலே வீரம் பொங்கும் நாட்டிலே
புரியாமல் அறியாமல் ஆசையினாலே
— வந்தாங்க மாப்பிள்ளைங்க

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : ஜிக்கி குழுவினர்

ஓ...... ஓ..... ஓ......

மலை நாட்டு குறவர் நாங்க - வில்லைக்
காட்டும் குறவர் நாங்க - பெண்
வேட்டையாட வரும் காட்டுப் பூச்சிகளை
விரட்டும் ஜாதி நாங்க
- மலைநாட்டு

கண்ணைக் காட்டுனா கன்னத்தில் கொடுப்போம்
கையை நீட்டுனா பொடரியில் கொடுப்போம்
உண்மைக்காகவே உயிர் கொடுக்கும்
- மலைநாட்டு

கற்பைக் காக்கவே துணிந்த ஜாதிங்க
கவரிமான் போல் வளர்ந்த ஜாதிங்க
அற்பமாகவே நினைச்சிடாதீங்க
அழகைப் பார்த்தவுடன் அசைந்திடாத
- மலைநாட்டு

வலிய சண்டைக்கும் நெருங்கிட மாட்டோம்
வந்த சண்டைக்கும் பயந்திட மாட்டோம்
மானத்தையே விட்டு கொடுத்திட மாட்டோம்
- மலைநாட்டு

நாடும் வேடர் குலம் தழைக்க வேணும் - நம்ம
நாடு காடுகளும் செழிக்க வேணும் - எங்கள்
நம்பிராஜன் புகழ் ஓங்கவே - குறிஞ்சி
நாதன் பாதமே நம்பி வாழும்
- மலைநாட்டு

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்

வண்ணத் தாமரையில்
மின்னும் நீர்க்குமிழி
வாழ்வு தான் உலகில் சதமா - முருகா

மண்ணுலாவரும் இளமாதராசையுடனும்
மாயமினை ஏதும் நிஜமா
- அப்பனே சண்முகா
ஆசை யாவும் வென்ற பிறவி - பக்த
பாசம் யாவும் அற்ற துறவி
ஆடி ஆடி இன்று ஆவலாக வந்த
நாடகக் காரன் சொல்ல உணர்வீர் - இந்த
நாடகக் காரன சொல்ல உணர்வீர்
- வண்ணத் தாமரையில்

விருத்தம்

விக்ன விநாயகா
விரும்பும் உன் அடியார்கள்
வினை தீர்த்திடும் நாயகா

பொற்குலக் கொடி ஒன்று
புனத்தினில் தவித்திருக்க
ஐம்புலனையும் கவர்ந்து நின்றாள்
சத்துருவான என் தமையனே - அன்று உனை
சரண் புகாததன் குற்றமே
தக்கதோர் தருணத்தில்
சமய சக்தி இறைவனை
துணை புரிய ஓடி வாராய்
அண்ணா.... அண்ணா... அண்ணா

படம் : ஸ்ரீ வள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. ஆர். மகாலிங்கம் &
குழுவினர்

கற்பகச் சோலையிலே - தேன்
கனி ஒன்று கனிந்ததடா - முருகா
அற்புத திருவடியிலே - பிறந்த
அறுசுவை அமுதமடா
முருகா கற்பகச் சோலையிலே
அறுபடை வீட்டினிலே - என்றும்
அமர்ந்திடும் ஜோதியடா
இறைவன் மார்பினிலே - பிறந்த
வேடுவர் திலகமடா
முருகா... முருகா... முருகா...

ஆறு பெண்கள் பாலை
அமுதாகவே உண்ட ஐயனே
அருள் மெய்யனே - முருகையனே - எமக்
காரும் துணையில்லை ஐயனே
அடிமை போற்றிடும் குருபரனே
அருள் வேலனே அம்மை பாலனே

தந்தைக்கு அந்நாளில்
மந்திரம் ஓதிய தாரகா
எழில் நாயகா மறை நாயகா
எங்கள் சரவணபவ குக ஆறுமுகா
தேடும் அன்பர் உள்ளம்
நாடும் ஞான குரு தேசிகா
செந்தில் வேலவா

தந்தான தான தானதன
வந்தாடும் மாமயில் வாகன
கந்தா உன் சேவை பணிந்திடவே
-பால் காவடியுடனே
வந்தோம் எமை ஆண்டருள்வாய் குருவே
தித்திமி தித்திமி நாதம் முழங்கிட
சித்தர் மருத்துவகீதம் விளங்கிட
தணிகாசல மேவிடும் வேலப்பா
உன்னையன்றியே உலகில்
இனிமேலும் துணை தான் யாரப்பா

— தொடரும்

தொடர்ச்சி :-

எல்லாம் உனது செயல் வேலா
எம்மை ஆண்டருள்வாய் சிவபாலா
நல்லோர் பணியும் மறைநூலா - உனை
நாடிய வரமருள் சீலா
எல்லாம் ..... ஜெகமெல்லாம்
உனது செயல் வேலா

—

செந்தி நகரிலோர் ஆண்டி - பக்தர்
தேடிய போதெல்லாம் அவன் வருவாண்டி
அந்திப் பகலாக வேண்டி - வந்தால்
யாருக்குமே அவன் வரம் தருவாண்டி
- செந்தி நகரிலோர்
ஆனைமுகன் தம்பி தாண்டி - அவன்
அப்பனும் எப்பவும் அம்மையும் பேயாண்டி
வானோர் புகழ் வேலன் தாண்டி - நேரில்
வந்தாலும் கண்ணில் காணாத மாயாண்டி
- செந்தில் நகரிலோர்

—

மோகனப் புன்னகையில் - எனக்கொரு
மோகம் பிறக்குதடா - முருகா
ஆகமம் போற்றுதடா - முருகா
ஆவலும் மீறுதடா
ஆடும் மயில் மீதே விளங்கும்
ஆனந்த ஜோதியடா - முருகா
அன்பர் இதயமடா - உனக்கு
அறுபடைக் கோயிலடா

—

சித்தம் இரங்கி வருவாய்
அன்பர்கள் தொழும் தென்பழனி வேல்முருகா
சக்தி சிவன் புத்திரனே
சதுர்மறை வித்தகனே
உத்தரவு தரவேணும்
உந்தனருள் பெறவேணும்
கோரும் வரமே தருவாய்
அன்பர்கள் தொழும் குன்றக்குடி வேல்முருகா
ஒரு மயில் ஏறி வந்து
நேரினில் மனம் மகிழ்ந்து
ஆறு தலையோடு வந்து
ஆறுதலும் சொல்ல வேணும்
பாலாபிஷேகம் பெறுவாய்
அன்பர்கள் தொழும் பரங்கிரி வேல்முருகா

- தொடரும்

தொடர்ச்சி :-

காலால் குனிந்து அந்த
~~அந்த~~ காலனை உதைத்தவனின்
பாலா மனமிரங்கி
பக்தர்களைக் காக்க வேணும்
இந்நேரம் இரங்கி வருவாய்
முருகா.... ஆறுமுகா.... வேல்... வேல்

---

எட்டுடிக் கிச்சுக் கிள்ளே - கந்தைய்யா
எத்தனை நாள் இருப்பேன்
ஆறுமுகம் பாரும் - புள்ளிமயில்
ஏறிடும் வேலவனே
சக்தி சிவன் பாலா - வந்தருள்
சண்முகனே வேலா
பக்தியுடன் பணிந்தோம் - முருகா
பாராமுகம் ஏனோ
எட்டுத் திசை மகிழ - பிரமனை
குட்டி சிறையிலிட்டாய்
அசுரர்களை வதைத்தே - பழமுதிர்
சோலை அமர்ந்தவனே
ஆறுபடை மணாளினிரா - வந்தருள்
எம் பெருமான் மகனே - ~~திருமாலின் மகனே~~
திருமாலின் மருகோனே
திருத்தணி மலையின் வேலவனே

படம் : புதுவெள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : சீர்காழி. கோவிந்தராஜன்
பி. லீலா

ஆ: ராகம் தணிந்தது அன்னமே - என்று
மோகம் தணியுமோ சொர்ணமே - என்
ராகம் ............ சொர்ணமே
சாகசம் பண்ணாதே தங்கமே - உனக்கு
சரியான ஜோடி இந்த சிங்கமே
- என் ராகம்

பெ: துள்ளாடி துள்ளாடி தையத்தா - போடும்
சுவாமிகள் போல் வந்து தகிடதத்தா
சல்லாபத்திலும் நல்ல அறிவுதான்
- பெண்கள்
சபலத்திலும் அது கொஞ்சம் குறைவுதான்
- பெண்கள்
- துள்ளாடி

படம் : புதுவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : சீர்காழி. கோவிந்தராஜன்
பி. சுசீலா

ப : காளான் இடை மிடுக்க
கட்டெறும்பு மேளம் கொட்ட
வௌவாலு கிழமே நீ
என்னை வந்து தாலி கட்ட - முடியுமா

வெச்சுப்புட்டேனே நான்
வெச்சுப்புட்டேனே - உன்னை
வெமாறு வச்சுட்டேனே தாத்தா

சரி போகட்டுன்னு விட்டு பாத்தா - பதி
தாகத்தையும் நான் தீத்தா - இளம்
பெண்ணானாலே - கிழட்டு
கண்ணால பாத்துக் கிட்டு
கண்ணாரசம் கொட்டுதே ஆத்தா

ஆ : அஞ்செழுத்தான் கண்டதொரு
ஆனைமுகத்தானும் வர
ஆறெழுத்தான் துணிஞ்சி விட்டால்
அருசாமல் தாலி கட்ட தெரியுமா

வெச்சுபுட்டேன் நான் வெச்சுபுட்டேன் - உன்னை

வெமாறு வச்சுட்டேனே வள்ளி
சும்மா தாண்டிக் குதிக்காதே துள்ளி - வாயி

சாக்கை சொல்லாதே அள்ளி
ஓட்டாரம் பண்ணாதே
ஒயிலாட்டம் போடாதே
கட்டான காளை இந்த புள்ளி
- வெச்சுபுட்டேன்

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : பி. சுசீலா

ஓம் சரவணபவா... ஓம் சரவணபவா

சண்முகா சக்தி வடிவேலா
கண்ணீரைக் காணிக்கை செய்தாலும் — என் மனம்
கரையாதோ கனிந்திடாதோ. ஆ... ஆ...

இதயக் கோயிலிருக்க இங்கு நீ அமர்ந்தே
இருப்பது தான் முறையாமோ — (இதயக்)
எந்நாளும் உன்னோடு வாழவே நினைந்தேன்
எண்ணமெல்லாம் கனவாமோ — முருகா
இனியும் உன் நினைவாலே தனிமையினால்
நெஞ்சம் ஏங்கிடும் நிலை வாராமோ
— இதயக் கோயில்

மாமரமாகி நின்ற அசுரனை அன்று
இருகூறு செய்த முருகா
மயிலாக சேவற் கொடியாக ஏந்தி
மகிழ்ந்தோடி வந்த முருகா
குறவர் எயில்களில் குலத்தை நாடி
குலவ வந்த முருகா
குமரா எதிரில் ஒரு முறை வந்து
குறையைத் தீரும் முருகா

உருவம் கல்லாக மாறினாலும்
உள்ளம் கல்லாக மாறுவதோ
உருவம் கல்லாக ..... மாறுவதோ
உருகாதோ மனம் உருகாதோ

முருகா..... முருகா..... முருகா.....

படம் : பூவள்ளி
இசை : டி. ராமநாதன்
பாடியவர்கள் : டி.எம். சௌந்தரராஜன்

ஆதி அந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா
—ஆதி அந்தமும்

ஜோதி தவழும் பேரானந்த பிம்பமே
தூய வாழ்வு தரும் தீபமே
ஞான ரூபமே ஓம் சிவாயவென
நம்பிடும் ஓங்காரமே

அம்பிகை மகிழும் தேவா
அன்பர்கள் இதய ஜீவா
ஆதாரமும் பாதாரமும்
அமைதி நிலை ஆனந்த வாழ்வு தா
—ஆதி அந்தமும்

படம் : ஸ்ரீவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : டி. ஆர். மகாலிங்கம்

உன்னையே தெய்வமென
எண்ணிடும் மக்களும்
மண்ணிலே மடிவதும் சரியோ

பண்ணிடு காரியங்களால்
அபயம் தராமலே
பாதகம் செய்வதும் முறையோ

கன்னி என் வாழ்விலே
என்னையே அறியாமல்
என்னதான் நான் செய்த குறையோ

உன் அருள் இல்லையேல் — என்
உயிரையும் ஏற்றுக் கொள் முருகா

முருகா..... முருகா.... முருகா......

---

பாடியவர்கள் : டி. ஆர். மகாலிங்கம்

ஞானப் பழமே ... மெய் ஞானப் பழமே

நான்மறை புகழும் நாதா
நாளும் அருளும் (ஞானப் பழமே)

சண்முகா ... குகா ... முருகா

கானுறை வள்ளியும் குஞ்சரியும் மகிழ
காத்திருந்தோம் கதிர்வேல் முருகா

சண்முகா ... குகா ... முருகா

கலைச் செல்வம் புகழ்ச் செல்வம்
சகல செல்வமும் தந்து காத்தருள்வாய்
சக்திவேல் சண்முகா

சண்முகா .... குகா ... முருகா
சண்முகா .... குகா ... முருகா

படம் : பூவள்ளி
இசை : ஜி. ராமநாதன்
பாடியவர்கள் : சந்திரபாபு

அய்யோ மச்சான் மன்னாரு - என்
அங்கே போயி நின்னாரு
அழகாத்தான் உன்னையே வாய்க்கத் தின்னாரு
— அய்யோ மச்சான்

இடிச்ச இடியில் கன்னாம்பூட நெளிஞ்சு கிடக்குது - அட
என்னடா மச்சான் உனக்கு இப்படி இருந்து கிடக்குது
அடிச்ச அடியில் கொடுக்காட்டை போல் சுருண்டு கிடக்குது
உனைக் கெடுத்திட்டு பேனைக் கெடுத்திட்டு
பானைக் கெடுத்திட வந்தாயிலே

— அய்யோ மச்சான்

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : P. B. ஸ்ரீனிவாஸ்

வாடாத புஷ்பமே வற்றாத செல்வமே
தேடாத தெய்வீக ரூபமே
திருநாடாளைப் போலாடும் இதயத்திலே
இணையும் உந்தன் தாபமே... கோபமேன்

வனிதா மணியே - இனி
வாராயோ முதற்கனியே - இனி
வாராயோ முதற்கனியே
வந்தருள் அந்தரி சிந்தை கவர்ந்திட
தந்திடுள் இன்பம் நீயே - இன்னும் இந்த
மௌனம் ஏனோ

— வனிதா மணியே

கனியிதழ் சுவைதரும்
கண்ணான கலையே
கலைமதி திகழ்ந்திடும்
பொன்னான சிலையே
மணமலராகிடும் - கண்ணே மணமலராகிடும்
~~மனத் தேடி~~ மானைத் தேடி (?)
மீனும் நதியும் போல் ஆடவே
கம்பனும் வம்பனும்
கண்டு மகிழ்ந்திட
அம்பிகையே அருள்வாய் நீ
இன்னும் இந்த மௌனம் ஏனோ

வாடாம கண (?)

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : S.C. கிருஷ்ணன்
ரத்னமாலா

ஆண்: கையும் ஓடலே காலும் ஓடலே
கண்ணம்மா உன் ஆசையினாலே
கையும் ஓடலே காலும் ஓடலே

காத்துக் காத்து கவலையாகுது
காதல் பாணம் எகிறி பாயுது
கழனியில் உன் பிம்பம் காணுது
கண்ணாட்டி என்னாளும் காணாட்டி போனா
கையும் ஓடலே காலும் ஓடலே
—கண்ணம்மா உன்

பெண்: கண்ணும் உறங்கலே கஞ்சியும் இறங்கலே
காதலுன்னா எனக்கும் புரியலே
மண்ணை நம்பும் மரத்தைப் போலே
மாட்டை நம்பும் வண்டியைப் போலே
உன்னை நம்பி வந்தேனாலே
என் ஆசை மச்சானே உன்னாலே நானும்
கண்ணும் உறங்கலே கஞ்சியும் இறங்கலே

ஆண்: கில்லாடி மயன் கில்லாடி நானே - உன்
திருக்கு வேலையை புரிஞ்சுகிட்டேனே
கைவளையல் உடைந்ததென்ன
காரணம் சொல்லு
பெண்: எல்லாம் தெரிஞ்ச மச்சானே - நீ
இப்படி எல்லாம் பேசலாமா
பல்லாவரத்து பஸ்ஸிலே ஏறயிலே - நான்
பல்லாவரத்து...... ஏறயிலே — வளையல்
பட்டுன்னு உடைஞ்சு போச்சுது மச்சானே
இப்படியே சந்தேகப்பட்டா
எப்படி போறது
ஆண்: கண்ணுக்கு அழகான சாந்து பொட்டு
கலைஞ்சதென்ன காரணமோ
பெண்: கண்ணை மூடிகிட்டு தூங்கையிலே - தலை
காணியால் கலைஞ்சி போச்சுது

ஆண்: சிறு முழஞ்ச தீந்து உனக்கு
சிக்கலா வெண்டி போச்சிது

பெண்: தென்னங்கரு கருவமரத்திலே மாட்டி
இப்படி ஆச்சிது

ஆகும் .. ஐயோ ஆகும் .. அம்மா

பெண்: பெண்ணாக பிறந்ததும் தப்பு — உன்னை
புருஷனா நினைச்சதும் தப்பு — அன்று
கண்ணாலே பார்த்ததும் தப்பு — உன்னை
காதல் செய்ததும் தப்பு
தப்பு... இல்லை... தப்பு... இல்லே

ஆண்: கரையானின் புட்டுக்குள்ளே
கருநாகம் குடியிருக்கும்
காலத்தைப் போலவே — நம்ம
காதலும் மாறுமோ என்று — நான்
சிந்திக்கப் பட்டதும் தப்பு — இதோ
தாலியிலே போட்டுகிறேன் தப்பு.. தப்பு

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : சீர்காழி கோவிந்தராஜன்
திருச்சி லோகநாதன்

கண்களும் கவி பாடுதே - கண்ணே உன்
கண்களும் கவி பாடுதே - உன்னாசையால்
காவியமெல்லாம் இன்ப
காதல் மேவும் நிலையோடு - உன்
கண்களும் கவி பாடுதே

விண்மணி போலே மண் மேலே
இணையாரும்
கண்மணி நீயே பெண்மானே செந்தேனே
காவியமெல்லாம் இன்ப
காதல் மேவும் நிலையோடு - உன்
கண்களும் கவி பாடுதே

கவிகளும் கண் பாடும் ... என்ன ... ஆ
கண்களும் கண்களும் கவி பாடுதே
கண்ணே உன் கண்களும் கவி பாடுதே

oooo oooo oooo oooo
oooo oooo oooo oooo oooo oooo
oooo oooo oooo oooo

கலகலவென கங்கண சதங்கை
குலுகுலுவென சேர்ந்து குலுங்க
காவியமே உயிர் ஓவியமே
கருணை அமுத மழையும் பொழிய
வரமருள் ஜீவிதமே - என் ஜீவிதமே !

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : பி. ~~லீலா~~ சுசீலா

பிரேமையின் ஜோதியினால்
பேரின்பம் எங்கும் பொங்கும்
இவ்வையம் விண்ணில் தங்கும்
மெய்யன்பினால்
பேதம் எல்லாம் அழியும்
இப்புவிமேல் அன்பு மழை பொழியும்
— பிரேமையின்

பாரில் பிரேமை ஒன்றில்லையானால்
நிலவாகுமோ ... பாரில் பிரேமை ....
ஜீவன் வாழ்ந்திடுமோ மெய்யன்பினால்
~~பேதம் எல்லாம் அழியும்~~ துன்பம் மறைந்தொழியும்
இப்புவிமேல் ~~அன்பு~~ இன்ப மழை பொழியும்
— பிரேமையின்

மனத்தாலே நினைத்தாலும்
இனிப்பாகும் எண்ணம்
மாறாது வளர் காதல்
கொண்டாலே திண்ணம் .. ஓ...
ஆணும் பெண்ணும்
அன்பாலே இணைந்தால்
அமர வாழ்வல்லவோ—அதன்
அருமைதன்னை சொல்லவோ— மெய்யன்பினால்
ஜாதி ~~[illegible]~~ மறைந்தொழியும்
இப்புவிமேல் அன்பு மழை பொழியும்
— பிரேமையின்

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : டி. எல். ராகவன் - குழுவினர்

சத்தான் நிறைந்த சங்கமிது
காரியம் கைகூடும் சங்கமிது
கெடுபிடி உலகத்தில்
திடுதிடு கலகத்தில்
ஜமாய்க்கணும் பாய்க்கணும்
— சத்தான்

பாரில் வெள்ளி முகமது போல்
படையும் திரட்டிட வேணுமடா
பச்சை அந்தி போல் மாறாமலே பல
கட்சி கட்சி என்று சேராமலே
பட்டினியை போக்கணும்
பஞ்சத்தையே நீக்கணும்
பாட்டாளி மக்களோடு
கூட்டாளி ஆகணும் ... ஜமாய்க்கணும் ....
— சத்தான் நிறைந்த

பஞ்சணை தூக்கத்தை மறந்திடணும்
பலகையில் தூங்கிட பழகிடணும்
நிழலிலே படுத்து வாடாமலே - உன்
நெஞ்சிலே உறைந்து விடாமலே
சத்தியத்தை காக்கணும்
அசத்தியத்தை போக்கணும்
கத்தி முனைக்கு அஞ்சாமல்
சக்தி சக்தி பாயணும் - ஜமாய்க்கணும் ...
— சத்தான் நிறைந்த

துப்பாக்கி வயலிலே விளங்கியா
துணிந்தே பிறந்த தோழர்களே
அப்பாவி உலகத்தை திருத்திடுவோம்
அது உனைப் பட்டாலும் பொறுத்திடுவோம்
கத்தி கத்தி பேசணும்
புத்திமதி சொல்லணும்
ஒற்றுமையைக் காட்டி நம்ம
வெற்றிக் கொடி நாட்டணும்
— சத்தான் நிறைந்த

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : பி. சுசீலா

மன்னா வா வா வா மகிழ வா
மனம் போல் ஆவல் தீர வா வா
உன்னையல்லால் உலகத்திலே
கண்ணாளன் யாரும் இல்லை வா வா வா

—மன்னா வா வா

தேகமே என்றும் சந்தேகமாகுமே
யோகமே செய்தால் உன் தாபம் தீருமே
வானவில்லா வாலிபமே
வாராயோ வண்ண ஜாலம் பாராயோ

—மன்னா வா வா

மாதுடன் மதுவும் உன் மனதை மாற்றுமே
காதலின் பிம்பம் உன் கண்ணில் ஆடுமே
காவலனே வாழ்வினிலே
காணாத இன்பம் காண வாராயோ

—மன்னா வா வா

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : P. சுசீலா

மலர்க் கொடி நானே
மகிழ்ந்திடுவேனே
கிளிக் குயில் போலே - இன்ப
கானம் பாடுவேனே

— மலர்க் கொடி நானே

இயல் இசை கனிந்திடும்
இலக்கிய சோலை ... ஓ...
எழிலுடன் காணுதே
ஏன் இந்த வேளை
மனம் ஊஞ்சலாடும் இளை மாரா - துள்ளும்
மானைத் தேடியே வாராய்
கிளிக் குயில் போலே - இன்ப
கானம் பாடுவேனே

— மலர்க் கொடி நானே

ஸ்ருதிலயம் ஜதியுடன் ஆடும் கலாபம்
சிந்திடும் நேசமே இணைந்து பாவம்
அசைந்தாடும் தென்றல் அலை மேலே
அனுராக யோக நிலையாலே
கிளிக் குயில் போல - இன்ப
கானம் பாடுவேனே

— மலர்க் கொடி நானே

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதிநாராயணராவ்
பாடியவர்கள் : P. சுசீலா குழுவினர்

கன்னித் தமிழ் மணம் வீசுதடி
காவியத் தென்றலுடன் பேசுதடி
— கன்னித் தமிழ்

காவிலே பூவிலே
காணும் இன்பம் பாராய்
வாழ்விலே கொஞ்சிடும்
வண்ணவளம் நேராய் - ஓ....
அலை மோதுதே நிலை மாறுதே
ஆனந்த சோலை இதுவே
— கன்னித் தமிழ்

சோலைக் குயில் மாலையிலே
இன்னிசையும் பாட
இளமயில் ஆவலுடன்
தோகை விரித்தாட - ஓ...
புள்ளி மானும் அங்கும் இங்கும்
துள்ளித் துள்ளி ஓட
பொங்கிடும் கதிரவன்
தங்கத் தகடாய் புவானம் போல் சூட
அலை மோதுதே நிலை மாறுதே
ஆனந்த சோலை இதுவே.
— கன்னித் தமிழ்

வட்டம் போடும் ~~[illegible]~~ சிட்டுகளாய்
வானகத்தில் நாமே
பட்டம் போல வேகமாய்
பறந்து செல்லுவோமே .. ஓ...
இஷ்டம் போல் உல்லாசமாய்
ஓடி ஆடுவோமே
இன்னல் தீர நாமே
இன்ப கானம் பாடுவோமே
அலை மோதுதே நிலை மாறுதே
ஆனந்த சோலை இதுவே
— கன்னித் தமிழ்

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயண ராவ்
பாடியவர்கள் : P. சுசீலா, P.B. ஸ்ரீனிவாஸ்
S. ஜானகி

பெண்: எனக்காகவே நீயே ராஜா
உனக்காக நானே ராஜா
இகபரத்திலே மனம் போலவே
சுகம் காணுவோம்
— எனக்காக நீயே ராஜா

ஆண்: பெண்ணே நீயோ
அசல் கண்டி ஜோடி அன்றோ
பெண்: பெண் பாவமே பொல்லாதது
பிடிவாதம் செய்வதும் நன்றோ - நானும்
காதல் தேவி அன்றோ
ஆண்: நெருங்காதே நினைக்காதே
ஜப்பானில் ஜதையும் தேடுவேனே

ஜப்: வரியோ வரியோ ராஜா
ஆண்: சரியோ சரியோ ரோஜா
ஜப்: போகிறியோ சாகிறியோ
பொம்பளே நம்ம ஜெயிக்கிறியோ .. நீ
தெரியாத மாப்பிள்ளை மண்ணாடி வம்பனையோ
ஆண்: ஜப்பானின் பைங்கிளியோ
ஜாலியா பேசுறியோ
ஜப்: டீக்காடிக்குது பாராய் - என்
பக்கமே நீ வாராய்
ஆண்: சொக்குறேனே ஜோராய் - என்
சுந்தரியே வாராய்
இரு: நம் போல நடந்திடணும்
நாட்டிலே கலப்பு கல்யாணம்

பெண்: கல்யாணமா - உங்கள்
கனவு பலிக்காதய்யா
காதல் நிலைக்காதய்யா
காரணமின்றி என்னை மறந்து
சரியாகுமா - நீ
கப்பல் கடந்து ஜப்பான் வந்தது
முறையாகுமா - உனக்கு
கல்யாணமா

ஜப் : போடி சரி போடி
தென்னிந்தியாவின் வம்பாடி
ஆடிப் பாடி டப்பா போலே
துள்ளாதேடி - ஜம்பம்
செல்லாதடி

பெண் : ஆட்டியக் கேற்றது தென்னாடு
அசைக்க முடியாது உன்னாலே

ஜப் : எந்நாடு ?

பெண் : நீங்கள் பொன்னாடு
செந்தமிழ்ச் செல்வம்
கொஞ்சி விளையாடும்
தென்னாடு.

---

படம் : அடுத்த வீட்டுப் பெண்
இசை : ஆதி நாராயணராவ்
பாடியவர்கள் : P. B. ஸ்ரீனிவாஸ்

கண்ணாலே பேசி பேசிக் கொல்லாதே
காதாலே கேட்டு கேட்டுச் செல்லாதே
காதல் தெய்வீக ராணி போதை உண்டாகுதே நீ
கண்ணே என் மனதை விட்டு துள்ளாதே

— கண்ணாலே பேசி பேசிக்

பாசம் மீறி ஜீத்ர தாளம் போடுதே - உன்
பக்தன் உள்ளம் நித்தம் ஏங்கி வாடுதே
ஆசை வெட்கம் அறியாமல் ஓடுதே - என்
அன்னமே உன் மின்னல் ஜாடை ஆடுதே

— காதல் தெய்வீக ராணி......

பதுமைபோல காணும் உந்தன் அழகிலே - நான்
பட்டு போல தத்தளிக்கும் நிலையிலே
மதுவை ஏந்தி கொந்தளிக்கும் மலரிலே - என்
மதிமயங்கி வீழ்ந்தேன் உன் வலையிலே

— காதல் தெய்வீக ராணி......

படம்: அடுத்த வீட்டுப் பெண்
இசை: ஆதி நாராயண ராவ்
பாடியவர்கள்: P. B. ஸ்ரீனிவாஸ்

மாலையில் மலர் சோலையில்
மதுவேந்தும் மலரும் நீயே
மனம் கனியாத இன்னும் புரியாத
மன்றாடும் தென்றல் நானே

—மாலையில் மலர் சோலையில்

வேதாந்தமே விஞ்ஞானமே
விளங்கி முடியாத ரகசியமே - காதல் ரகசியமே
வாழ்விலே காணவே
வாராயோ செல்வமே

—மாலையில் மலர் சோலையில்

இணையாகுமோ எனை நாடுமோ
எழிற் கனவே நினைவாகுமோ.
எண்ணம் நிறைவேறுமா
இன்னுமேன் அன்னமே
என் வாழ்வின் இன்பமே

—மாலையில் மலர் சோலையில்